Dr. லில்லியன் ஸ்டான்லி

முன்னேறும் கிறிஸ்தவன்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

முன்னேறும் கிறிஸ்தவன்

Dr. Mrs. லில்லியன் ஸ்டான்லி, M.B.B.S., D.C.H.,
நிறுவனர்
ஆசீர்வாத இளைஞர் இயக்கம்

வெளியீடு
ஆசீர்வாத இளைஞர் இயக்கம்
அஞ்சல் பெ. 606, வேலூர் 632 006
தொலைபேசி : 0416-2242943, 2248943
[illegible]@sancharnet.in
www.BlessingYouthMission.org

BETTER CHRISTIAN (TAMIL)

by

Dr. Mrs. LILIAN STANLEY, M.B.B.S., D.C.H.,

First Edition : December 1999

Printed at bapuji printers, Chennai - 600 002 Phone : 8549833

துவக்கவுரை

சில ஆண்டுகளுக்கு முன்பு நாங்கள் குடியிருந்த சித்தேரி மலை மிஷனரிப் பணிக்கள வீட்டு முற்றத்தில் உட்கார்ந்துகொண்டு ஒரு கரும் பெரும் எட்டுக்கால் பூச்சி தன் கவர்ச்சிகரமான வலையைப் பின்னிவிட்டு இரவு விருந்திற்குக் காத்திருப்பதைக் கவனித்துக்கொண்டிருந்தேன். மாலை மயங்கும் வேளையில் மின்மினிப் பூச்சிகள் ஜொலிக்கத் துவங்கின. ஒரு மின்மினி வலையில் சிக்கியவுடன் என்னை அறியாமலேயே குதித்தெழுந்து ஓடினேன். துடிக்கும் அந்தச் சின்னஞ்சிறு உயிரைக் கண்ட என் உள்ளத்தில் பரிதாபம் பொங்கியது. மெல்லவே வலையிலிருந்து அவ்வொளியைப் பிரித்தெடுத்தேன். வலை என் விரல்களிலும் பூச்சியிலும் ஒட்டிக் கொண்ட தோடல்லாமல் நஞ்சாகவும் இருக்குமோ என்றெண்ணியபோது துக்கம் என்னை மேற்கொண்டது. அச்சின்னஞ்சிறு விளக்கு பறந்து தன் சகாக் களோடு உல்லாசமாய் இணைந்துகொள்ளும்படி அதைச் சுவற்றின் மேல் வைத்தேன். அந்தோ பரிதாபம்! குற்றுயிராய் அது கால்களை அசைத்துக் கொண்டு நிமிடத்திற்கு நிமிடம் ஒளி மங்கிக்கொண்டிருந்தது.

கிறிஸ்தவர் பலர் இன்று இதே நிலையில் இருப்பது எத்தனை சோகம்! உலகின் வலைகளில் சிக்கி தம் ஆன்மீக வாழ்வை நாசமாக்கிக்கொள் கின்றனர். ஞானமின்றி தம் நாவைப் பயன்படுத்துவதாலும், கோபத்தினாலும், தவறி விழுந்தபின் துள்ளி எழாமையினாலும், கடவுளுடைய வார்த்தைக்குச் செவிடராயும் குருடராயும் இருப்பதாலும், உலக மேன்மையைத் தேடிச்சென்று தங்கள் தெய்வீக அழைப்பைத் தியாகம் செய்வதினாலும், புனித வாய்ப்பு களை நழுவவிடுவதினாலும், தம் உடலைப் பராமரிக்காமல் விடுவதாலும் தம்மையே கெடுத்துக்கொள்கின்றனர்.

ஆனால் நண்பரே, உற்சாகங் கொள்வீர்! கிறிஸ்துவின் ஞானம் உங்களை வலைகளுக்குத் தப்புவிக்க வல்லது; அவரது இரத்தம் உங்களைத் தீயவனின் நஞ்சினின்று கழுவ வல்லது. இப்புத்தகம் உங்களை எச்சரிப்ப தோடல்லாமல் உங்களைக் கரம் பிடித்து வலைகளினின்று அப்புறம் நடத்திச் சென்று உங்களை **முன்னேறும் கிறிஸ்தவனாக** மாற்றும் சவுக்காரத்தையும் காட்டித் தரும்.

பொருளடக்கம்

1.	கிறிஸ்தவப் பாதையில் வெடிகுண்டுகள்	...	5
2.	நாவை அடக்குங்கள்!	...	12
3.	கொல்லும் கொடிய கோபம்	...	18
4.	தவறுகளைத் தவறாகப் புரிந்து கொள்ளாதீர்!	...	25
5.	கர்த்தருக்குப் பலி செலுத்துவோம் வாருங்கள்!	...	32
6.	காது கேட்கிறதா?	...	40
7.	கடனென்னும் கடலில்...	...	49
8.	உயர்வுக்கு இறங்கவா?	...	55
9.	தவறவிட்ட தருணங்கள்	...	64
10.	மெலிவோம் இவ்வாண்டு!	...	72
11.	காட்டிற்குள் சிகிச்சை	...	80
12.	ஏழைகளை நேசிக்க 50 வழிகள்	...	87

கிறிஸ்தவப் பாதையில் வெடிகுண்டுகள்!

யுத்தக்களமான நாட்டில் மக்களைக் கொல்லவும் காயப்படுத்தவும் எதிரிகள் தரைக்கடியில் வெடிகுண்டுகளைப் புதைத்து வைப்பர். இறையரசின் குடிமக்களுக்கும் கிறிஸ்தவ ஓட்டப் பாதையெல்லாம் கண்ணிகள் நிறைந்ததே. நாம் மிக எச்சரிக்கையாயிராவிடில் பிசாசு பதித்து வைத்திருக்கும் பொறியில் காலைவிட்டு நமது வாழ்வையே நாசமாக்கி விடுவோம் (1 தீமோ 3:7). கண்ணி என்பது கண்ணுக்கு மறைவானது (நீதி 1:17). எனவே மாட்டிக்கொள்ளும்வரை ஆபத்தை அறியோம். இக் கண்ணிகளைக் குறித்துச் சற்று அறிந்துகொள்வோமானால் அவற்றிற்கு விலகிச் செல்வது சாத்தியமாகும் (நீதி 22:5) பொறியில் சிக்கிய எலிபோல் பதைக்கும் கிறிஸ்தவருக்குக் கணக்கேயில்லை.

1. சிலை வணக்கம்

விக்கிரக ஆராதனையின் வாசனையே நம்மிடம் காணப்படக்கூடாது என்கிறார் கடவுள். "அவர்கள் தேவர்களை நீ சேவியாமல் இருப்பாயாக; அது உனக்குக் கண்ணியாயிருக்கும்" (உபா 7:16). நம்மைக் கண்ணிகள் சூழ்ந்திருக்க அவற்றிற்குத் தப்பமுடியுமா? நாம் பிரச்னைகளில் சிக்கித் தவிக்கும்போது கிறிஸ்தவரல்லாதோரைப் பார்த்தால் அவர்கள் ஒருவேளை சரியோ என்று எண்ணத் தோன்றும். சிறுபிள்ளையொன்று சுகவீனமா யிருந்ததோர் கிறிஸ்தவ வீட்டைச் சந்திக்கச் சென்றேன். "எதிர்த்த வீட்டுக் காரி கண்போட்டுவிட்டாள். நேற்று அவள் என் பிள்ளையை கண்கொட்டா மல் பார்த்தபோதே நினைத்தேன்" என்றாள் அந்தத் தாய். இவ்வித மூட நம்பிக்கைகள் சுலபமாய் இறைமக்களைச் சிறைபிடிக்கின்றன. கொஞ்சம் அசந்தால் அஞ்ஞானிகளின் நம்பிக்கைகள் நம்மிலும் வேரூன்றி பிடுங்கவும் கூடாததாய்ப் போய்விடும்.

திருமண விவகாரத்தில் புறவினத்தாருடன் கலக்கும்போது அவர்களே நமக்குக் கண்ணியாகவும், வலையாகவும், விலாக்களுக்குச் சவுக்காகவும்,

கண்களுக்கு முள்ளுகளுமாவார்களென்று கர்த்தர் சொல்லுகிறார் (யோசு 23:12,13; நியா 2:3). அவர்களை விட்டு நாம் ஓடிவிடமுடியாது. நாம் அவர்களோடு நட்புகொண்டு ஆண்டவரது ஆச்சரியமான ஒளிக்குள் கொண்டுவரவேண்டும்தான். ஆனால் அவர்களோடு நெருங்கிய ஐக்கியம் கொள்வது ஆபத்து. நம்மிடம் விக்கிரகங்கள், தாயத்துகள் போன்ற ஏதாவது இருந்தால் அவற்றைத் தூக்கியெறியவேண்டும் (உபா 7:25,26). புறவினத் தாரின் வழிபாட்டு முறைகளை உயிருள்ள தேவனை வழிபடப் பயன்படுத்தக் கூடாது (உபா 12:30-32). "ஏபோத்து" என்பது கிறிஸ்தவக் காரியமாகக் காணப்பட்டாலும், கிதியோன் அதைச் செய்து பொதுப் பார்வைக்காக வைத்தபோது மக்கள் அதை வழிபட்டுச் சோரம்போனார்கள். கிதியோன் வீட்டாருக்கு அது கண்ணியாயிற்று (நியா 8:27). விழிப்பாயிருப்போம். ராகுகாலத்தில் தேர்வுக் கட்டணம் கட்டுதலைத் தவிர்த்தல், கெட்ட சகுனம் என நினைத்தல், தனி அண்டங்காக்கையைக் கண்டோ, ஆந்தையின் சத்தம் கேட்டோ தீது வருமென மிரளுதல், விதவைகளைக் குறித்த மூட நம்பிக் கைகள் யாவும் அஞ்ஞானப் பழக்கங்களே. "இந்த ஜனங்கள் கட்டுப்பாடு என்று சொல்லுகிறதையெல்லாம் நீங்கள் கட்டுப்பாடு என்று சொல்லாமலும், அவர்கள் பயப்படுகிற பயத்தின்படி நீங்கள் பயப்படாமலும் கலங்காமலும், சேனைகளின் கர்த்தரையே பரிசுத்தம் பண்ணுங்கள்; அவரே உங்கள் பயமும், அவரே உங்கள் அச்சமுமாயிருப்பாராக" என்கிறார் கடவுள் (ஏசா 8:12,13). வீட்டைக் கட்டி, கரும்புள்ளி செம்புள்ளி குத்தின பூசணிக்காயையோ கறுப்புக் கயிறுகட்டிய கல்லையோ தொங்கவிடுவதும் இப்படிப்பட்ட பயமன்றோ? இக்கண்ணிக்குத் தப்பிக்கொள்ள, ரெகொபெயாமைப்போல கர்த்தரை நமக்குப் பின்னே தள்ளிவிடாமல் (1 இரா 14:9), தாவீதைப்போல அவரை எப்பொழுதும் நமக்கு முன் வைத்திருக்க வேண்டும் (சங் 16:8).

2. வாக்குறுதிகள்

வாக்குக் கொடுப்பதினால் வரக்கூடிய சிக்கல்களைச் சற்றும் சிந்தியாமல் சட்டென்று வாக்குறுதியளிப்பதினால் பிடிபடுகிறோம் (நீதி 6:1-5; 22:26,27). வாக்களித்துவிட்டுப் பின்வாங்குவதை வேதம் பாவம் என்கிறது. அன்னாரை உடன்படிக்கையை மீறுகிறவர்கள், துரோகிகள் என வேதம் பழித்துக் கூறு கிறது (ரோ 1:31; 2 தீமோ 3:4). கிபியோனியருடைய வஞ்சனையினால் ஏமாந்துபோய் யோசுவா அவர்களோடே உடன்படிக்கை செய்தாலும் கொடுத்த வாக்கின்படியே அவர்களைக் காத்தான். சவுலோ இஸ்ரவேலுக்காக வைராக் கியங்கொண்டு அவர்களை அழித்தபடியால் கர்த்தர் பஞ்சத்தை அனுப் பினார் (2 சாமு 21:1,2). வாக்குறுதிகளை தேவன் விளையாட்டாக எண்ணு கிறவரல்ல.

தலை போகிற அவசரம் இல்லாவிடில், சிறிதோ பெரிதோ யாருக்கும் வாக்குறுதி அளிக்குமுன் சிலகாலம் சிந்தித்தே சொல்லலாம். வேறொருவரது ஆலோசனையும் அவசியமானால் கேட்கலாம். கணவர் மனைவியர் பெரும்

வாக்களிக்குமுன் ஒருவரையொருவர் கலந்தாலோசிப்பது அவசியம். நமது பிள்ளைகளிடமும் ஏதாவது உறுதியளிக்குமுன், 'ஜெபித்துச் சொல்லு கிறேன்' எனக் கூறலாம். உறுதியளிக்குமுன் செல்லும் செலவைக் கணக்கிட வேண்டும். வாக்களித்தபின் வாடுவதில் பயனென்ன? ஆணையிட்டபின் மனம் மாறுபவன் உத்தமனல்ல என்று வேதம் தீர்ப்புக் கூறுகிறது (சங் 15:4). அவசரத்தில் வாக்குக் கொடுத்து நம்மை முட்டாளாக்கிக்கொள்ளக் கூடாது (நீதி 17:18). இப்படித்தான் அவசரக் குடுக்கைகளாகிப் பின்னர் அங்கலாய்க்கிறோம். சற்றுப் பொறுத்து, பதட்டமின்றி அதின் நன்மை தீமைகளைத் தீர யோசித்துத் தீர்மானிக்க வேண்டும். எடுத்துக்காட்டாக: ஒரு வாரம் உதவி செய்து பின்னர் கூடுமானால், தேவையானால், தொடர லாம். அல்லது சிறு தொகை உதவியளித்து பின்பு கூடுமானால் கூட்டலாம். நிச்சயதார்த்தம் என்பது உடன்படிக்கையல்ல; திருமணமோ ஓர் உடன் படிக்கை. எனவே உடன்படிக்கையின் அர்ப்பணிப்போடு மனவாழ்விற்குள் நுழைவது அவசியம்.

கையடித்துக் கொடுத்தபின் நம்மால் அதை நிறைவேற்ற முடியாத நிலையானால் தப்பிக்க ஒரே வழி உண்டு. அந்த நண்பனிடம் சென்று பணிவுடன் நமது இயலாமையைக் கூறி விடுதலை கோர வேண்டும் (நீதி 6:1-5). எனவேதான் ஞானமாய்ப் பேசும் கிருபைக்காகத் தினமும் ஜெபிக்க வேண்டும் (நீதி 18:7). "பொருத்தனை செய்தபின் யோசிக்கிறது மனித னுக்குக் கண்ணியாயிருக்கும்" (நீதி 20:25).

3. மனித பயம்

"மனிதனுக்குப் பயப்படும் பயம் கண்ணியை வருவிக்கும்; கர்த்தரை நம்புகிறவனோ உயர்ந்த அடைக்கலத்திலே வைக்கப்படுவான்" (நீதி 29:25). நம்மைத் தைரியப்படுத்தும்படி கடவுள் தமது வார்த்தையில் அடிக்கடி, "அவர்களுக்குப் பயப்படாதிருங்கள்" என்று எழுதி வைத்திருக்கிறார் (ஏசா 51:7). பிரதான ஆசாரியரும் மூப்பரும் மக்களுக்குப் பயந்ததினாலே தேவ னது பல ஆசிகளை அடையாமற் போனர் (லூக் 22:2; 20:19). நாம் தேவன் மேல் வைத்துள்ள நம்பிக்கை, நம்மைப் பயமுறுத்தும் சக்திகளுக்கு அப்பாற்பட்டிருக்க வேண்டும்.

மனிதருக்குப் பயப்படும் பயம் எப்படிக் கண்ணியாகும்? பிறர் என்ன நினைப்பார்கள் என்ற நினைவு கர்த்தர் என்ன நினைப்பார் என்ற நினைவை ஓரங்கட்டிவிடுகிறது. அப்பொழுது நமது கவனமெல்லாம் கடவுள் என்ன நினைப்பார் என்பதைத் துறந்து மற்றவர் என்ன நினைப்பர் என்பதைத் துரத்தத் துவங்குகிறது. பிறரது ராகத்திற்கேற்ப நடன்மாட எத்தனிப்பதால் வழி விலகுகிறோம். ஒரு சாதக எடுத்துக்காட்டு: இயேசு பேதுருவிடம்,

“பயப்படாதே, இதுமுதல் நீ மனிதரைப் பிடிக்கிறவனாயிருப்பாய்” என்றார் (லூக் 5:10). எனவே அவன் பயங்கர சூழல்களையும் சமாளித்து இயேசுவின் நாமத்தைக் குறித்து எவ்வளவும் பேசவும் போதிக்கவும் கூடாதென்ற அதிகாரிகளின் கட்டளைக்கு அடிபணிய மறுத்தான் (அப் 4:19). அவன் சீமோனோ (நாணல்)? இல்லை, பேதுரு (பாறை)! அவன் ஆத்தும ஆதாய வீரனாயிருந்ததில் வியப்பொன்றுமில்லையே. பலர் இக்கண்ணியை மிதிக்கப்போய் பயத்தினால் செயலிழந்து கனியற்றுப் போயினர். மனித பயத்தினால் நமது சிந்தை ஆட்கொள்ளப்படுமானால் நமது வாழ்வின் பல பகுதிகளில் உச்சநிலையை நாம் அடைவதேயில்லை. மாறாக, பயம் நம்மைக் கவ்வும் போது நம்மைப் பின்னின்று தாங்கும் மாபெரும் சக்தியை நினைவிற் கொள்ளவேண்டும். சிங்க நெஞ்சம் நமக்கு வேண்டும். தைரியமற்ற தீர்மானம் காகிதப் படகு. அது நம்மை எங்கும் கொண்டு செல்லாது.

4. பண ஆசை

பணக்காரராகப் பேராசைப்படுகிறவர்கள் படுகுழியில் விழுகிறார்கள் (1 தீமோ 6:9). தேவனது சித்தத்தைச் செய்வது தனவந்தரைத் தம் சம்பத்தைவிட்டு தூரக் கொண்டு செல்லும். ஆகவே தேவ சித்தம் செய்வது அன்னாருக்குக் கடினமாகிறது. பணக்காரராக விரும்பாதவர் யார்? ஆனால் பணம் பணம் என்றே நம் இதயம் பதறிக்கொண்டிருக்கிறதா? வருமானத்தை வர்த்திக்கப்பண்ணுவதே நமது இராப்பகல் பிரயாசமா எனச் சிந்தித்துச் சரிசெய்வது அவசியம். செல்வத்தைச் சேர்ப்பதே நமது வாழ்வின் குறிக்கோளானால் நமது சிந்தனை, செயல்திட்டம், ஈடுபாடு யாவுமே திசை திரும்பும். ஆராதிப்போம், ஐக்கியங் கொள்வோம், வேலை செய்வோம், ஊழியமும் செய்வோம்—ஆனால் நமது வாழ்க்கைக்குத் தேவன் வைத்துள்ள அவரது மனப்பூர்வ சித்தத்தையோ இழந்து விடுவோம். தேவ சத்தம் மந்தமாகிவிடும். எனவே மனிதரைக் குழியில் தள்ளும் தீமை விளைவிக்கக் கூடிய பல்வேறு தீய நாட்டங்களில் வீழ்ந்துவிடுவோம். பேராசையினால் நாம் அதையும் இதையும் கைப்பற்ற அங்கும் இங்கும் ஓடுவதால் விசுவாசப் பாதையை விட்டு விலகிச் செல்ல நேரிடும். இறுதியாக, கொடூரப் பற்களுள்ள பொறியில் சிக்கிக் காயப்பட்டு வேதனையுறுவோம். இவற்றை விட்டே ஓட வேண்டுமாம் (1 தீமோ 6:11). “இலைக்கறியே நல்லது” (நீதி 15:17). “கொஞ்ச வருமானமே உத்தமம்” (நீதி 16:8). “சிறுமையானவர்களோடே மனத்தாழ்மையாயிருப்பது நலம்” (நீதி 16:19). “வெறும் துணிக்கையே நலம்” (நீதி 17:1). இவ்வசனங்கள் கற்பிப்பது என்ன? சராசரி அல்லது அதற்கும் குறைவான வாழ்க்கைத் தரமே நல்லது (லூக் 6:20,21). பணக்காரருக்குச் செல்வத்தின் பாரம் கழுத்துக்குச் சுறுக்கு. டாம்பீகத்தை வெறுத்து எளிமையாய் வாழுங்கள். வரவுக்குள் செலவு செய்யுங்கள். பணச்

செழிப்பில் வாழ்பவரைக் கண்டு வாயூறாதீர்கள். அவர்கள் வர்ணந்தீர்த்த முட்டை ஓடுகள்; தங்கள் செல்வத்தினாலேயே சாகும் பட்டுப்பூச்சிகள். ஏழ்மையானது, அழிப்பதைக் காட்டிலும் ஆயிர மடங்கு மக்களை ஆக்கு கிறது என்பது உண்மையே.

5. முகத்துதி

"பிறனை முகத்துதி செய்கிறவன் அவன் கால்களுக்கு வலையை விரிக்கிறான்" (நீதி 29:5). உள்ளங்கனிந்த பாராட்டுக்கும் முகத்துதிக்கும் வேறுபாடு உண்டு. புகழை விரும்புகிறவனோ வேறுபாட்டைக் கண்டறிய முடியாதவனாய் வலையில் விழுகிறான். முகத்துதி வலையாவது எங்ஙனம்? அது நமது சுயபெருமையைத் தூண்டிவிடுவதினாலேயே. பெருமையின் முடிவை நாம் அறிவோமே. இதற்குத் தப்ப ஒரே வழி தேவனுக்கு மகிமையைச் செலுத்தக் கற்றுக்கொள்வதே. நாம் அடைமொழி விரும்பிகள் எனப் பிறர் அறிய நேர்ந்தால் நமக்கு அடைமொழி மாலை சூடிவிடுவர்.

சில ஆண்டுகளுக்குமுன் 50 ரூபாய்க்கு டாக்டர் பட்டம் வாங்க முடிந்தது. இப்போது இன்னும் மலிவாகி விட்டது. மூன்று புகைப்படங்கள் அனுப்பினால் போதும். அதற்கும் க்யூ நிற்கிறது! தேவனது பாதத்தூசியில் நமது மகுடங்களைச் சமர்ப்பிக்க வேண்டிய நாம் புழுதியிலிருந்து கிரீடங்களைப் பொறுக்கி வைத்துக்கொள்ளுகிறோமே. அவர் பெருகவும் நாம் சிறுகவும் வேண்டிய காலத்தில் நாம் பெருகி அவரை ஓரத்திற்குத் தள்ளுகிறோமே. யோவான் ஸ்நானனோ பவுலோ இதுபோன்ற டாக்டர் பட்டங்கள் பெற அழைப்புப் பெற்றிருந்தால் என்ன செய்திருப்பர்? ஐயோ, கிறிஸ்தவமே என்று கண்ணீர் சிந்தியிருப்பார்கள். "நான் இச்சகம் பேச அறியேன்" என்கிறான் யோபு (யோபு 32:22). பட்டங்களுக்காக ஏங்காதீர்கள். இச்சகம் பேசுகிறவர்களின் வாயில் உண்மை இல்லை. உங்களைக் குறித்து நீங்கள் எண்ண வேண்டியதற்கு மிஞ்சி உங்களை எண்ணச் செய்கிறார்கள் (சங் 5:9). பவுல் இச்சக வார்த்தைகளினால் சபையாரைக் கோழியைக் கவுத்துவது போல் கவுத்தப் பார்க்கவில்லை (1 தெச 2:5).

மறுபாலரின் முகத்துதி மகா ஆபத்தானது (நீதி 2:17; 6:24; 7:5,21). முகத்துக்கு எதிரே புகழ்மாலை பாடி முதுகிற்குப் பின்னே இகழ்ந்து பேசுவ தாலேயே முகத்துதி கண்ணியாகிறது (நீதி 20:19). உண்மை நண்பரோ உங்களை முகமுகமாய்க் கடிந்துகொள்வர். இச்சகம் பேசுகிறவர்களுக்கும் தங்கள் தேவனை அறிந்தவர்களுக்குமுள்ள வேறுபாட்டைத் தானியேல் 11:32இல் காண்க.

6. காமவிகாரம்

பெண்கள் நற்குணசாலிகளாயிருந்தால் ஆண்களுக்கு இவ்வளவு கேடு வராது. கண்ணிகளும் வலைகளுமாகிய நெஞ்சமும், கயிறுகளுமாகிய கைகளுமுடைய பெண்ணானவள் சாவிலும் அதிக கசப்புள்ளவளென்று சாலொமோன் கண்டுகொண்டு, "தேவனுக்கு முன்பாக சற்குணனாயிருக்கிறவன் அவளுக்குத் தப்புவான்; பாவியோ அவளால் பிடிபடுவான்" என்று சொல்லுகிறான் (பிர 7:26). இவளது வலையில் விழுவதைவிடச் செத்துப் போவதே மேலென்கிறான் ஞானி. அவளது மடியில் விழுந்து செத்து வாழும் கசப்பை அனுபவித்தவன் அவன்; அனுபவத்தால் பேசுகிறான். இந்தச் சாகசக்காரி அருமையான உயிரை வேட்டையாடுகிறாளாம் (நீதி 6:26). எனவேதான் ஒரு மனைவி தன் கணவனை இவ்விதம் எச்சரிக்கிறாள்: "என் நேசரே, தீவிரியும்... வெளிமானுக்கும் மரைகளின் குட்டிக்கும் சமானமாயிரும்" (உன் 8:14). இப்படிப்பட்ட ரம்பைகளுக்கு ஒருவன் எப்படித் தப்பித்துக்கொள்வான்? அவளையே சுற்றிச் சுற்றி வெட்டுக்கிளி போலக் குதித்துக் கொண்டிருப்பதினாலல்ல, வெளிமான்போலக் குதித்தோடிவிடுவதினாலேயே. அம்பு ஈரலைப் பிளக்குமுன் அவளது இச்சகம் பேசும் நாவை விட்டும், சிமிட்டும் கண்ணிமைகளை விட்டும் ஓடித் தப்பித்துக் கொள்ளுங்கள். ஈரல் பழுதடைந்து ஆத்துமாவில் மஞ்சள் காமாலை கொண்டு அல்லலுறுவோர் எண்ணிக்கை கணக்கிலடங்கா. அவர்களில் ஒருவராகிவிடாதீர்.

விபசார மயக்கத்தால் நிறைந்தவைகளும் பாவத்தை விட்டோயாதவைகளுமாயிருக்கிற கண்களையுடையவர்களும், உறுதியில்லாத ஆத்துமாக்களைத் தந்திரமாய்ப் பிடிக்கிறவர்களும், தேவனுடைய கிருபையைக் காமவிகாரத்துக்கேதுவாகப் புரட்டுகிறவர்களுமான ஆண்களை விட்டுப் பெண்களும் ஒதுங்கி வாழவேண்டும் (2 பேது 2:14; யூதா 4). விபச்சாரம் அழியாத பட்டப்பெயரைச் சூட்டிவிடும். விசுவாச வீரரின் புகழ்மண்டபத்திலும் ராகாப் "வேசி" என்ற பட்டப் பெயர் சூடி வருகிறாள் (எபி 11:31). எனவே ஆண்கள் உங்களைச் சுலபமான இரையாகக் காண விடாதீர்கள்.

சுடச்சுட ஓடும் தவறான உறவுகள் சீக்கிரம் குளிர்ந்துபோம். அறிவுக்கு அறிவுரை கூறி சற்று சீராய்ச் சிந்தித்துப் பார்த்தால் இவ்வித அறிவீனக் கண்ணாம்பூச்சி ஆட்டங்கள் உங்கள் நல்ல பெயரையும் நாற்றமடிக்கச் செய்துவிடும் எனப் புரிந்துகொள்வீர்கள். திருட்டு உறவுகள் திருப்தியளிக்காதவை மட்டுமல்ல, உங்கள் துணைவரோடு நீங்கள் ஊட்டி வளர்த்த பல்லாண்டு பசுமையான உறவையும் பொசுக்கிவிடும் வன்மையுள்ளவை.

சிவப்புக் கொடி !

மற்றும் பல கண்ணிகளை வேதம் சிவப்புக் கொடி காட்டி எச்சரிக்கிறது. நாம் வழுக்கி விழுந்துவிடாதபடி கடவுள் நமது பாதையை அகலமாக்கிச் செவ்வைப்படுத்துவதோடல்லாமல், இரட்டிப்பான பாதுகாவலுக்காக நமது கால்களை மான் கால்களைப் போலாக்குகிறார் (2 சாமு 22:33,34,37). அப்படியிருந்தும், கவலையீனத்தினால் நாம் மாட்டிக்கொண்டால், அவரை நோக்கிக் கூப்பிடும்போது வேடனது கண்ணியை அறுத்து நமது கால்களை வலையிலிருந்து விடுவித்து விடுகிறார் (சங் 124:7; 25:15; 31:4). கடவுளது சட்டங்களைப் பார்த்து நடப்பவர்களுக்குக் கிறிஸ்தவப் பாதை பாது காப்பானதுதான். சத்தியத்திற்கு எதிர்பேசுகிறவர்களே பிசாசானவனுடைய இச்சையின்படி செய்ய அவனால் பிடிபட்டு, கண்ணியில் அகப்படுகிறார்கள் (2 தீமோ 2:26).

பார்த்து நடவுங்கள். உன்னதமானவருடைய மறைவிலிருக்கிறவன் சர்வ வல்லவருடைய நிழலில் தங்குவான். அவர் அவனை வேடனுடைய கண்ணிக்குத் தப்புவிப்பார் (சங் 91:1,3).

நாவை அடக்குங்கள்!

நாவின் பாவங்களை எண்ணி முடியாது. நாவைச் சிரத்தையோடு கவனியாது விட்டதினால் தேவனது உயர் பதவிகள் பலரைக் கடந்து போய்விட்டன. நாவின் சில பாவங்களை பொறுக்கி எடுத்து அவற்றை நம் வாழ்விலிருந்து விசிறிவிடத் திட்டமிடுவது நல்லது. அது முன்னேற்றத் திற்கான முதற்படியாயிருக்கலாமே. நாவோடு தொடர்ந்து போர் தொடுப் போம். நாவை அடக்குங்கள்; அவசியமானால் கையால் பிடித்தாகிலும் அடக்குங்கள்!

அரட்டை

தனிப்பட்டவரது வாழ்க்கையின் கிளுகிளுப்பூட்டும் அடிப்படையற்ற வதந்திகளைச் சுவாரஸ்யமாய்ப் பேசுதல் இது. பிறரது அந்தரங்கக் காரியங்களைக் கிண்டலாகப் பேசும் பழக்கமுடைய நபருக்கும் இதே பெயர்தான். பொதுவாக நடப்பது என்னவென்றால், யாரோ சொன்ன இப்படிப்பட்டதொரு காரியத்தை இன்னும் சிலருக்குக் கடத்துகிறோம். பின்புதான் அது ஒருசாராரது கூற்று, அதுவும் தவறான கூற்று என்பதை அறிய வருகிறோம். சிந்தின தண்ணீரைச் சேர்க்க முடியுமா? ஒருவரை குறித்துச் சொன்னது சொன்னதுதானே. இனி எங்கெல்லாம் அது பரவுமோ? புறங்கூறுதலையும் இங்கே சேர்த்துக்கொள்ளலாம். முக்கியமான காரியங் களைச் சம்பந்தப்பட்டவருக்கு அறிவிக்கலாமா? "ஒருவரைக் குறித்து எது ஒன்றையும் வேறொருவருடன் பகிர்ந்துகொள்வது, அந்த நபரது சிக்கலைத் தீர்க்க உதவாத பட்சத்தில் அது அரட்டையே" என்கிறார் சகோதரி மெலடி க்ரீன். "தூற்றிக்கொண்டு திரிகிறவன் இரகசியங்களை வெளிப்படுத்துவான்; ஆதலால் தன் உதடுகளினாலே அலப்புகிறவனோடே கலவாதே" (நீதி 20:19). (நீதி 11:13; 16:28; 20:19; 2 கொரி 12:20).

அரட்டை அடிக்காதீர்கள்; அரட்டைக்குச் செவிமடுக்காதீர்கள்; அரட்டையை வாசிக்காதீர்கள். பிரின்ஸ் சார்லசும் லேடி டயனாவும் மனத் தாங்கலால் பிரிகிறார்கள் என்று அறிவது போதுமானது. கைக்கெட்டியதை யெல்லாம் விழுந்து விழுந்து வாசிக்கவேண்டுமென்கிற அவசியமில்லை.

குறை கூறுதல்

குறை கூறுதல் அல்லது குற்றங்கண்டுபிடித்தல் ஒருவிதத்தில் நியாயந் தீர்ப்பதே. உங்கள் குறைகாணல், பெறுநருக்குச் சுகப்படுத்தும் ஊசியா அல்லது அடிவயிற்றில் உதையா? கட்டியெழுப்பும் ஆலோசனையா அல்லது கூனச்செய்யும் ஏளனமா? முடிந்த அளவு திருத்தமாய்ச் செய்தாலுங்கூட சிலர் ஏதாவது குறை காண தோண்டித்துருவிப் பார்ப்பர். அப்படிப்பட்ட மனப்பான்மையை விட்டொழியுங்கள். உள்ளிருந்து குறைகூறும் குட்டிச் சாத்தானது வாயைக் கட்டிவையுங்கள். பரிசேயர் பாராட்டக்கூடிய பல காரியங்கள் இயேசுவிடம் இருந்தன. இருப்பினும் அவரது புசிப்பு, குடிப்பு, ஊழியம் எதையெடுத்தாலும் இடைவிடாமல் குற்றந்தான் சாட்டினர். குற்றங் கண்டுபிடிக்கும் ஆவியினால் நிறைந்திருக்கும்போது பிறரது இனிமைக்குக் குருடராகிவிடுகிறோம். பலாப்பழத்தின் மேலெல்லாம் சொறி, கரும்பு நேர் கோடல்ல, தேங்காய் உடைக்கக் கடுமையானது; ஆனால் உள்ளேயோ இனிமை. மக்களும் அப்படித்தான். அன்பு பெருகும்போது குற்றங்கள் குறுகும்.

"கர்த்தர் வருமளவும், நீங்கள் காலத்திற்கு முன்னே யாதொன்றைக் குறித்தும் தீர்ப்புச் சொல்லாதிருங்கள்; இருளில் மறைந்திருக்கிறவைகளை அவர் வெளியரங்கமாக்கி, இருதயங்களின் யோசனைகளையும் வெளிப் படுத்துவார்; அப்பொழுது அவனவனுக்குரிய புகழ்ச்சி (அல்லது இகழ்ச்சி) தேவனால் உண்டாகும்" (1 கொரி 4:5; ரோ 14:10-13). தமக்கும் ஒரு யோக்கியதை உண்டு என்று ஒவ்வொரும் தம்மைக் குறித்த ஒரு நல்லெண் ணம் கொண்டிருப்பதவசியம். அந்நல்லெண்ணத்தை உடைத்தெறியாதீர்.

கெட்ட வார்த்தைகள்

"கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்பட வேண்டாம்" (எபே 4:29). ஆவியினால் நிறைந்த விசுவாசிகளுக்குக்கூட கோபம் வந்துவிட்டால் சாக்கடை மடைதிறந்ததுபோல கெட்டவார்த்தைகளைக் கொட்டி வீட்டை நாறச் செய்வது எத்தனை துக்கம். உங்கள் துணைவரோ பிள்ளையோ உங்களிடத்தில் அப்படிப் பேசுவதைச் சகித்துக்கொள்வீர்களா? வாயில் பிறக்கலாகாத தூஷணத்தை விட்டுவிடுங்களென்று பவுல் கொலோ

செயருக்கு ஆலோசனை கூறுகிறான் (கொலோ 3:8). உங்கள் சுக்கான் உங்களைச் செலுத்துவது நரகத்திற்கு நேராகவோ மோட்சத்திற்கு நேராகவோ? (யாக் 3:4). ஆலயத்தில் விறுவிறுப்பாய்த் துதித்து வீட்டில் அருவருப்பாய்ப் பேசலாமா? நமது பிள்ளைகள் தங்கள் புது வீட்டிற்கு அவற்றைச் சுமந்து சென்று தங்கள் துணைவருக்கும் அன்னாரது குடும்பத் திற்கும் அதிர்ச்சியூட்டுவர். ஆகவே நிறுத்துங்கள். மடை திறக்கும் போதெல்லாம் ஒரு தழலைக் கொண்டு வந்து உதட்டில் சூடுபோட உங்கள் துணைவருக்குக் கட்டளை கொடுங்கள். அப்பொழுது இவ்வியாதியிலிருந்து உடனடி விடுதலை கிட்டும். அழகிய உதடுகளுடன் நரகத்திற்குச் செல்வதைவிட கருகிய உதடுகளுடன் பரலோகத்திற்குச் செல்வது நல்லது. "முட்டாள்," "பயித்தியம்," "சனியன்," இப்படிப்பட்ட வார்த்தைகள்கூட சரளமாகப் பயன்படுத்தப்படுகின்றன. கண்டித்து நிறுத்துங்கள்.

வீண்பேச்சு

பயனற்ற, குறிப்பற்ற, நேரத்தை வீணடிக்கும் பேச்சுகள் இவை. யாரையும் பற்றி பேசாமல், புறங்கூறாமல், கெட்ட வார்த்தையின்றியும் ஒருவர் நோக்கமற்று அலப்பிக்கொண்டே இருக்கலாம். குதூகல வேளைகளையும் குடும்ப உல்லாசங்களையும் இது குறிக்காது. பரவச நேரங்கள் வாழ்க்கைக்கு அத்தியாவசியம். ஆனால் கிழவிப்பேச்சு பேசுபவருக்கோ கேட்பவருக்கோ லாபமற்றது.

நாம் சுறுசுறுப்பாயிராவிடில் வெட்டிப்பேச்சுக்கும் தொணதொணப்புக்கும் ஆளாகி (கிறிஸ்தவத்திற்கு) விரோதிகள் நிந்திக்கிறதற்கு இடமளிப்போம் (1 தீமோ 5:13,14). மனிதர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்க வேண்டும் என்றார் இயேசு. ஒரு நாள் வரும். அந்த நாளிலே நமது வார்த்தைகளினாலே நித்திய ஜீவனுக்கோ நித்திய ஆக்கினைக்கோ தீர்க்கப்படுவோம். (மத் 12:36,37).

குத்தலான பேச்சு

மறைமுகமாகவோ, வெளிப்படையாகவோ சிலேடையாகவோ பேசி ஒருவரைக் கோபப்படுத்துதல் அல்லது விசனப்படுத்துதல் இது. பெற்றோர் பிள்ளைகளை மறைமுகமான வார்த்தைகளால் மனமடிவாக்கலாம். பிள்ளைகள் பலவித குத்தலான வார்த்தைகளால் பெற்றோரை மனம்நோகச் செய்யலாம். கணவனும் மனைவியும் ஒருவரையொருவர் குத்திப்பேசிப் புண்படுத்தி மட்டந்தட்டலாம். இது கோபப்பட்டுக் கத்துவதல்ல. தந்திரமாக, வாழைப் பழத்தில் ஊசி ஏத்துவது போல் சுருக்கென்று தைக்கும் வார்த்தைகளை

நாசுக்காகச் சொல்லுவது. மாமியாரும் மருமகளும் ஒருவரையொருவர் நோகச்செய்யப் பயன்படுத்தப்படும் கருவியிது. கூட்டு ஜெபத்தில்கூட இவ்விதமாக ஒருவரையொருவர் ஞானமாய்த் தாக்குபவருமுண்டு. சில வேளைகளில் அக்குத்தல் சொல்லப்பட்டவருக்கேயின்றி வேறு யாருக்கும் புரியாத அளவு அப்பாவித் தோற்றமளிக்கும். விசாரிக்கப் போனால், "ஐயோ, நான் நல்ல தனமாக அல்லவோ சொன்னேன்" என நழுவிவிடுவர். கழுவின மீனிலும் நழுவின மீன்கள் இவர்கள். "கர்த்தர் அவள் கர்ப்பத்தை அடைத்த படியினால், அவளுடைய சக்களத்தி அவள் துக்கப்படும்படியாக அவளை மிகவும் விசனப்படுத்துவாள்" (1 சாமு 1:6). ஒருவரது பலவீனத்திற்காக அவர்களைக் குத்திக் குத்திப் பேசி புண்படுத்திக்கொண்டேயிருக்கிறீர்களா? கர்த்தர் சூழ்நிலைகளைத் தலைகீழாய் மாற்றுகிறவர் என்பதை மறந்து போகாதீர்கள் (1 சாமு 2:4-8).

முறுமுறுப்பு

இந்த முறுமுறுக்கிறவர்கள் இருக்கிறார்களே, இவர்களைத் திருப்திப் படுத்தவே முடியாது. இன்னும் கொஞ்சம், இன்னும் மேன்மையானது இருந்தால் பரவாயில்லையே என்பார்கள். வனாந்தரத்தில் தாகத்தால் சோர்ந்துபோகும்வரை கடவுள் ஏன் இஸ்ரவேலருக்குத் தண்ணீரைத் தர வில்லை? அவர்களது இறுதியிழை வரை அவர்களைக் கடவுள் சோதித்தார் என்றுதான் நினைக்கிறேன். தாகத்தைச் சகித்துக்கொண்டு தேவனை நம்பிச் சென்றுகொண்டேயிருந்திருப்பார்களானால் தேவன் அவர்களைத் தாகத்தால் சாகவிட்டிருப்பார் என்றா நினைக்கிறீர்கள்? அற்புதத்திற்கு மேல் அற்புதம் செய்து தமது வல்லமையை நிரூபித்திருப்பார். இன்னும் கொஞ்சம் நமது வறுமையை, சுகவீனத்தை, நிலைமையை முறுமுறுக்காமல் இழுத்துப்பிடித்துத் தாங்கிக்கொள்ள முடியுமா? நமது பொறுமை கடலினும் பெரிதாயிருப்பதாக. "எல்லாவற்றிலும்" தேவனுக்கு ஸ்தோத்திரம் செய் யுங்கள் (1 கொரி 10:10; யூதா 16).

இயேசுவின் சீடர்களில் அனேகர் அவரது உபதேசத்தைக் குறித்து முறுமுறுத்துப் பின்வாங்கிப் போனார்கள் (யோ 6:61,66). எத்தனை பெரிய இழப்பு அவர்களுக்கு! கிறிஸ்தவப் பெருஞ்சாலையில் வழியெல்லாம் பல உப்புத் தூண்கள் நிற்பதைக் காணலாம். பெயரற்ற அப்பெண்மணி சோதோம் கொமோராவைப் பார்க்கப் பின்னிட்டுத் திரும்பினாள்; இஸ்ரவேலர் எகிப்தைப் பார்க்கத் திரும்பினர்; சீடர் பழைய சுலபமான உபதேசத்தை நோக்கித் திரும்பினர். தங்களது ஆதாயத்தை நோக்கிப் பூரிப்பதைவிட்டு இழப்பைக் குறித்து முறுமுறுத்தனர். உப்புதான்! ஆனால் பயனற்ற உப்பு, பெயருக்கு விசுவாசிகள் (என்னத்தை விசுவாசிக்கிறீர்களோ!) (யாத் 16:8).

இச்சக வார்த்தைகள்

“இச்சகம் பேசும் நாவையுடைய... பிறனுடைய மனைவி” (நீதி 6:24-29). “அவர்கள் கொழுத்த குதிரைகளைப் போல் காலமே எழும்பி, அவனவன் தன் தன் அயலானுடைய பெண்ஜாதியின் பின்னாலே கனைக்கிறான்” (எரே 5:8). ஆண்களும் பெண்களும் தங்கள் இச்சையான எண்ணங்களை மறுபாலருக்கு வெளிப்படுத்த பல யுக்திகளைக் கையாளுகிறார்கள். விளையாட்டாய்த் தோன்றும் வார்த்தைகள் இச்சகமான பேச்சாகி விபச்சாரத்தில் முடியலாம். “இதோ, இங்கே இருக்கிறேன்” என்று அறிவிக்கக் கனைப்பது, சத்தமாகப் பேசுவது, சிலுப்பட்டைத்தனமாகச் சிரிப்பது, பாலுறவு சிக்கல்களை மறுபாலரோடு பகிர்ந்துகொள்வது, கற்பனைகளையும் கனவுகளையும் பரிமாறிக்கொள்வது, இவையெல்லாம் இதைவிடப் பெரிய பாவத்திற்கு வழிவகுக்கும். முளையிலேயே கிள்ளியெறியுங்கள். உங்கள் உதடுகளோடும், நாவோடும், தொண்டையோடும் உடன்படிக்கை செய்யுங்கள். துணைவரிடம் பேசக்கூடியதற்கும் துணைவரல்லாதவரிடம் பேசக்கூடியதற்கும் இடையிலுள்ள அடைப்பை உங்கள் மனச்சாட்சி அறியும் (உன் 4:12). அதைத் தாண்டுவது ஆபத்து. அடைப்பைப் பிடுங்குகிறவனைப் பாம்பு கடிக்கும் (பிர 10:8). இக்கொடிய வலுசர்ப்பத்தின் மரண முத்தத்தைப் பெற்ற பலர் மரித்துக் கிடக்கின்றனர். ஆகவே அடைப்பினருகில்கூட போகாதீர்கள்.

நாவுக்குப் பயிற்சி

“வயதாக வயதாக பற்கள் விழுவதைவிட நாக்கு விழுந்துவிட்டால் எவ்வளவு நன்றாயிருக்கும்” என்றார் ஒருவர். அதைக்காட்டிலும் நாவிற்கோர் பயிற்சி கொடுப்பது நன்றன்றோ? உங்கள் பிள்ளைகளையும் பயிற்றுவியுங்கள்.

“பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்லல் தேற்றா தவர்”

என்றார் திருவள்ளுவர். அதாவது குற்றமற்றவையாகிய சில சொற்களைச் சொல்லத் தெரியாதவர், உண்மையாகவே பல சொற்களைச் சொல்லிக் கொண்டிருக்க விரும்புவராம். பேசாமலிருந்துவிடுவது கெட்டிக்காரத்தனமல்ல. குற்றமறப் பேசப் பழகுவதே சிறப்பு.

நாவு கட்டுக்கடங்காதது. ஆனால் முழு பலத்தையும் முழுக் கவனத்தையும் செலுத்தி அதைக் கட்டுபடுத்தி ஒடுக்குவோமானால் முன்னேறாமல் இருக்க மாட்டோம்.

நாவின் பாவங்களை அறவே நீக்கத் தீர்மானம் எடுத்துவிட்டால் போதாது... பல்வேறு ஆயுதங்களால் நாவைக் கட்டுப்படுத்த வேண்டும். முதலாவது உறுதியான மனம் வேண்டும். உடலைக் காட்டிலும் உறுதியான மனமே உடலைக் கட்டுப்படுத்த வல்லது. ஆகவே முடியாது என்று சோர்ந்து விட வேண்டாம். முடியும் என்றால் முடியும். இரண்டாவதாக, நமக்கும் மிஞ்சின கெட்டப் பழக்கங்களை அறுத்தெறிய அருமையானோர், அண்மை யிலுள்ளோர் ஒத்தாசையை நாடவேண்டும். நீங்கள் தவறும்போதெல்லாம் உங்களை உலுக்கிவிட உங்கள் துணைவர், பிள்ளைகள், பெற்றோர், நண்பருக்கு உரிமை அளியுங்கள். தவறினால் முயற்சியை இரட்டிப்பாக் குங்கள். நினைப்பூட்டும் குறிப்புகள் அல்லது வசனங்கள் எழுதி கண்ணாடி, மேசை, அடுப்படியில் ஒட்டிவையுங்கள். அவை காலையிலேயே நினை வூட்டும். உங்களுக்கே உரித்தான சில வழிமுறைகளைக் கண்டுபிடியுங்கள். கூழாங்கல்லைக் கழுவி வாயில் போட்டுக்கொண்ட ஒருவரை அறிவேன். தவறுகளை நாட்குறிப்பேட்டில் குறித்துவைத்து ஆண்டவரிடம் அறிக்கை யிடுங்கள். நாவிற்காகவே சிறப்பான விண்ணப்பம் ஏறெடுங்கள்.

மலையைப் பெயர்த்தெறிய சிறு கற்களைத் தூக்கிச் செல்வதில் துவங்க வேண்டும். மலை அப்படியேதான் தெரியும். ஆனால் காலப்போக்கில் கரைந்துவிடும். ஆகவே தொடங்குங்கள், தொடருங்கள். அப்பொழுது நெடுஞ்சாலையின் கோடியில் நிற்கும்போது, திரும்பிப் பார்த்து, விட்டு வந்த கசடைக் கண்டு பேரானந்தம் கொள்வீர்கள்!

3

கொல்லும் கொடிய கோபம்

ஆதிக் குடும்பத்தை ஆட்டி வைத்த கோபம் இன்னும் நமது நடுவில் குடி வாழத்தான் செய்கிறது. ஏன் கோபப்படுகிறீர்கள் என்று யாராவது கேட்டுவிட்டால் சரமாரியாய்ச் சாக்குபோக்குகளைச் சொல்லி வழிகிறோம். கோபப்படுதல் நீதிநெறியை முறித்தலென்றும் தேவனது தண்டனை அதற்குக் கடுமையானது என்றும் அறிவோமா? "கோபங்கள்... இப்படிப் பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லை" (கலா 5:20,21). கோபம் நபர்களை நசித்திருக்கிறது, குடும்பங்களைக் குலைத்திருக்கிறது, சபைகளைச் சீரழித்திருக்கிறது, நாடுகளை நாசமாக்கியிருக்கிறது. இவ்வுள்ளுணர்வைக் குறித்து சற்றுக் கற்போமானால் அதை ஆண்டுகொள்ள ஆற்றல் பெறுவோம்.

வீட்டில் கோபம்

சமாதானத்தின் உறைவிடமாயிருக்க வேண்டிய வீடு கோபத்தின் குடிலாவதேனோ? வேதத்தின் முதல் கோபக்காரன் காயீனே. கடவுள் அவனது தானத்தை ஏற்றுக்கொள்ளாதபடியால் உக்கிரக் கோபமடைந்தான். உடனேயே கடவுள் அவனது கோபத்தை அடக்க ஞானமானதோர் ஆலோசனையளித்தார்: "நீ நன்மை செய்தால் மேன்மை இல்லையோ?" என்றார் (ஆதி 4:3-8). சகோதர சகோதரிகளுக்குள்ளே பொறாமை உருவாகி, கோபம் உருவெடுத்து, சண்டையாகி, அது கொலையிலும் முடியலாம். அண்ணன் தம்பிக்கிடையே சண்டையில்லாமலிருக்காது. ஆனால் தேவனது ஆலோசனையைச் சற்று சிந்தித்துப் பாருங்கள். உங்கள் உடன்பிறப்புகளோடு போட்டா போட்டியிடுவதற்குப் பதிலாக உங்கள் திறமைகளில் கவனம் செலுத்தி முன்னேறுவீர்களானால் தேவன் உங்கள் கரத்தின் செயலை ஆசீர்வதிக்க மாட்டாரோ?

இயேசு என்ன சொன்னார்? ஒருவர் தன் அண்ணன் தங்கையிடம் கோபப்படுவது கொலை செய்தது போலாகும் என்றாரல்லவா? காரண

மில்லாமல் சகோதரனிடம் சிடுசிடுவென்றால் உன்மேல் வழக்குத் தொடரலாமாம்! உன் தம்பியை, "நீ உருப்படுவாயா?" "தெண்டம்" என்று கூறி விட்டால் உன்னை விசாரித்துத் தீர்ப்பளிக்கவேண்டுமாம். உன் தங்கையை "முட்டாளே" என்பாயானால் நீ நரகத்திற்குச் செல்ல வேண்டுமாம் (மத் 5:22). சிறுவரே, வாலிபரே, இதை உங்களால் அப்படியே சத்தியமென்று நம்ப முடிகிறதா? உங்கள் உடன்பிறந்தோரை நியாயமாய், அன்போடு நடத்துகிறீர்களா அல்லது அவர்கள் சூலமித்தியைப்போல, "என் தாயின் பிள்ளைகள் என் மேல் கோபமாயிருந்தார்கள்" என தேவனை நோக்கி கண்ணீர்விடச் செய்கிறீர்களா? (உன் 1:6). திருமணத்திற்குப் பின்னும் கூட சகோதர சகோதரிகள், மைத்துனர், நாத்தனார்கள் ஒருவருக்கொருவர் ஒத்தாசையோடு உறுதுணையாய் வாழ்ந்து பாசத்தின் கயிறுகளால் கட்டப்பட்டிருக்க வேண்டும்.

இயேசு கிறிஸ்துவின் சகோதர சகோதரிகளாகிய விசுவாசிகள் பொறாமை, போட்டியினால் வரக்கூடிய கோபதாபங்களைத் தவிர்த்து அமரிக்கையோடு கடவுள் அவரவர்க்கு அளித்துள்ள ஈவுகளைச் செயல்படுத்துவரானால் அதுவே தேவனுக்குச் சுகந்த வாசனையாயிருக்கும்.

தகப்பன் தனயனுக்கிடையே சச்சரவைக் குறித்தும் வேதத்தில் வாசிக்கிறோம். "அப்பொழுது சவுல் யோனத்தான்மேல் கோபமூண்டவனாகி..." (1 சாமு 20:30-34). அவனது கனல் கக்கும் வார்த்தைகளுக்குக் காரணம் தனக்குப் போட்டியான தாவீதோடு தனது மகனின் நட்புறவே. பிள்ளைகளின் நண்பரைச் சரியான கண்ணோட்டத்தோடு காணப் பெற்றோராகிய நாம் அடிக்கடி தவறுகிறோம். தந்தையின் காட்டுமிராண்டிக் கோபத்திற்கு யோனத்தான் எப்படிப் பதிலளிக்கிறான் பாருங்கள்: அவன் "கோபதாபமாய் பந்தியைவிட்டு எழுந்து போய்" விட்டான். பாவம் செய்யாதபடி அவன் வேறு என்ன செய்திருக்க முடியும்? கோபம் நம்மையறியாமலேயே பொங்கி எழும் உள்ளுணர்வு. அதன் வெளிப்பாடோ நமது கையில்தான் உண்டு. தப்பான செயல் எவ்வளவு தவறோ, தப்பான பிரதிச் செயலும் அவ்வளவு தவறே. யோனத்தான் தனது கோபத்தைத் தணிக்க எழுந்து போய்விட்டான். மறுகாலை ஞானமாய் நடந்துகொண்டான். நமது ஆவேசத்திற்கு அணை கட்டமுடியாத பட்சத்தில் நாம் யாருமே இதைச் செய்யலாமே. வெளியே உலாவச் சென்று உக்கிரம் தணிந்ததும் திரும்பலாம். கோபத்திற்கு அருமருந்து நேரந்தாழ்த்துதலே. "கோபம் வந்தால் பேசுமுன் பத்து எண்ணவும்; கோபாவேசம் வந்தால் நூறு எண்ணிப் பின் பேசாதிருக்கவும்" என்பதொரு ஆலோசனை! அப்படியானால் கோபத்தின் கடிவாளத்தை உங்கள் கரங்களில் பிடித்தவர்களாயிருப்பீர்கள். பேசாத வார்த்தையே வெள்ளித்தட்டில் வைக்கப்பட்ட பொற்பழமாயுமிருக்கலாம்!

ஆவேசக்கார துணைவரும் உண்டு. யாக்கோபு தன் மனைவியினிடத்திலும் மாமனாரிடமும் கோபப்படுகிறவன் (ஆதி 30:2; 31:36). மாறாக, அவனது தந்தையான ஈசாக்கு தன் மனைவிக்காக ஜெபிக்கிறவனும், தான் தோண்டிய கிணறுகளையே விட்டுக்கொடுத்தவனுமாகிய நாகரீகமுள்ளவன். எதற்கெடுத்தாலும் சண்டைபோடும் கோபக்காரியாகிய மனைவி இல்லானைத் துரத்துகிறவள் (நீதி 21:19). குடும்பம் சுமுகமாகச் செல்ல வேண்டுமா ? கணவனும் மனைவியும் உங்கள் கோபத்தின்மேல் காலை வைத்த வண்ணம் பிரேக் போட்டுக்கொண்டேதான் செல்லவேண்டும்.

குடும்பத் தகராறுகள் செய்தித்தாள்களில் தலையங்கம் வகிக்கின்றன. ஒருவர் மற்றொருவரால் புண்பட நேர்ந்தால் அக்காரியத்தை கடவுளுடைய கையிலோ நீதியின் விசாரணைக்கோ விட்டுவிடாமல் ஒரு குடும்பம் மற்றவரது குடும்பத்தை மனங்கொதித்துப் பழிவாங்குவது சாதாரணமாகி விட்டது. தீனாளின் கதைதான் (ஆதி 34:7). இதனாலேயே சிமியோனும் லேவியும் தங்கள் வாழ்த்து நாளில் வாதையைச் சுதந்தரித்தனர்: "அவர்கள் தங்கள் கோபத்தினாலே ஒரு புருஷனைக் கொன்று தங்கள் அகங்காரத்தினாலே அரண்களை நிர்மூலமாக்கினார்களே. உக்கிரமான அவர்கள் கோபமும் கொடுமையான அவர்கள் மூர்க்கமும் சபிக்கப்படக்கடவது; யாக்கோபிலே அவர்கள் பிரியவும், இஸ்ரவேலிலே அவர்களைச் சிதறவும் பண்ணுவேன்" (ஆதி 49:6,7). பழிவாங்குதல் கர்த்தருடையது. நமது கோபத்தைக் கொட்டாமல் அடக்கிக்கொள்வதினாலே நம்மைக் குத்தினவரை நாம் தேவனது நியாயத்தீர்ப்புக்கு ஒப்புக்கொடுக்கிறோம். அதனால் அவர் மனந்திரும்புதலைக் கண்டடையக்கூடுமே.

வேலைக்காரரை அடிமைகள்போல் நடத்துவது ஈனச்செயல். பிலேயாம் தனது கழுதையை அடிஅடியென்று அடித்துக் கொன்றுபோடுவதாகப் பயமுறுத்தினான். அந்தக் கழுதையே தன் உயிர் காத்த தோழனென்று அவன் அறியவில்லை. எல்லோருக்கும் நாம் தாராளமாகக் கொடுக்கும் பண்புகளான புன்முறுவல், விசாரிப்பு, பாராட்டு, நன்றி மற்றும் வாழ்த்தில் வேலைக்காரருக்கும் பங்குண்டு. நமது பெருமையை விழுங்கி அவற்றை அன்னாருக்கு அளிப்போமானால் காரணமின்றி அவர்கள்மேல் எரிந்து விழமாட்டோம் (நீதி 21:24). நாமும் கடவுளது பணியாளராயிருப்பதாலே நாம் பணியாளரை மிரட்டாமல் பண்பாய் நடத்தவேண்டுமென வேதம் பணிக்கிறது (எபே 6:9).

முதலிடத்தில் மூர்க்கம்

தலைமைத்துவமும் கோபமும் கைகோர்த்துச் செல்லமுடியாது. கோபக்காரனைத் தலைவனாகும் தகுதியற்றவன் என்று பவுல் நிராகரிக்கிறான்

(தீத்து 1:7). தங்கள் கோபக்குணத்தை மாற்ற அக்கறை காட்டாதபடியால், சிறந்த இயல்புகளையும் வரங்களையும் உடையவர்களையுங்கூடத் தலைமைப் பதவி தாண்டிச் சென்றுவிட்டது. ஒரு பெண் தன் கோபத்தை அடக்கப் பயிலாதவளானால் தலைமைப் பதவி அவளது கணவனைத் தாண்டிச் செல்லுகிறது. தலைவர் தம்மிடம் எதிர் பேசுவோரோடு கோபமாய்த் தர்க்கிக்காத சாந்தமுள்ளவராயிருத்தல் அவசியம் (1 தீமோ 2:8). தலைவனோடு விவாதித்து அவனது கோபத்தைக் கிளப்புவதற்கென்றே பலரிருப்பர். ஆகவே அவன் அமைதலோடு கவனித்து அமரிக்கையோடு அவர்களைத் திருத்துகிறவனாயிருக்க வேண்டும் (2 தீமோ 2:24-26).

நாகமான் ஓர் இராணுவ அதிகாரி. தனது பதவிக்கேற்ப அவனை வரவேற்று உபசரிக்காததினாலோ என்னவோ அவனுக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது (2 இரா 5:11). ஆனால் அவன் நல்லவனும் தன் வேலைக்காரரைப் பண்போடு நடத்துகிறவனுமாயிருந்தான் (வச 13). அவர்களது ஆலோசனையைக் கேட்டதால் குணமடைந்தான். அவனிடமிருந்து நாம் கற்றுக்கொள்ளவேண்டிய பாடங்கள்: ஒன்று, கோபம் பெருமையின் வெளிப்பாடு. நாம் எதிர்ப்பார்ப்பதுபோல் மக்கள் நம்மை நடத்த எதிர்பார்த்தால் நமது கோபத்திற்கு முடிவே இராது. மக்கள் நம்மை நடத்தும் விதத்தை நாம் தாழ்மையோடு ஏற்றுக்கொள்ள வேண்டும். இரண்டு, எந்த வயதிலும் எந்த நிலையிலும் நம்மை மாற்றிக்கொள்வது கூடாததல்ல. நாம் கோபத்தினாலல்ல, அன்பினால் ஆட்கொள்ளப்பட்டவர்களாயிருக்க வேண்டும்.

சவுலின் மிஞ்சுங்கோபம் அவனது வாழ்க்கையையே நாசமாக்கிப் போட்டது (1 சாமு 18:8). கண்டித்த தீர்க்கதரிசிக்குச் செவிகொடாமல் கோபப்பட்டதால் மன்னன் ஆசா நோய்கண்டு மரிக்க நேர்ந்தது (2 நாளா 16:10). நம்மைத் திருத்தும் சிநேகிதரின் கசப்பு வார்த்தைகள் எத்தனை இனிமையானவை! நமது அகோர அகங்காரமோ பணிய மறுக்கிறது.

தலைவர்கள் தம் வாழ்க்கையிலிருந்து கோபத்தைக் களைந்தெறிய வேண்டியதற்கு மற்றோர் காரணம்: அது ஒரு தொற்றுநோய். தலை கோபத்தினால் ஆடினால் வால் சினந்துத் துடிக்கும் (நீதி 22:24,25). எரிமலையாய்க் குமுறி வெடிக்கும் தலைவர்கள் நாகரீகமற்றவர். வேலைக்காரர் அடிமைகளல்லாததுபோல, உடன் ஊழியர் வேலைக்காரல்ல என்பதைத் தலைவராயிருப்பவர் மறந்துபோகவே கூடாது. கிறிஸ்தவத்தில் அதிகாரிகளுக்குக் குறைவில்லை; தலைவர்களுக்குத்தான் பஞ்சம். அதிகாரி திமிங்கிலத்தைப் போல சீற்றத்துடன் மூச்சு விடலாம்; தலைவன் அப்படிச் செய்யலாகாது. உடன் ஊழியர் உங்களுடன் ஒட்டிக்கொள்ள விரும்பினால் நீங்கள் விசுறும் நோட்டுகளுக்காக அல்ல, ஊற்றும் நேசத்திற்காகவே இருக்கட்டும்.

“எஜமான் ஊழியரை விரட்டுகிறான்,
தலைவன் அவர்களை ஊக்குவிக்கிறான்;
எஜமான் அதிகாரத்தைச் சார்ந்திருக்கிறான்,
தலைவன் நன்னம்பிக்கையைச் சார்ந்திருக்கிறான்;
எஜமான் பயத்தை உருவாக்குகிறான்,
தலைவன் அன்பை உதிர்க்கிறான்.”

—டாரிஸ் லெஸ்ஸிங்

ஞானமும் கோபமும்

“நீடிய சாந்தமுள்ளவன் மகா புத்திமான்; முற்கோபியோ, புத்தியீனத்தை விளங்கப்பண்ணுகிறான்” (நீதி 14:29). “ஞானமுள்ளவன் பயந்து தீமைக்கு விலகுகிறான்; மதியீனனோ மூர்க்கங்கொண்டு துணிகரமாயிருக்கிறான்” (14:16,17). ஞானமுள்ளவன் கோபப்படாதவன் மட்டுமல்ல, அரசனின் கோபத்தையும் தணிக்கிறான் (16:14). “மனிதனுடைய விவேகம் அவன் கோபத்தை அடக்கும்; குற்றத்தை மன்னிப்பது அவனுக்கு மேன்மை” (19:11). “உன் மனதில் சீக்கிரமாய்க் கோபம் கொள்ளாதே; மூடரின் நெஞ்சிலே கோபம் குடிகொள்ளும்” (பிர 7:9). ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டுதானே? கோபத்தை ஒழித்து ஞானவானானால் என்ன?

நியாயமான கோபம்

கோபம் இயல்பானதோர் உள்ளுணர்வு. சரியாய்ப் பயன்படுத்தப்பட்டால் அதுவே தீமையை ஒழித்து தவறானதைத் திருத்த நம்மை உந்தும் விசையாகும். தவறான திசையில் செல்லும் கோபமே பாதகமானது. கிறிஸ்தவன் ஒவ்வொருவனுக்கும் பரிசுத்த உக்கிரம் இல்லாவிட்டால் அவன் தீமைக்கு எதிர்ச்செயல் புரியவோ போராடவோ முடியாமற் போகும். தீமையைக் கண்டு கோபப்பட முடியாதவன் நன்மை செய்ய ஊக்கமற்றவனாயிருப்பான். பரிசுத்த கோபம் அடக்கி வைக்கப்பட்டால் தேவனுக்கும் அவரது இராஜ்யத்திற்கும் இகழ்ச்சி உண்டாகும் (1 சாமு 11:6). சுத்திகரிக்கும் தன்மையுள்ள கோபம் துன்மார்க்கத்திற்கு நேரே செலுத்தப்படும். பழக்கமான கோபம் வழக்கமாய் வெடிப்பது போலல்லாமல் நியாயமான கோபம் அத்தி பூத்தாற்போல் வெளிப்படும். காரணத்தோடு கோபப்படுபவன் சாந்தகுணத்திற்குப் பெயர்போனவனாயிருக்கவேண்டும் (மத் 21:12 / 11:29). பரிசுத்த கோபமென்பது தீமையைத் தீமையென்றழைக்கும் துணிச்சல். ஆனால் அதைச் செயல்படுத்த அறிவு தேவை. பேதுரு சுத்த சுவிசேஷத்தை விட்டு மாயம்பண்ணினதால் பவுல் அவனை முகமுகமாய் எதிர்த்தான் (கலா 2:11-14). அது விளையாட்டான காரியமல்ல. தேவ சபையைப் பாதிக்கக்கூடிய அதிமுக்கிய உபதேசக் காரியமது. பவுலின் பரிசுத்த கோபம் அன்று பற்றியெரிந்திராவிட்டால் இன்று சபையின் கதி என்னவாயிருக்கும்?

கோபத்தைக் கட்டுப்படுத்துதல்

தலைதெறிக்கும் வேளைகளில் நம்மெல்லாருக்குமே அற்ப காரியத்திற்கும் மூக்கு சிவக்கத்தான் செய்கிறது. இந்த நூற்றாண்டின் ஓட்டம் எல்லாரது நரம்புகளையும் பதம் பார்த்துவிட்டது. அழுத்தம் கோபத்திற்கொரு காரணம். தேவன் நமக்கு நியமித்ததற்கும் மிஞ்சிச் செயல்படத் துடிக்காமல் நம்மைத் தளர்த்தி அமரிக்கையாய் வேலைசெய்யப் பழகவேண்டும். கத்துவது, அலறுவது, பல்லைக் கடிப்பது, பொருட்களை விசுறுவது போன்றவை கல்லாதோர் பண்பாடு. கோபத்தோடு குஸ்தி போடாவிட்டால் அது நம்மோடேயே குடியேறிவிடும். யாராவது வேண்டுமென்றே நம்மைச் சீண்டிவிட்டால், ''இவன் ஏமாந்துபோகத்தான் போகிறான்'' என்று நமக்கு நாமே சொல்லிக் கொள்ளவேண்டும். அவரிடமும், ''நீங்கள் என்னிடம் கோபப்படலாம். ஆனால் நான் உங்களைப்போல் நடந்துகொள்ளத் தயாராயில்லை'' எனலாம். அன்பு சினமடையாது (1 கொரி 13:5). எனவே எருமைத்தோல் வளர்த்துக் கொள்வது நல்லது.

நாம் கோபத்தில் குமுறும்போது நமது இரத்தத்தில் அட்ரினலின் கூடுகிறது. இதனால் இதயத் துடிப்பும் இரத்த அழுத்தமும் கூடுவதோடல்லாமல் வயிற்றிலும் புண் ஏற்படலாம். நமது சக்தியை வீணே செலவழிக்கிறோம். இதயத்தில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் செயலற்ற கோபம்கூட நமது உள்ளுறுப்புகளை எலிபோல் கறுமிக்கொண்டிருக்கும். "கோபத்தை நெகிழ்ந்து, உக்கிரத்தை விட்டுவிடு; பொல்லாப்புச் செய்ய ஏதுவான எரிச்சல் உனக்கு வேண்டாம்'' (சங் 37:8).

எரிச்சலை மேற்கொள்ளுவதினால் நமது உடலைத் தாக்கும் கோபத்தின் கூரை மழுக்குகிறோம். கசப்பான வேரைத் தோண்டி எடுக்காமல், ''சரி, சரி போ, மன்னித்து விட்டேன்'' என்று சொல்லுவது பயனல்ல. பழைய கோபம் இரட்டிப்பாய்ப் படையெடுத்து வரும். நம்மைப் புண்படுத்தினவரை நாம் மன்னியாதிருப்போமானால் அன்னார் நம்மைத் தொடர்ந்து கொடுமைப் படுத்த நாம் இடமளிக்கிறோம். எந்த விநாடியில் அவர்களை முழுமனதோடு மன்னிக்கிறோமோ அந்த விநாடியே அவர்களது கொடூரப் பிடியிலிருந்து விடுதலையாகிறோம். ஒவ்வொருவராய், ஒவ்வொருவராய் மன்னிக்கத் தீர்மானிப்போமானால்—படிப்படியாய், படிப்படியாய் நம்மைக் கட்டவிழ்க் கிறோம். மனிதரால் இது கூடாததுதான். ஆனால் தேவனது கிருபையினால் எல்லாம் கூடும். கடவுள் நம்மை மன்னித்திருப்பாரானால் நாம் யாரைத்தான் மன்னிக்கக் கூடாது? ''அவருடைய கோபம் ஒரு நிமிடம், அவருடைய தயவோ நீடிய வாழ்வு'' (சங் 30:5). கடவுள் தமது கோபத்தை நம்மை விட்டகற்றாமல் இருந்திருப்பாரானால் நாம் இல்லாமல் போயிருப்போம். எல்லாம் வல்ல இறைவன் நமக்கு இரக்கம் பாராட்டியிருக்கும்போது நாம் யார் மீதாவது கோபமாயிருக்கலாமா?

சங்கீதக்காரன் காரியத்தை ஊடுருவிச் சென்று, இன்றும் நாம் செயல்படுத்தினால் பயனளிக்கக்கூடிய இரண்டு தத்துவங்களைக் கூறுகிறான். "நீங்கள் கோபங்கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள்; உங்கள் படுக்கையிலே உங்கள் இருதயத்தில் பேசிக்கொண்டு அமர்ந்திருங்கள். நீதியின் பலிகளைச் செலுத்தி கர்த்தர்மேல் நம்பிக்கையாயிருங்கள்" (சங் 4:4,5). இதையேதான் பவுல் தனது சொந்த நடையிலே நாம் தூங்குமுன் நமது கோபம் தணியவேண்டும் என்றெழுதுகிறான் (எபே 4:26). செயல்படாத கோபம் பாவமல்ல, எனவேதான் சங்கீதக்காரன், நீங்கள் கோபங்கொண்டாலும் அக்கோபம் வெளியே சிந்தாதபடி பார்த்துக்கொள்ளுங்கள் என்கிறான். நாளின் இறுதியில் நாம் படுக்கையில் உருளும்போதுதான் இதயத்தில் கோபம் கொந்தளிக்கும். அப்பொழுது நாம் நம்மோடு பேசி அமைதலடைய வேண்டுமாம். கோபத்தை வைத்திருப்பதினால் உங்களை நீங்களே எவ்வளவு காயப்படுத்திக்கொள்ளுகிறீர்கள் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். உங்களுக்கு நீங்களே, "நான் ஏன் கோபப்பட வேண்டும்? எவ்வளவு புண்பட்டிருக்கிறேனென்பதை தேவன் அறிவார். நான் கடவுளுடைய கருவிழி. அவரது அனுமதியில்லாமல் யாரும் என்னை எதுவும் செய்துவிட முடியாது. கோபத்தின் விளைவென்ன? கோபப்பட்டுச் சாதிப்பதென்ன? என்னைப் புண்படுத்தினவரை தேவனது கரத்தில் ஒப்புக்கொடுக்கிறேன். நான் நீதியைச் செய்து கர்த்தரை நம்பியிருப்பேன். பழிவாங்கத் துடிக்கமாட்டேன்" என்று சொல்லிக்கொள்ளுங்கள். அப்பொழுது குழந்தையைப்போலத் தூங்குவீர்கள் (சங் 4:8).

இறுதியாக, கடவுள் உங்கள் காதில் இரகசியமாய்க் கேட்கும் ஒரு கேள்வி: "நீ எரிச்சலாயிருக்கிறது நல்லதோ?" (யோனா 4:9). முரட்டாட்டமாக, "நான் மரணபரியந்தமும் எரிச்சலாயிருக்கிறது நல்லதுதான்" என்பீர்களோ?

4
தவறுகளைத் தவறாகப் புரிந்துகொள்ளாதீர்!

"தலைசிறந்த மாணவி" என்ற பரிசைப் பெறுவதற்காக மேடையருகே துடிக்கும் இதயத்தோடு ராகினி நின்று கொண்டிருந்தாள். அவளது பெயர் அழைக்கப்பட்ட மாத்திரத்தில் மானெனத் துள்ளிப் படியேறினாள். ஒரு வினாடியில்—அவளது ஹை ஹீல்ஸ் செருப்பினின்று வழுவித் தடுமாறி தடாலென்று தரையில் விழுந்தாள். பார்வையாளர் பகுதியினின்று நாக்குகள் கொட்டிப் பரிதாபப்படும் ஒலி, காலடிகள் சப்தம், வீடியோ காமிராவின் விர்ர்ர்...! ஒரு நொடியில் எழுந்து எப்படியோ சமாளித்துப் பரிசை வாங்கிக் கொண்டு மறுபுறமாய்க் கவனத்துடன் இறங்கிச் சென்று அமர்ந்தாள். கண்கள் துளிர்த்தன. தாய் சாவதானமாய்ச் சொன்னது காதில் ரீங்காரித்தது: "ஹை ஹீல்ஸ் செருப்பைப் போடாதே ராகினி; இன்னும் அதில் தடுமாறுகிறாய்." அவள் அதைப் பெரிதாய் நினைக்கவில்லை.

எனக்கும் சரி, உங்களுக்கும் சரி, ஏன் அமெரிக்க தலைவர் பில் கிளின்டனுக்கும்கூட இப்படிப்பட்ட சம்பவங்கள் நடக்கின்றன. அது ஒன்றுமில்லாத சிறு தவறாயிருக்கலாம், அல்லது நம்மையே நசுக்கும் ஒரு பாவமாகவுமிருக்கலாம். சுய பெருமையை அவமாக்கும் ஓர் அனுபவம் சிலரை அகித்தோப்பேலைப்போல் தற்கொலைக்கு நடத்துகிறது. கண்ணாடி போலிருந்தால் எதற்கெடுத்தாலும் உடைந்துபோவோம். அதுவே பெருந் தவறு. சிலர் கண் மறைவாகி அணுவணுவாய்ச் சாகின்றனர். ஆனால் மற்றும் சிலருக்கோ தவறு உந்திச் செல்லும் கல்லாக உதவுகிறது. தவறு செய்துவிடுவோமோ எனப் பயந்துகொண்டேயிருப்பவர்கள் உயர ஏறமாட்டார்கள், சமதளத்திலேதான் நடப்பார்கள். தவறு செய்தாலும் பரவாயில்லை என்ற துணிவில்லாதவன் எதையும் செய்யத் திராணியில்லாதவன்.

ஒரு தோல்வியை அடுத்து எழுகின்ற துக்கம் இரண்டு வழிகளில் திரும்பலாமெனப் பவுலடியார் கூறுகிறார் (2 கொரி 7:10). தேவனுக்கேற்ற துக்கம் (பெரும் தவறுகளிலிருந்து) இரட்சிக்கப்படுவதற்கேதுவான மனந்

திரும்புதலை உண்டாக்கலாம். அல்லது அது உலகப்பிரகாரமான துக்கமாக மரணத்தை உண்டாக்கலாம். வருங்காலத்தில் பெருந்தவறுகளைச் செய்யாமல் ஞானமாய்த் தப்பித்துக்கொள்ளும்படி தேவன் வீழ்ச்சிகளை நமது வாழ்க்கை ஓட்டத்தில் அனுமதிக்கிறார். ஆகவே, நாம் பேச அனுமதி கொடுத்தால் தவறுகள் தேவ சத்தமாகலாம். ஒருவர் நமது குற்றத்தை எடுத்துக்காட்டும்பொழுது (நாம் எடுத்துக் கொள்ளுகிற விதத்தைப் பொருத்து) அவர் நமக்கு புத்தி சொல்லித் தூக்கிவிடும் தீர்க்கதரிசியாகலாம்; அல்லது தலையில் கொட்டி சாக்கடையில் தள்ளிவிடும் சாத்தானாகலாம்.

தாவீது இஸ்ரவேல் அனைத்தின் மேலும் இராஜாவாக அபிஷேகிக்கப் பட்டபோது தேவனது உடன்படிக்கைப் பெட்டியை எருசலேமிற்குக் கொண்டு வர ஆசித்தான். ஆகவே சகல தலைவரோடுங்கூட ஆலோசனைபண்ணி, அவர்களும் அது நல்லது என ஒத்துக்கொண்டபோது அதைக் கொண்டுவர ஒழுங்கு செய்தான். அவர்கள் கீதோனின் களம் மட்டும் வந்தபோது மாடுகள் இடறினபடியால் ஊசா என்பவன் பெட்டியைப் பிடிக்கக் கையை நீட்டினான். அங்கே கர்த்தர் ஊசாவை அடித்ததினால் அவன் செத்தான். இதனால் தாவீது விசனப்பட்டு பெட்டியை வேறு வீட்டிலே சேர்த்தான். சிலமாத இடைவெளிக்குப் பின்பு மறுபடியும் பெட்டியைக் கொண்டுவரத் தீர்மானித் தான். இம்முறை தாவீது பெட்டியை லேவியர் மட்டுமே சுமக்க வேண்டு மென்றும், நியாயப்பிரமாணத்தின்படியே யாவையும் செய்யவேண்டுமென்றும் சொன்னான் (1 நாளா 13-15).

மூன்று மாத இடைவெளியில் நடந்ததின்னதென்று யூகிப்பது கடினமல்ல. பெலிஸ்தியரோடு யுத்தம் நடந்தது, தாவீது தனக்கு வீடுகளைக் கட்டினான், திருமணங்கள் செய்தான். ஆனால் உள்ளத்திலோ புயல். ஏன் தனக்கு இப்படி நடந்தது? ஏன் தேவன் இதை அனுமதித்தார். தான் தவறு செய்யவிருந்தால் தன் அதிபதிகள் ஏன் தன்னைத் தடுத்து நிறுத்தவில்லை? என்ன செய்ய வேண்டும், எப்படிச் செய்யவேண்டுமென தேவன் இடை பட்டுச் சொல்லியிருக்கலாமே. எங்கே தவறினான்? அனுதினமும் வேதத்தை வாசித்து ஒழுங்காக ஜெபிக்காமலா இருந்தான்? தேவனது சித்தத்தை அறியத் தினந்தோறும் அவன் கதறவில்லையா? இக்கோர நிகழ்ச்சிக்குப் பிறகாவது தேவன் தனது குற்றமின்னதென்று உணர்த்தியிருக்கலாமே. ஒரு தீர்க்கனை அனுப்பியிருக்கலாமே. கொதிக்கும் அவன் கேள்விகளுக்குப் பதிலில்லை. ஆத்தும ஆராய்ச்சி, ஆலோசனை, வேதத்தை ஆராய்தலுக்குப் பின் தாவீது சிக்கலைக் கண்டுபிடித்தான். மொத்தத்தில் உடன்படிக்கைப் பெட்டி எருசலேமிற்கு வருவது தேவனது விருப்பமாயிருந்தாலும் அது கொண்டுவரப்பட்ட விதத்தைக் குறித்து தாவீது தீர விசாரியாமல் செய்த படியால் தவறு நேர்ந்தது (1 நாளா 15:13). சரியானபடி லேவியர் மட்டுமே தண்டுகளால் பெட்டியைத் தோளில் சுமக்க வேண்டும் (யாத் 25:14).

நாம் தேவ சித்தத்தைச் செய்தாலும் சிலவேளைகளில் நாம் செய்யும் விதத்தைக் குறித்து தேவன் பிரியமாயிருப்பதில்லை. தாவீது கஷ்டப்பட்டுப் பாடத்தைப் படித்துக்கொண்டாலும் பின்னால், “நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது; அதினால் உமது பிரமாணங்களைக் கற்றுக்கொள்ளு கிறேன்” என்று எழுதுகிறான் (சங் 119:71). தவறு செய்ய நம்மை விட்டு விடுவதின் மூலம் தேவன் நம்மைச் சரியான பாதைக்குக் கொண்டுவந்து சேர்க்கிறார். நாம் வலதுபுறமோ இடதுபுறமோ சாயும் போது, “வழி இதுவே, இதிலே நடவுங்கள்” என்று நமக்குப் பின்னாலே கேட்கும் வார்த்தைகள் நமது தவறுகளாயிருக்கலாமே (ஏசா 30:21). நம்மில் அநேகர் அவ்வப் பொழுதாவது பிலேயாமைப்போல நல்வழியை விட்டு விலகிச் செல்கிறோம். எனவே தேவன் நம்மை நெருக்கடியான பாதைகளில் நடத்தி, வழியை மறித்து, காலை நசுக்கி, கழுதையின் வாயைத் திறந்து, அதிக புத்தியீனமான தவறு களைச் செய்யாதபடி நம்மைக் காப்பாற்றுகிறார் (2 பேது 2:15,16).

கொரிந்து சபைக்குப் பவுல் எழுதும்போது அவர்கள் தவறுகளைக் குறித்து அவர்களை ஆறுதல்படுத்துகிறான். அந்த மாரா அனுபவத்தின் மூலம் அவர்கள் கற்றுக்கொண்ட பாடப்பட்டியல் நமக்கும் பயன்தரக்கூடியது (2 கொரி 7:11). ஆவியானவரின் சத்தத்தைக் கேட்க நமது ஆன்மீகச் செவிகள் திறந்திருக்குமானால் அவர் நம்மை மெதுவாக இடித்துத் தள்ளி நேர்ப்பாதைக்குத் திருப்புவார்.

1. ஜாக்கிரதை

தவறு ஒரு கைதேர்ந்த உபாத்தி. பலமுறை தவறி அவற்றின் மூலம் கற்பது நம்மைப் படிப்படியாக தேர்ச்சிக்கும் நேர்த்திக்கும் நடத்துகிறது. எனது மருத்துவக் கல்வியின் பயிற்சி ஆண்டில் குள்ளனாகிய ஓர் ஓவியனுக்குத் தவறான இடத்தில் ஊசி போட்டுவிட்டேன். மருந்து நரம்பு உறைக்குள் சென்றதால் அவனது வலது கை செயலற்றுத் துவண்டது. என் மனச்சாட்சியைத் தவிர மற்ற யாவருமே என்னிடம் பட்சாதாபமாய் நடந்துகொண்டனர். அணுஅணுவாய்ச் செத்தேன். உபவாசித்து மூன்று மாதங்கள் நடுக்கத்தோடு காத்திருந்தேன். நரம்போ உயிர்பெறவில்லை. நரம்பு திரும்பவும் உயிர்பெறக்கூடிய நாட்கள் முடிந்துவிட்டதால் பேராசி ரியர்கள் அந்த நரம்பு செத்துவிட்டதென முடிவெடுத்தனர். நான்காவது மாதம் நரம்பு உயிர்பெற்று, கரம் செயலாற்றியது! அம்மூன்று மாதங்களை நரகம் என்று சொல்வதைத் தவிர வேறென்னவென்று சொல்வது. ஆனால் எத்தனை ஜாக்கிரதையை அது என்னில் உண்டுபண்ணிற்று! பணிவாழ்வின் துவக்கத்திலேயே பெற்றுக்கொண்ட அந்தச் சாட்டையடிக்காக தேவனுக்கு மகிமையுண்டாவதாக. எத்தனைப் பொறுப்புணர்வை அது எனக்குப் போதித்தது!

2. குற்றந்தீர்க்கத் தீவிரம்

உடலின் ஓர் உறுப்பாயிருப்பதின் சிலாக்கியம் என்னவென்றால் ஒருவரது குற்றத்தை நீக்க உடல் முழுவதுமே கரிசனை கொள்வதுதான். தனிநபர் தம் விருப்பம்போல் எதையும் சொல்லவோ செய்யவோ முடியாது. தனி நபர் தவறிழைத்துத் தன்னைத் திருத்திக்கொள்ள அசட்டையாயிருந்தாலும் உடல் குற்றந்தீர்க்கக் கரிசனை கொண்டால் அது ஆகும். தனிநபரது குற்றங் குறைகளும் பாவங்களும் உடலைப் பாதிப்பதினால் உடல் தன்னைச் சுத்தி கரிக்கத் தூண்டப்படும். உசியா அரசன் பலவானானபோது பெருமைகொண்டு தேவ சமுகத்தில் தூபங்காட்டத் துணிந்தான். ஆசாரியர்கள் அவனைத் தடுத்தபோது கோபாவேசம் கொண்டான். தேவன் அவனைக் குஷ்டத்தினால் அடித்தபோது ஆசாரியர் "அவனைத் தீவிரமாய் அங்கேயிருந்து வெளிப்படப் பண்ணினார்கள்; கர்த்தர் தன்னை அடித்ததினால் அவன் தானும் வெளியேப் போகத் தீவிரப்பட்டான்" (2 நாளா 26:16-20). தவறுகளும் அவற்றின் விளைவுகளும் நம்மைக் குற்றந்தீர்க்கத் தீவிரப்படுத்துகின்றன.

3. வெறுப்பு

புத்தியீனமான தவறுகளின் விளைச்சல் பாகற்காய்தான். திரும்பவும் அப்படிப்பட்ட வேதனையையும் மானக்கேட்டையும், துன்பத்தையும், வெட்கத் தையும், துயரத்தையும் அனுபவிக்க யாருமே விரும்பமாட்டார். ஆகவே நாம் செய்ததை வெறுக்கத் துவங்குகிறோம். நாம் அக்கிரமத்தை விரும்பி நீதியை வெறுத்த நாட்களுண்டு. மறுபிறப்பிற்குப் பின்னும் நடுநடுவே அக்கிரம வாஞ்சை சற்றே நம்மை இழுத்துப் பார்க்கிறது. கெட்ட காரியங் களை நாம் அடியோடு அருவருத்து வெறுக்காவிடில் பரிசுத்தமாகும் பாதை யில் நடப்பது கடினம். நமது தவறுகளின் விளைவு நம்மை அழ அழக் கிள்ளி விடுவதினால் நமது தவற்றை நாம் அருவருத்து நஞ்சென அதை வெறுக்கக் கற்றுக்கொள்கிறோம். நேர்ப்பாதையினின்று ஒரு காலை அகற்றி வைத்தாலும் அதை உடனே உணர்ந்துகொள்ளத்தக்க கூர்மையை உடைய வர்களாகிறோம். ஆகவே தீமையை வெறுக்கவும் நீதியை விரும்பவும் பழகுகிறோம் (எபி 1:9). தேவனுக்கேற்ற துக்கம் இறுதியில் நம்மை ஆனந்த தைலத்தினால் அபிஷேகிக்கும்.

4. பயம்

பிள்ளைகள் சில சமயம் தகப்பனுக்குரிய பயத்தை இழந்து போகலாம். ஆனால் அடிமையொருவன் ஒருபோதும் தன் எஜமானுக்குரிய பயத்தை இழந்துபோக முடியாது. தேவன் நமக்குப் பிதாவானதினால் அவர் நமது

எஜமான் என்பதை மறந்துபோகவே கூடாது. பயபக்தியுடனேகூட நாம் அவரை நேசிக்க வேண்டும். தாவீது கடவுளை நேசித்தான் என்பதில் சந்தேகமில்லை. பெட்டியின் வரவை ஆடிப்பாடிக் கொண்டாடினான். தேவனது கோபச் செயலுக்குப்பின் தாவீது, "அன்றையத் தினம் தேவனுக்குப் பயந்து: தேவனுடைய பெட்டியை நான் என்னிடத்திற்கு கொண்டு வருவது எப்படி?" என்றான் (1 நாளா 13:12). நாம் எல்லாரும் கடவுளுக்கு பயப்படத்தான் செய்கிறோம். ஆனால் தாவீதைப் போல, "தேவனுக்காக நான் பாடுவது எப்படி? நான் பிரசங்கிப்பது எப்படி? நான் எழுதுவது எப்படி? நான் தலைவனாயிருப்பது எப்படி?" போன்ற கேள்விகளை நம்மைக் கேட்கப்பண்ணும்படி, அவ்வப்பொழுது தேவனது பயங்கரத்தைக் குறித்த புது வெளிப்பாடுகள் நமக்குத் தேவை. அப்படிப்பட்ட மனப்பான்மையே நமக்குப் பாதுகாவல். பெட்டியைத் தன்னிடம் கொண்டுவராமல் தாவீது மூன்று மாதங்கள் கடத்தினான். பின்பு தன் நெஞ்சைத் தடவிவிட்டுக் கொண்டு கொண்டுவரத் துணிந்தான். ஓபேத் ஏதோம் வீட்டிலிருந்து எருசலேமிற்குப் பெட்டியை அகற்றும்போது எவ்வளவாய்த் தொடை நடுங்கியிருப்பானென கற்பனை செய்து பாருங்கள். "**எப்பொழுதும்** பயந்திருக்கிறவன் பாக்கியவான்" (நீதி 28:14). நாம் எதைச் செய்துகொண்டிருக்கிறோமோ அதைத் தேவனுக்கு முன்பாகப் பயத்தோடும் நடுக்கத்தோடும் செய்துகொண்டிருப்போம். அதுவே நம்மை ஞானவான்களாக்கும் (நீதி 1:7).

5. ஆவல்

தவறான தீர்மானங்களும் அவைகளால் ஏற்படும் பாதிப்பும் படிப்படியாய் நம்மைக் குற்றமற்ற வாழ்க்கைக்கு வழிநடத்தும். "தன் **பிழைகளை உணரு**கிறவன் யார்? **மறைவான குற்றங்களுக்கு** என்னை நீங்கலாக்கும். **துணிகரமான பாவங்களுக்கு** உமது அடியேனை விலக்கிக்காரும். அவைகள் என்னை ஆண்டுகொள்ளவொட்டாதிரும்; அப்பொழுது நான் உத்தமனாகி **பெரும் பாதகத்துக்கு** நீங்கலாயிருப்பேன்" என்று தாவீது எழுதுகிறான் (சங் 19:12,13). வேத வசனம் தன்னை எச்சரிப்பதையும், அவைகளைக் கைக்கொள்ளுகிறதினால் கிடைக்கும் மிகுந்த பலனையும் குறித்து அவன் எழுதுகிறான் (வச 11). வசன வெளிச்சத்தில் நமது குற்றங்களைப் பகுத்தறியப் பழகிவிட்டால் அந்த மிகுந்த பலன் நமது பரிசாகும். தேவன் நமது வரங்களைக் கூர்மையாக்கி நமது வழிகளைப் பூரணப்படுத்துகிறார். குயவன் களிமண்ணைத் தன் பார்வைக்குச் சரியாகக் கண்டபடி வனைவதைப் போன்றதிது (எரே 18:4). இப்பரிசுத்தமாகுதலின் பலனை நாம் பெற்று மகிழும்போது தேவனது குமாரனுக்கொப்பான பூரணத்தை அடைய ஆவலாகிறோம் (ரோ 8:29).

6. பக்திவைராக்கியம்

தேவாலய வளாகத்தில் ஆடு, மாடு, புறா விற்கிறவர்களின் நடமாட்டத்தையும் காசுக்காரரின் வியாபார இரைச்சலையும் கண்ட இயேசு கயிற்றினால் ஒரு சவுக்கை உண்டுபண்ணி அவர்களை வெளியே துரத்தியடித்தார். காசுக்காரரது மேசைகளைக் குப்புறக் கவிழ்த்து, காசுகளை இரைத்துச் சிதறி, கால்நடைகளை அடித்து விரட்டினார். புறாக் கடைக்குள் நுழைந்து தன் தகப்பன் வீட்டைச் சந்தைக் கடையாக்க வேண்டாம் என்றும் தங்கள் சரக்குகளை எடுத்துக் கொண்டு வெளியேற வேண்டுமென்றும் அதட்டி விரட்டினார். "அப்பொழுது: உம்முடைய வீட்டைக் குறித்து உண்டான பக்திவைராக்கியம் என்னைப் பட்சித்தது என்று எழுதியிருக்கிறதை சீடர்கள் நினைவுகூர்ந்தார்கள்" (யோ 2:13-17). இவையெல்லாம் தொழுகைக்கு வருகிறவர்களுக்காக விற்கப்பட்டவைகள்தானே என நாம் நினைப்போம். இயேசுவின் கண்ணோட்டமோ வேறு. அவரது கண்கள் அன்னாரது வியாபாரச் சிந்தையையும், இரண்டாந்தரமானவைகளுக்கு முதலிடம் கொடுத்ததையும் கண்ணோக்கிற்று. நாமே தேவனுடைய ஆலயம். எவ்வளவு சுலபமாக நமது கண்கள் கூர்மையிழந்து பார்வை கோணலாகிறது. பிதாவின் வீடு கொஞ்சம் கொஞ்சமாய் உருமாறி நிலைமாறி சந்தைக்கடையாகிப் பின் கள்ளர் குகையும் ஆகிவிட்டதோ? இதேவிதமாய் நம்மைச் சுத்தி கரிக்கும் ஒரு காட்சியை மனோபவனை செய்து பாருங்கள். உன்னதமான தேவன் வாசமாயிருக்கும் ஆலயத்தை நாம் அரைகுறையாய்ச் சுத்தம் செய்யலாமா? ஒரு தோல்வி நம்மை ஆயாசத்திலிருந்து உலுக்கி எழுப்பும் போது, நமது வாழ்க்கையின் குப்பைமேட்டைச் சுத்திகரித்து டெட்டால் தெளிக்க ஒரு பக்திவைராக்கியத்தைப் பிறப்பிக்கிறது. அது நாம் ஆண்டவரையே சார்ந்து ஒவ்வொரு நிமிடமும் அவரது உதவி நாடிக் கதறுவதால் நம்மை "ஜெப வீடாக" மாற்றுகிறது. பரிசுத்தத்திற்கான பதட்டத்தை நம்மில் அது உற்பத்தி செய்கிறது. "பலவீனம்" என்று எண்ணப்பட்ட கெட்டப் பழக்கங்களை அது வேரோடு பிடுங்கியெறியச் செய்கிறது.

7. கண்டிப்பு

பழைய ஏற்பாட்டுத் தீர்க்கர் இராஜாக்களின் பாவங்களை உணர்த்தும் போது உவமானமாய்ப் பேசுவதுண்டு (1 இரா 20:37-43). உவமானத்தில் குற்றவாளிக்கு இராஜா தீர்ப்புரைக்கும்போது அதுவே இராஜாவுக்கும் தீர்ப்பு என்பான் தீர்க்கன். நாத்தான் அப்படித்தான் தாவீதை உணர்த்தினான். இதேனென்றால், நேரடியாக இடித்துரைத்தால் இராஜா தனக்கு மென்மையான தீர்ப்பளிப்பான். அதுவே மனித இயல்பு. பிறரைக் கடினமாய்த் தீர்க்கிறோம். நம்மையோ செல்லப் பிள்ளையாக நடத்துகிறோம். செல்லப்

பிள்ளைகள் கெட்டுப்போவார்களென்பது ஊரறிந்த உண்மைதானே. தவறுகள் நம்மைக் கண்டிப்பாக நடத்தக் கற்பிக்கின்றன, மூக்கணாங்கயிற்றை இழுத்துப் பிடிக்கின்றன. தாவீது நியாயப்பிரமாணத்தைத் தேடி வாசித்து, இரண்டாம்முறை பெட்டியை நகர்த்துகையில் சிறுசிறு காரியங்களிலும் தன்னைக் கண்டிப்பாக நடத்தினான்.

முடிவு

தவறுகள் தங்களது பரிசுத்தமாக்கும் பணியை நிறைவேற்றவேண்டுமானால் அவற்றை அலசிப் பார்ப்பது அவசியம். "அந்த மாடுகளாலேதான்" என்று சுலபமாகச் சொல்லி தாவீது கதையை மூடியிருக்கலாம். நாமும் அப்படித்தான் பலமுறை நமது தவற்றின் வலிக்கும் உண்மையைச் சந்திப்பதை விட்டுச் சப்பைக்கட்டு கட்டுகிறோம்.

தவறிழைத்ததினால் சோர்ந்துபோய் நாம் செய்யத் துவங்கின காரியத்தை விட்டுவிடக்கூடாது. நாம் பின்னே போக முடியாது. ஆனால் முன்னே சென்று காரியத்தைத் திருத்தமாகச் செய்யலாம். தாவீது துவண்டு விட்டுவிடவில்லை. "நான் மறுபடியும் முயற்சி எடுக்கப்போவதில்லை" என்று சொல்வதினால் தேவன் நம்மை வனைவதைத் தடை செய்கிறோம். தவற்றை ஒத்துக்கொண்டு முன்னேறிச் செல்வதே அழகு.

நாம் அனைவருமே தெளிவான சத்தமோ ஒளியோ இல்லாது, சரியாக நமக்குத் தோன்றுகிற பாதையில் நமது அகத்தூண்டுதலை நம்பித்தான் செல்லுகிறோம். நாம் இழைக்கும் ஒவ்வொரு தவறும் நம்மைச் சரியான பாதைக்கு நேரே இழுக்கின்றது.

என் தந்தையிடம் கண் அறுவைச் சிகிச்சைக்காகக் கல்லாத ஒரு கிராமவாசி வந்தார். புறை எடுத்துக் கண்ணாடி போட்டதும் ஆனந்தமாக ஊர் திரும்பினார். ஆறு மாத காலத்தில் துக்கத்தோடு திரும்பி வந்தார்— "எத்தனைத் தெளிவான பார்வையோடு சென்றேன். ஆனால் வர வரப் பார்வை மங்கி இப்போது ஒன்றுமே தெரியவில்லை" என்றார். அப்பா அவரைச் சோதித்துவிட்டு காரணத்தைக் கண்டுபிடித்தார். அவரது கண்ணாடியை எடுத்துச் சுத்தமாகத் துடைத்துப் போட்டுவிட்டார்! கிராமத்தாளுக்கு ஆச்சரியமும் சந்தோஷமும் தாங்க முடியவில்லை. நம்மில் எத்தனை பேர் இந்தக் கல்லாத மனிதனைப் போல நமது தவறுகளைக் காரணங்காணாமலும் கழுவித் துடைக்காமலும் விட்டுவிடுகிறோம். நாளடைவில் நமது தரிசனத்தை இழந்து சுற்றித் திரிவதில் ஆச்சரியமொன்றுமில்லையே.

எனவே பிரியமானவரே, தவறுகளைத் தவறாகப் புரிந்து கொள்ளாதீர்!

5

கர்த்தருக்குப் பலி செலுத்துவோம் வாருங்கள்!

பலியா? இந்த இருபதாம் நூற்றாண்டிலா? அந்நாட்களில் மக்கள் தேவனைப் பிரியப்படுத்தவோ கோபங்கொண்ட கடவுளைச் சமாதானப் படுத்தவோ, மிருகங்களையும் பறவைகளையும் பண்டங்களையும் படைத்தனர். இன்றோ கடவுள் சுலபமான ஆடு மாடுகளின் இரத்தத்தைக் கேட்காமல் மேன்மையான ஆன்மீகப் பலிகளைக் கேட்கிறார் (எபி 9:23; 1 பேது 2:5). பின்வரும் காணிக்கைகளை அவருக்குப் படைப்போமானால் அவையே தேவனுக்குப் பலிகளைவிடச் சிறப்பான சுகந்த வாசனையாயிருக்கும்.

1. பலிகளைவிட உறவுகள்

ஆலயக் காணிக்கை பையில் நோட்டைப் போடப்போகும்போது சிநேகிதனுக்கு உங்கள்மேல் வருத்தம் உண்டென்று சட்டென நினைவு வந்தால் நோட்டு தட்டில் விழாமல் பார்த்துக்கொள்ளுங்கள். ஆராதனையிலிருந்து உடனே எழும்பி இந்த நண்பனைத் தேடிச் சென்று காரியத்தைச் சரிசெய்யுங்கள். பின்பு வந்து காணிக்கை போடுங்கள். முதல்படியே கடினமான படி. எழுந்து சென்றுவிட்டால் மற்றவை தானாய் நடக்கும் (மத் 5:23,24). இப்பகுதி "ஆகையால்" எனத் துவங்குவதேனென்றால் அதின் சூழல் நமது சகோதர சகோதரிகளிடம் காரணமின்றி கோபங்கொண்டு அநாவசியமாக ஒருவரை 'மடையா' என்பதே. நாய் தன் நாவை ஆட்டாமல் வாலை ஆட்டுவதால் அதற்கு நண்பர் ஏராளம். நாவிற்குப் பதிலாக நமது வாலை ஆட்டக் கற்றுக்கொள்வோமானால், ஆகா! ஆன்மீக மானி உறவுகளே எனலாம். பகை இதயத்தை இளைக்கச் செய்யும்.

"தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான்; தேவனே நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர்" (சங் 51:17). தேவ வசனம் கன்மலையை நொறுக்கும் சம்மட்டியாம். அது நம்மை உடைத்து நமது சகோதர சகோதரிகளிடம் சென்று தடம்புரண்ட உறவை மறுபடி

தண்டவாளத்தில் ஏற்றி வைக்கச் செய்யாவிடில் நாம் கன்மலையைவிடக் கடினமானவர்களே.

2. பலிகளைவிடக் கடவுள் மீதும் மனிதர் மீதும் அன்பு

எல்லா வைராக்கியத்தோடும் எல்லா அறிவோடும் முழு ஆன்மாவோடும் முழுச் சக்தியோடும் தேவனை நேசிப்பதோடல்லாமல் நாம் நம்மை நேசிப்பது போலவே மற்றவரையும் நேசிப்பதே சர்வாங்க தகனம் போன்ற பலிகளைவிட முக்கியம் (மாற் 12:33). கிறிஸ்தவ வாழ்வின் தலையும் வாலும் அன்பென்றே இருக்க வேண்டும்.

தேவன் நமது இதயத்தில் முதலிடம்தான் வேண்டுமென்று நிற்கிறார். ஆசாரியன் ஏலி தன் மகன்களுக்கு முதலிடம் கொடுத்ததற்காய்க் கோபித்துக் கொண்டார் (1 சாமு 2:29). பழைய ஏற்பாட்டு நாட்களில்கூட அன்பின்றி செலுத்தப்பட்ட பலிகளைத் தேவன் வெறுத்து முகத்தைத் திருப்பிக்கொண்டார் (ஏசா 1:11). இஸ்ரவேலர் தங்கள் முதுகுக்குப் பின்னே தம்மைத் தள்ளி விட்டதாய் முறையிடுகிறார் (எசேக் 23:35).

நம்மில் பலர் நமது காரியங்களைச் சாதிக்கவே தேவனைத் தேடுகிறோமேயன்றி இதயபூர்வமான அன்பினாலல்ல. தாவீது தேவனை வாஞ்சித்துக் கதறியதுபோல கதறுகிறோமா? (சங் 42:1).

தேவன் ஒரு வேறுபட்ட பலியை விரும்புவதாக எபிரெயரின் ஆக்கியோன் கூறுகிறார்—சமையற்கட்டிலும் வேலை செய்யுமிடத்திலும் தெருவிலும் பகிர்ந்தளிக்கும் பரிவு (எபி 13:16). தேவன்மேல் அன்பும் மனிதன்மேல் அன்பும் கைகோர்த்தே நடப்பவை. துர்ப்பாக்கியமாக, தேவனை நேசிப்பதில் இராட்சதரான பலர் சகவாசிகளிடம் அன்பு காட்டுவதில் குள்ளராயிருக்கின்றனர். மனிதனின் சொத்து அவன் தன் அயலாருக்குப் பாராட்டின தயவே. தன்னை மட்டும் நேசிப்பவன் வர்ணந்தீட்டிய முட்டையோடு.

பரிசேயர் சிலர் இயேசுவின் சீடரைக் குற்றஞ்சாட்டினபோது அவர்: 'நீங்கள் ஏதேதோ பலி செலுத்திவிட்டு இரக்கங்காட்டாமல் போகிறீர்களே. உங்கள் பலிகளைச் சாப்பிடவா விரும்புகிறேன்? நீங்கள் இரக்கங்காட்டுவதையல்லவோ விரும்புகிறேன்' என்றார் (மத் 12:7). பிறரை நோக்கி விரல் நீட்டுமுன் அவர்கள் இடத்தில் நம்மை வைத்துப் பார்ப்போம். "கிறிஸ்து நமக்காகத் தம்மைத் தேவனுக்கு சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்புகூர்ந்ததுபோல, நீங்களும் அன்பிலே நடந்துகொள்ளுங்கள்" (எபே 5:2).

3. பலிகளைவிடத் தியாகம்

செய்கையல்ல சிந்தையே முக்கியம். அந்த விதவை கடவுளுக்கு எவ்வளவு கொடுக்க முடியுமோ அவ்வளவு கொடுக்க விரும்பி தன் பர்ஸையே காலி பண்ணிவிட்டாள். அவளல்லவோ கொடை வள்ளல்! பத்தில் ஒன்று கொடுப்பதற்கே நாம் தாளம் போடுகிறோம். நமது சிந்தையை மாற்றிக்கொள்ளக் காலமாயிற்று. நமது பிச்சைக்காரக் காசிற்காய் தேவன் கையேந்தவில்லை. வெள்ளியும் பொன்னும் அண்டசராசரங்களும் அவருடையவை. தியாகச் சிந்தையே அவர் நம்மிடம் எதிர்பார்க்கிறார். நமது சொகுசுகளையும், 5-ஸ்டார் வசதிகளையும், பெருந்தீனியையும், தாறுமாறான செலவுகளையும், உயர் நிலையின் டாம்பீகத்தையும் இறையரசு விரிவடைவதற்காக விட்டுக்கொடுக்க ஆயத்தமா? வீங்கிப்போயிருக்கும் நமது நவீன வாழ்க்கை முறையிலிருந்து சுரண்டி எடுக்கப்படவேண்டியவை எத்தனை எத்தனையோ!

பிள்ளையில்லாத அன்னாளுக்குப் பல்லாண்டுகள் கழித்து ஒரு பையன் பிறந்தான். அவனை ஆண்டவரது பலிபீடத்தின்மேல் அவரது பணிக்காய்க் கிடத்தினாள். அவள் கொடுத்தது பெரிய காரியமல்ல, காத்துக் காத்துப் பெற்றெடுத்தப் பைங்கிளியைத் தேவனுக்காய்ப் பிரிந்துத் துடித்த தாயுள்ளமே விந்தை. விதவையின் காணிக்கையைப் பணக்காரரின் காணிக்கைக்கும் மேலாக உயர்த்தியது இதுவே!

பிலிப்பியரின் தியாகமான உபசாரங்களைக் குறித்துப் பவுல் எழுதும் போது அவை பலிபீடத்தில் கறி பொரியும் வாசனை போன்று தேவனுக்குப் பிரியமாய்க் கமகமத்தது என்று விவரிக்கிறான் (பிலி 4:18). நமது கலெக்டருக்குக் கொடுக்கத் தயங்கும் கெட்டுப்போன உணவு, நொண்டி, குருடு, மற்றும் வியாதிப்பட்டதைத் தேவனுக்கு அளிக்காமல், இழந்தால் சற்று சஞ்சலப்படுவோமே அப்படிப்பட்ட ஏதாவதொரு ஆருயிர்ப் பொக்கிஷத்தை அவருக்கு அளிப்போம்.

4. பலிகளைவிடச் சேவை

சந்தேகப் பேர்வழிகளோடு இயேசு உணவருந்தியதைப் பரிசேயர் கேள்வி கேட்டபோது அவர் தமக்குப் பலிகள் தேவையில்லை, இரக்கமே தேவை யென்றும், உள்ளிருப்பவர்களைத் தட்டிக்கொடுக்க அல்ல வெளியிலிருப்பவர் களை உள்ளே அழைக்கவே தாம் இவ்வுலகிற்கு வந்ததாகவும் பதிலுரைத்தார் (மத் 9:11-13). கிறிஸ்தவர் பலர் வெயிலில் எரியும் டார்ச் லைட்டுகளைப் போல தங்கள் பாட்டரிகளை வீணடித்துக் கொண்டிருக்கின்றனர். இயேசுவோ இருளான இடங்களில் தம் ஒளியை வீசினார்.

கூலியில்லாமல் ஆலயத்தில் வேலைபார்க்க ஆள் கிடைக்காததைக் கண்டு நொந்துபோன தேவன் அவர்கள் காணிக்கையை நிராகரித்தார் (மல் 1:10). நாம் மிஷனரிகளைத் தாங்கலாம், ஆலயத்திற்குப் பொருட்களை அளிக்கலாம். அது போதுமா? நாம் ஒவ்வொருவரும் ஊர் சுற்றுகிறவருக்கும், பிக்பாக்கெட்களுக்கும், திருடருக்கும், பிச்சைக்காரருக்கும், குப்பை கிளறு பவருக்கும், நமது அக்கம்பக்கத்திலுள்ள கேடு கெட்ட ரவுடிகளுக்கும், போக்கிரிகளுக்கும் நேரடிச் சாட்சியாயிருக்க தேவன் எதிர்பார்க்கிறார். நரகப் பாதையில் நடைபோடுவோருக்கு நம் இதயத்தில் இயேசு சொன்ன ஈவு இரக்கம் கொஞ்சம் இருக்குமானால் மாடுபோல் உழைப்போமே.

5. பலிகளைவிட உடல் அர்ப்பணிப்பு

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் பலிப்பொருள் கொல்லப்பட்டு பலிபீடத்தின் மேல் வைக்கப்படும். இன்று அவ்விடத்தில் நம் உடலே வைக்கப்படவேண்டும் என்கிறது புதிய ஏற்பாடு. தேவனை உவகையூட்டும் உயிருள்ள பலி அதுவே (ரோ 12:1).

நமது உடல்தான் “கோ-இல்;” அதைக் கடவுள் வாழும் வீட்டைப்போல சுத்தமாகவும் புனிதமாகவும் வைக்கவேண்டும் எனச் சிந்திக்கப் பலமுறை தவறி விடுகிறோம். உடலை அசுசிப்படுத்தும் கெட்ட பழக்கங்களை விட்டுவிட சிரத்தை எடுப்பதில்லை. உடல் கட்டுப்பாடே தேவன் விரும்பி ஏற்கும் பலியாம். தன் உடலை அடித்துக் கீழே தள்ளி மேற்கொண்டதாகப் பவுல் எழுதுகிறான் (1 கொரி 9:27). “பலியையும் காணிக்கையையும் நீர் விரும்பவில்லை; ஓர் உடலை எனக்கு ஆயத்தம்பண்ணினீர்” என்றார் இயேசு (எபி 10:5-10). சிலுவையாகிய பலிபீடத்தில் இயேசு கிறிஸ்துவின் உடல் கிடத்தப்பட்டதாலேயே நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம். கடவுளின் சித்தத்தைச் செய்ய, நம்மைப் பரிசுத்தம் பண்ண, இயேசுவின் உடல் வதைக்கப்பட்டது. நம்முடைய பரிசுத்தத் திற்காகவும் மற்றவரது பரிசுத்தத்திற்காகவும் நமது உடலில் எவ்வளவு துன்புறுகிறோம்? பலிபீடத்திலிருந்து எழும்பும் வாசனையிலும் புகையிலும் தேவனது பசி ஆறுவதில்லை. அது வேறே.

6. பலிகளைவிடக் கீழ்ப்படிதல்

தேவனது சித்தத்திற்கு விரோதமாய் நடந்தோமானால் எத்தனை பலிகளும் அவரைச் சமாதானப்படுத்தாது. சவுலின் பலிகளை தேவன் முகர மறுத்ததற்கு இதுவே காரணம் (1 சாமு 15:22). பிரபல தீர்க்கரும், அற்புத ஊழியரும் வெளியே தள்ளி அடைக்கப்பட்டவராய் நிற்கலாம். வெறுமனே ‘இயேசப்பா, இயேசப்பா’ என்று சொல்லுவது நம்மை எங்கும் கொண்டு செல்லாது. கரிசனையான கீழ்ப்படிதல் வேண்டும். அந்த பயங்கரமான நாளில் மெள்ள

மெள்ளப் போய், 'ஆண்டவரே, உம்முடைய செய்தியைத்தான் பிரசங்கித்தோம், பிசாசுகளை அடித்து நொறுக்கினோம், எங்கள் திட்டங்கள் யாவரையும் அசத்திவிட்டன' என்று சொல்வோமானால், 'தவறான இடத்திற்கு வந்திருக்கிறீர்கள். என் பேரைச் சொல்லிப் புகழேணியில் ஏறினீர்கள். உங்களைப் பார்த்து அசந்துபோவதற்கு நான் ஏமாளியா? கெட் அவுட்' என்பார் (மத் 7:21-24).

கீழ்ப்படிய வசதிப்படாவிட்டால் அவரது வார்த்தையைத் தள்ளிவிட்டு அவரைத் தாஜா பண்ண 101 காரியங்களைச் செய்கிறோம். மனம்நொந்து அவரது வார்த்தைக்கு அடிபணியும் இடத்திற்கு வந்து தலை வணங்கி நின்றாலொழிய அவர் நம்மைத் திரும்பிப் பார்ப்பதில்லை. "என் வேதத்தின் மகத்துவங்களை அவர்களுக்கு எழுதிக் கொடுத்தேன்; அவைகளை அந்நிய காரியமாக எண்ணினார்கள். எனக்குச் செலுத்தும் பலிகளின் மாம்சத்தை அவர்கள் பலியிட்டுப் புசிக்கிறார்கள்; கர்த்தர் அவர்கள்மேல் பிரியமாயிரார்" (ஓசி 8:12,13). "பூமியே, கேள்; இந்த மக்கள் என் வார்த்தைகளைக் கேளாமலிருந்து, என் நியாயப்பிரமாணத்திற்குச் செவிகொடாமல் அதை வெறுத்து விடுகிறார்கள்... சேபாவிலிருந்து வருகிற தூபவர்க்கமும், தூர தேசத்தினுடைய சுகந்தப் பட்டையும் எனக்கு என்னத்துக்கு? உங்கள் சர்வாங்க தகனங்கள் எனக்கு விருப்பமல்ல; உங்கள் பலிகள் எனக்கு இன்பமாயிராது" (எரே 6:19,20).

வாழ்வில் எப்பகுதியிலாவது தெரிந்தும் தேவனுக்குக் கீழ்ப்படியாமலிருப்போமானால் வேறு வழிகளில் அவரைச் சமாதானப்படுத்த முயற்சிக்காமல் சரிசெய்ய வேண்டியதைச் சரிசெய்வோம். கீழ்ப்படிதல் கடினமாயிருக்கலாம்; ஆனால் நான் சொல்லுவதை நம்புங்கள்: அதைச் செய்துவிட்டால் அதைப் போன்றதோர் உச்சிக் குளிர்ச்சி வேறொன்றும் கிடையாது!

7. பலிகளைவிட நீதி

கிறிஸ்தவர்கள் குளிர்ந்துபோய் விட்டோம். உலகம் போகிற போக்கிலே நாமும் போகிறோம். ஞாயிறுதோறும் கோவிலுக்குப் போய்விடுகிறோம். மற்ற மக்களுக்கும் நமக்கும் என்ன வித்தியாசம்? கிறிஸ்தவரல்லாதோரை விடக் கண்ணைப் பறிக்கும் விதத்தில் வித்தியாசமான நீதி வாழ்க்கை நாம் வாழவேண்டுமென தேவன் கேட்கிறார். "நீதியின் பலிகளைச்" செலுத்தச் சொல்லி தாவீது எழுதுகிறான் (சங் 4:5). அவனது புதல்வன் கொஞ்சங் கூடவே சொல்லுகிறான்: "பலியிடுவதைப் பார்க்கிலும் நீதியும் நியாயமும் செய்வதே கர்த்தருக்குப் பிரியம்" (நீதி 21:3). நன்னெறி என்பது சரியா தவறா எனச் சிந்தித்துச் செயல்படுவது. சரியானதைச் செய்தால் திடன் பெறுவோம்.

கிறிஸ்தவர்கள் நீதிக்குக் கைகொடுத்து தீமையை வேரறுக்க வேண்டும். நல்லது செய்துவிட்டால் போதாது, தீமையைத் தடுக்கவேண்டும். ஒருவருக்கு அநியாயம் இழைக்கப்படுவதைப் பார்த்துக்கொண்டு சும்மா நிற்பது கோழைத் தனம். போலீசிற்குப் பச்சை நோட்டுகளைத் தள்ளி வாயடைக்கும் சந்தர்ப்பங் களில் ஒரேயொருவர் அமைதியாய் இருக்க மறுத்தால் போதும். வாயடைத்து நிற்காமல் கிறிஸ்தவன் ஒவ்வொருவனும் "வனாந்தரத்திலே கூப்பிடுகிற வனுடைய சத்தமாயிருக்க" வேண்டும். ஊமையருக்காய்க் குரலெழுப்புங்கள். தீமையைத் தடுக்க முடிந்தும் தடுக்காதவன் அதை ஊக்குவிக்கிறான்.

8. பலிகளைவிட விசுவாசம்

விசுவாசச் செயலினால் காயீனைவிட ஆபேல் மேன்மையான பலியைத் தேவனுக்குக் கொண்டு வந்தான். கொண்டுவந்த பொருளல்ல, கொண்டுவந்த விசுவாசமே வேறுபாட்டை உண்டாக்கியது (எபி 11:4). நமது காணிக்கை சிறப்பாவது எப்படி ? வாழ்க்கை தலைகீழாகும்போது, திட்டங்கள் தவிடுபொடியா கும்போது, பாதையில் தடைக்குமேல் தடை வரும்போது விசுவாசத்தில் உறுதியாய்க் காலூன்றி நிற்பதினாலேயே. பிலிப்பி நகரில் தவறான உபதேசக் காற்றுகள் வீசியபோது விசுவாசிகள் தங்கள் கன்னி விசுவாசத்தை உடும்புப் பிடியாய்ப் பற்றிக்கொண்டனர். பவுல் அதை "விசுவாசத்தின் பலி" என்கிறான் (பிலி 2:17). சிறு பிள்ளைகளைப் போல காற்றினால் அலைக்கழிக்கப்படாமல் பெல்ட்டை இறுகக் கட்டிக்கொண்டு "பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காய்ச்" சண்டை போடுவோம்.

கடைசிக்கால மாம்சீகக் கிறிஸ்தவரைக் குறித்துப் பேசுகையில் பவுல் அவர்களை, "விசுவாச விஷயத்தில் பரீட்சைக்கு நில்லாதவர்கள்" என்கிறான். மேலும், "நீயோ என்... விசுவாசத்தையும்... துன்பங்களையும் அறிந்திருக்கிறாய்... அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்" என்று எழுதுகிறான் (2 தீமோ 3:8-12). விசுவாசப் பரீட்சைக்கு நின்று தேறினோமா ? இந்தக் கடைசிக் காலத்தில் விசுவாச வீரராய் இருந்துவிட்டால் போதாது; விசுவாசத் தீவிரவாதிகளாய் இருக்க வேண்டும்.

9. பலிகளைவிடத் துதி

எல்லாவற்றிற்கும் துதி செலுத்தக் கற்றுக்கொள்ளாததினால் கிறிஸ்தவர் பலர் மூழ்கி மூச்சுத் திணறுகின்றனர். தாவீதரசனைச் சோகத்திலாழ்த்தப் போதுமான போராட்டங்கள் சூழ்ந்திருந்தும் அவன், "ஆனந்த பலிகளையிட்டு, கர்த்தரைப் பாடி அவரைக் கீர்த்தனம் பண்ணுவேன்" என்கிறான் (சங் 27:6).

"பிரெய்ஸ் த லார்ட்" என்று சிரிப்பின்றி இதய பாரத்தோடு சொல்வதல்ல. அது சந்தோஷம் தாங்க முடியாமல் கோஷமிட்டுத் துதித்துப் பொங்கிப் பொங்கி நன்றி சொல்வதாகும். கிறிஸ்தவர் என்றாலே சதா பாட்டுப்பாடி மகிழ்கொண்டாடும் ஆனந்தக் கும்பலெனப் பெயர் வாங்க வேண்டும். நம்மைத் துக்கத்திலாழ்த்தி செயலற்றுப் போகச்செய்யும் பூதங்களைத் தள்ளிவிட்டு தேவனில் களிகூறுவதினால் துயரத்தில் மூழ்க மறுத்துவிட வேண்டும்.

உலகக் கவர்ச்சிகள் நமது பரவசத்திற்குக் காரணமாயிராமல் எபிரெயர் புத்தகத்தின் ஆக்கியோன் சுட்டிக்காட்டுவது போல, "நிலையான நகரம் நமக்கு இங்கே இல்லை; வரப்போகிறதையே நாடித் தேடுகிறோம். **ஆகையால்,** அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை அவர் மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம்" (எபி 13:14,15). எதிரிகள் வீட்டை உடைத்து உடைமைகளைக் கைப்பற்று கையில் ஆதி விசுவாசிகள் புன்னகையோடு அவர்களைப் போகவிட்டனர். ஏன்? "பரலோகத்தில் அதிக மேன்மையும் நிலையுள்ளதுமான சுதந்தரம் உண்டென்று" அறிந்ததால்! (எபி 10:34). நம்ப முடிகிறதா? இன்று அப்படி நடக்குமா? உலகக் குட்டையிலேயே ஊறின மட்டைகள் இக்கட்டான சூழ் நிலைகளில் மகிழ்ச்சியாயிருக்கவே முடியாது. பொங்கிப் பொங்கி வழியும் சந்தோஷத்தின் இரகசியம் வரப்போகும் நகரத்தின்மேல் மனதை வைப்பதுதான். ஸ்தோத்திர பலியிட்டு அவரை மகிமைப்படுத்துவோம் (சங் 50:23).

பழைய ஏற்பாட்டுக் காலத்திலும் மக்கள் மற்ற பலிகளோடு ஸ்தோத்திர பலியையும் சேர்த்துக் கொண்டுவர எதிர்பார்க்கப்பட்டனர் (எரே 17:26). புளித்துப்போன ஜெப நேரத்தைத் துதியினால் புனிதமான நேரமாக மாற்றலாமே!

10. பலிகளைவிட ஜெபம்

"துன்மார்க்கருடைய பலி கர்த்தருக்கு அருவருப்பானது, செம்மையானவர்களின் ஜெபமோ அவருக்குப் பிரியம்" (நீதி 15:8).

பரலோகக் காட்சியில் தேவதூதன் பலிபீடத்திற்கு முன் பொற்பாத்திரமேந்தி தேவனுக்குத் தூபவர்க்கம் காட்டுகிறான். பாத்திரத்தை எட்டிப் பார்த்தால் நிறைந்திருப்பது பரிசுத்தவான்களுடைய ஜெபம். பிள்ளை பேசக் கேட்பது தந்தைக்கு எத்தனை ஆனந்தம்! எப்பாடுபட்டாவது சீரான ஜெப வாழ்வைக் காப்பது மனதையும் சித்தத்தையும் அடக்கும் ஒரு கட்டுப்பாடு. அதுவே மேலான பலி. பாருங்கள், இயேசு எருசலேம் தேவாலயத்தில் பலிகளுக்காய் வைக்கப்பட்டிருந்த கால்நடைகளை அடித்து விரட்டி புறாக்களைத் திறந்து விட்டு, "என் வீடு ஜெபவீடு என்னப்படும் என்று எழுதியிருக்கிறது; நீங்களோ

அதைக் கள்ளர் குகையாக்கினீர்கள்'' என்றார் (மத் 21:12,13). அவரது இதயம் எங்கேயிருந்தது ? பக்கா திருடரின் பலிகளிலா, பரிசுத்தவான்களின் ஜெபங்களிலா ? நீங்கள் தினமும் குறைந்தது ஒருமணி நேரம் ஜெபிக்காவிடில் தேவனது சித்தத்திற்கு விரோதமாக ஏதோவொன்றைச் செய்து கொண்டிருக்கிறீர்கள். அந்த ஏதோவொன்று என்னதென்று கண்டுபிடித்து உங்கள் அனுதின அலுவல் பட்டியலிலிருந்து அதை வெட்டித் தள்ளுங்கள். நீங்கள் செலுத்தக்கூடிய எல்லாப் பலிகளையும்விட அதுவே மேலானதாயிருக்கும்.

பலிகள் இன்று இல்லாமல் போய்விடவில்லை. நமது மகாராஜாவுக்கு இந்த ஆன்மீகப் பலிகளைச் செலுத்துவோம் வாருங்கள்!

6
காது கேட்கிறதா?

இயேசு பிரசங்கித்தபோது, அனுபல்லவியைப் போல ஒரு வாக்கியத்தை திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டேயிருந்தார்: "கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன்." அவ்வாக்கியத்தில் எதை இடித்துரைத்தார்? தன் பிரசங்கத்தைக் கேட்ட யாவரும் "கேட்கவில்லை" என்றாரா? ஆம், ஒரு காதில் கேட்டு மறுகாதில் விட்டுவிடுவோரும் இருந்தனர்; வாய்க்குள் ஈ போவது தெரியாமல் கவனித்தவரும் இருந்தனர். மத்தேயு 15:10இல் இயேசு, "நீங்கள் கேட்டு உணருங்கள்" என மொழிந்தார். எனவே, "கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன்" என்று இயேசு சொன்னபோதெல்லாம் தம்மைக் கேட்பவர்கள் தாங்கள் கேட்பதைப் **புரிந்துகொள்ளுதல்** அவசியம் என்பதைத்தான் வலியுறுத்தினார்.

"வாசிக்கிறவன் **சிந்திக்கக்கடவன்**" (மாற் 13:14). வாசிக்கும்போதும் கவனமாயிராவிட்டால் கண்களின் வழியாய்ச் செல்வது மாவு சல்லடை வழியே கொட்டுவதுபோல நமது மூளைக்கு வெளியே கொட்டிவிடும். என்ன வாசிக்கிறோமென்றே தெரியாமல் அரைத் தூக்கத்தில் வாசிக்கிறோம். தீர்மானத்தோடு வைராக்கியமாய் நிறுத்தி யோசித்துப் புரிந்துகொள்ளுதலே வசன வாஞ்சையாம். இச்சிந்தனைக் கட்டுப்பாட்டினால் வேத நெடுஞ்சாலையில் ஓர் ஆராய்ச்சிப் பயணமே துவங்கலாம். அதற்கு ஞானவரம் தேவையில்லை. மாணவன் பள்ளிப்பாடங்களைப் படிப்பதுபோல் படிப்பதே போதும். வேதத்தை வாசிக்கும்போது ஒவ்வொரு வார்த்தையிலும், ஒவ்வொரு வாக்கியத்திலும் 'பிரேக்' போட்டு என்ன வாசித்தோமென சிந்தித்துப் புரிந்துகொள்ள முயற்சியெடுக்க வேண்டும். ஜெபமென்னும் இடைக்கட்டோடு திரும்பத் திரும்ப வாசிக்கும்போது முழுக் கருத்தும் தெளிவாகும். ஆழ்ந்த சத்தியங்கள் புரியும்போது பிரமித்துப்போவதோடல்லாமல் கூடுதல் விருந்திற்கு வாயூற ஆரம்பிப்போம். இதுவே பழக்கமாகிவிட்டால் கஞ்சி குடித்துத் திருப்தியாவது எங்கே?

யாவருக்கும் பிடித்தமான விதைக்கிறவன் உவமையை இயேசு சொல்லி முடிக்கையில், "கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன்" என்றார் (மத் 13:9). தனிமையில் அவரது நெருங்கிய நண்பர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டு விளக்கம் கேட்டனர். இயேசு இவ்விதம் விளக்கினார்: "பரலோக இராஜ்யத்தின் இரகசியங்களை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டது, அவர்களுக்கோ அருளப்படவில்லை. உள்ளவன் எவனோ அவனுக்குக் கொடுக்கப்படும், பரிபூரணமும் அடைவான்; இல்லாதவன் எவனோ அவனிடத்தில் உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும். அவர்கள் கண்டும் காணாதவர்களாயும், கேட்டும் கேளாதவர்களாயும், உணர்ந்துகொள்ளாதவர்களாயும் இருக்கிறபடியினால், நான் உவமைகளாக அவர்களோடே பேசுகிறேன்" (வச 11-13). அவர்கள் புரிந்துகொள்ள முயற்சிக்காததாலேயே இயேசு உவமைகளால் பேசினாரேயன்றி அவர் உவமைகளால் பேசினதால்தான் அவர்கள் புரிந்துகொள்ளவில்லை என்று சொல்வதற்கில்லை. இங்குள்ள வார்த்தைகளைக் கோர்த்துப் பாருங்கள்—"கேளுங்கள்... இரகசியம்... உணர்ந்துகொள்ளுங்கள்." நாம் வாசித்துப் புரிந்துகொண்டால் எந்த இரகசியமும் கிடையாது. ஆனால் கொட்டாவி விட்டுக்கொண்டே வாசிப்போமானால் வேதம் முழுவதுமே புரியாத உவமைகள்தான். புரிந்துகொள்ளுதல் நம்மைத் தீர்க்கர் மற்றும் அரசர், சதுசேயர் மற்றும் பரிசேயர், சீடர் மற்றும் மக்கள் ஆகியோரின் உள் உலகிற்கு அழைத்துச் சென்று நமது சராசரி வாழ்விற்கு மேல் நம்மைத் தூக்கிவிடும். பல துர்வுபதேசங்களுக்கும் நம்மைத் தப்புவிக்கும். வாசிப்பதைப் **புரிந்துகொள்ளாவிடில்** நமது ஆன்மீக மனிதன் குள்ளனாவான் (வச 12). இறுதியில் சுருங்கிச் செத்துப்போவான்.

விதைக்கிறவன் உவமைக்கும் அதின் விளக்கத்திற்கும் இடையில் இயேசு சொன்னதாவது: "விளக்கைத் தண்டின்மேல் வைக்கிறதற்கேயன்றி மரக்காலின் கீழாகிலும் கட்டிலின் கீழாகிலும் வைக்கிறதற்குக் கொண்டு வருவார்களா ? வெளியரங்கமாகாத அந்தரங்கமுமில்லை. வெளிக்கு வராத மறைபொருளுமில்லை. கேட்கிறதற்கு ஒருவன் காதுள்ளவனாயிருந்தால் கேட்கக்கடவன். நீங்கள் **கேட்கிறதைக் கவனியுங்கள்.** எந்த அளவினால் அளக்கிறீர்களோ, அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும். **கேட்கிற** உங்களுக்கு அதிகம் கொடுக்கப்படும்" (மாற் 4:21-24). இதிலிருந்து நாம் புரிவதென்ன ? தமது சத்தியங்களை மறைத்து வைப்பது தேவனது சித்தமல்ல. வேத வசன விளக்கு மூடி வைப்பதற்காக அல்ல. கவனித்து வாசிப்பவனுக்கு மறைவான சத்தியங்களின் பூட்டுகள் திறக்கும். தேவனது வசனத்தைப் **புரிந்துகொள்ள** ஒருவன் எந்த அளவு முயற்சி எடுக்கிறானோ அந்த அளவு அவனுக்கு வெளிப்படுத்தப்படும்.

•

இயேசு தமது விரிவுரையைத் தொடர்ந்தார்: "ஏசாயாவின் தீர்க்கதரிசனம் அவர்களிடத்தில் நிறைவேறுகிறது; அதாவது: காதாரக் கேட்டும் உணரா

திருப்பீர்கள்; கண்ணாரக் கண்டும் (வாசித்தும்) அறியாதிருப்பீர்கள். இந்த ஜனங்கள் கண்களினால் காணாமலும் காதுகளினால் கேளாமலும், இருதயத்தினால் **உணர்ந்து** மனந்திரும்பாமலும், நான் அவர்களை ஆரோக் கியமாக்காமலும் இருக்கும்படியாக அவர்கள் இருதயம் கொழுத்திருக்கிறது; காதால் மந்தமாய்க் கேட்டு, தங்கள் கண்களை மூடிக்கொண்டார்கள் என்பதே'' (மத் 13:14,15).

இயேசுவின் ரசிகர்களில் இரண்டு கூட்டங்களைக் காண்கிறோம். மந்தமான கூட்டம் உவமையைக் கேட்டுச் சென்றுவிட்டது. அடுத்த கூட்டம் அதைக் குறித்துச் சிந்தித்து, ஆத்துமாவைப் பசியாற்றும் அறிவிற்காக ஏங்கி நின்றது. இவர்களே தங்கள் மூளைக்குப் பயிற்சி கொடுத்துப் **புரிந்து** கொள்ளுபவர். நமது வாழ்வின் ஆழமான சில பகுதிகளில் 180° திருப்பம், ஆண்டவரின் குணமாக்கும் தொடுதல், மன்னிப்பின் ஸ்பரிசம் ஆகியவை தேவைப்படுகிறது (மாற் 4:12). முதல் கூட்டம் இந்த மறுரூபமாகும் அனுபவ மின்றிச் சென்றுவிட்டது. ஒவ்வொரு முறை நாம் தேவ வார்த்தையை வாசிக்கும் போதும் **புரிந்துகொள்ள** நமது இதயத்திற்கும் மனதிற்கும் தார் போடு வோமானால் ஜீவ பாதைக்கு நேரே சற்றுத் திரும்பி அந்த சுகமாக்கும், மன்னிக்கும் ஸ்பரிசத்தை அனுபவிப்போம். பலர் வேத வசன வல்லுநரா காததற்குக் காரணம் வேதவாசிப்பு அவர்களுக்கு வெறும் புனிதச் சடங்காகி விட்டதேயாகும். அவர்கள் வாசிப்பதைப் புரிந்துகொள்ளப் பொறுப்பதில்லை.

“இந்த உவமையை நீங்கள் அறியவில்லையா? அறியாவிட்டால் மற்ற உவமைகளையெல்லாம் எப்படி அறிவீர்கள்?'' என்று இயேசு வினவினார் (மாற் 4:13). அதாவது, அவர்கள் கேட்டவைகளைக் குறிப்பெடுத்து வீட்டிற்குச் சென்றும் அதைத் திருப்பிப் பார்க்க இயேசு எதிர்பார்த்தார். அப்படிப்பட்ட காதுகளும் கண்களுமே பாக்கியமுள்ளவைகளாம் (மத் 13:16). பின்னர் அவர் உவமையை விளக்கினார்.

உவமை முழுவதும் நாம் வேதவசனத்தைக் கேட்பது அல்லது வாசிப்பதைப் பற்றியதே. “ஒருவன் இராஜ்யத்தின் வசனத்தைக் கேட்டும் **உணராதிருக்கும்போது** பொல்லாங்கன் வந்து அவன் இதயத்தில் விதைக்கப் பட்டதைப் பறித்துக்கொள்ளுகிறான் (மத் 13:19). நாம் ஒரு வசனத்தைக் கேட்கும்போது அல்லது வாசிக்கும்போது முறையே அது நம் செவிப்பறை யிலும் கண்திறையிலும் விழுகிறது. **புரிந்துகொள்ள** அது போதாது. புரிந்து கொள்ள அது மூளைக்கு எடுத்துச் செல்லப்பட்டு வியாக்கியானம் செய்யப் படவேண்டும். இதற்கு நமது மூளையை ஊக்குவிக்க வேண்டும். முதல் முறை ஒன்றைக் கேட்கும்போது அல்லது வாசிக்கும்போது நமது மூளையில் ஒரு மின்விசை ஓடுகிறது. மறுபடியும் அதையே வாசிக்கும்போது அதே இழையில் மறுபடி மின்விசை பாய்ந்து அதை ஆழப்படுத்துகிறது. கொள்ளைக்

காரன் புதையலைக் கொள்ளையாடுவதுபோல இப்பொழுதுங்கூட பொல்லாங்கன் அதை எடுத்துக்கொள்வது சாத்தியம். ஆனால் நாம் வாசிக்கும் ஒவ்வொரு வார்த்தையையும் குறித்துச் சிந்திக்க நின்று அவ்வசனத்தைப் புரிந்துகொள்வோமானால் அவ்விழை உறுதியாகிறது. நாம் ஒத்தவாக்கியங்களைத் தேடி ஆராய்ந்து சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்வோமானால் மின்இழை ஆழமாய் உழுது செல்கிறது. அப்பொழுது அவற்றை எடுக்க எந்தப் பறவையாலும் கூடாமல் போகிறது. நிச்சயமாய், நாம் **புரிந்து கொள்ளாத** எதுவும் நமக்குச் சொந்தமல்ல.

"நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவனோ, வசனத்தைக் கேட்கிறவனும் (வாசிக்கிறவனும்) **உணருகிறவனுமாயிருந்து,** நூறாகவும் அறுபதாகவும் முப்பதாகவும் பலன் தருவான்" (மத் 13:23) புரிந்துகொள்ளுதல் இல்லாத பட்சத்தில் நாம் செவிடர்தான்! குருடர்தான்! முட்டாழம் (ஜீவத்)தண்ணீரில் நின்றுகொண்டு தாகத்தினால் சாவோம்!

மாற்கு ஏழில் இயேசு இன்னொரு உவமையைச் சொன்னார். "நீங்கள் எல்லாரும் எனக்குச் செவிகொடுத்து **உணருங்கள்...** கேட்கிறதற்கு ஒருவன் காதுள்ளவனாயிருந்தால் கேட்கக்கடவன்" (வச 14,16). வீட்டிற்குள் வந்ததும் சீடர் அவ்வுவமைக்கு நோட்ஸ் கேட்டனர், வாயில் ஊட்டிவிடுவதுபோல. இயேசு, "நீங்களும் இவ்வளவு **உணர்வில்லாதவர்களா?**" எனக் கடிந்து கொண்டார். துவக்கத்தில் இயேசு பொறுமையாய்ப் போதித்தார். நாளாவட்டத்தில் அவர்களே தங்கள் சிந்தனா சக்தியைச் செயல்படுத்திப் புரிந்துகொள்ள எதிர்பார்த்தார். இன்னொரு சந்தர்ப்பத்தில் அவர் சற்று கோபமாகவே சீடரைக் கடிந்துகொண்டார். "இன்னும் சிந்தியாமலும் **உணராமலும்** இருக்கிறீர்களா? இன்னும் உங்கள் இருதயம் கடினமாயிருக்கிறதா? உங்களுக்குக் கண்களிருந்தும் காணாதிருக்கிறீர்களா? காதுகளிருந்தும் கேளாதிருக்கிறீர்களா? நினைவுகூராமலும் இருக்கிறீர்களா?... நீங்கள் உணராதிருக்கிறது எப்படி?" (மாற் 8:17-21). ஞாபக சக்தியும் புரிந்துகொள்ளுதலும் அண்ணன் தம்பிபோல்! எழுதிக்கொள்வதினால் சுலபமாய் நினைவில் வைக்கலாம். பிரசங்கங்களின்போது குறிப்பெடுப்பதினால் ஒழுங்காய்க் கவனிப்போம்; எனவே கூடுதல் புரிந்துகொள்வதினால் நினைவிற்கொள்வதும் சுலபமாகிறது. எனவேதான் அனுதின தியானத்தை எழுதுவது நல்லது. ஆண்டவர் அதிகாலை நமக்கருளும் விலையேறப்பெற்ற முத்துக்களைப் பிசாசு களவாடிக் கொண்டுபோவதை இது தவிர்க்குமானால் இதைச் செய்வது கடினமோ?

புரிந்துகொள்ளும் சிலாக்கியம் பெற்றவர் சீடர் மட்டுமல்ல. ஏனெனில் இயேசு "அவர்கள் **கேட்டறியும்** திராணிக்குத்தக்கதாகவே" பேசினார். அதாவது அவர்கள் புரிந்துகொள்ளும் திறனுக்கேற்றபடியே போதித்தார்.

தனிமையில் கூடுதல் விளக்கம் கொடுத்தார் (மாற் 4:33,34). பரிசுத்தாவியானவரின் போதனையின் கீழ் அவரவருக்குத் தேவன் தந்தருளியுள்ள சக்திக்கேற்பப் புரிந்துகொள்ளலாம். "தேனீர் சுவைப்பது சர்க்கரையினாலல்ல, கலக்குவதினால்" என்கிறோமே. அப்படியே தேவனது வார்த்தையை நாம் அலசாவிட்டால் அது இனிப்பதெப்படி ?

இயேசு அடுத்தடுத்து உவமைகளைச் சொல்லிக்கொண்டு போகையில், "இவைகளையெல்லாம் அறிந்துகொண்டீர்களா ?" (என்ன புரிஞ்சுதா ?) என்று கேட்டார். அதற்கு அவர்கள் "ஆம், அறிந்துகொண்டோம், ஆண்டவரே" என்றார்கள் (மத் 13:51). புரிந்துகொள்ளுதலில் வளர்ந்து வந்திருக்கிறார்கள் என்பது இதில் தெரிகிறது. துவக்கத்தில் கடினமாயிருக்கலாம், ஆனால் பழகப் பழக வளருவோம் (1 கொரி 13:11). அப்படித்தான் இயேசுவும் ஞானத்தில் வளர்ந்தார். அவர் தேவாலயத்தில் போதகர்கள் பேசுகிறதைக் கேட்டுக்கொண்டிருந்தார். அதோடு நின்றுவிடவில்லை; புரியாததைக் கேட்டுத் தெரிந்துகொண்டார். அவர் பேசக்கேட்ட யாவரும் அவருடைய புத்தியையும் அவர் சொன்ன பதில்களையும் குறித்து வியந்தனர் (லூக் 2:46,47).

கேள்விகள் கேட்பது அறிவீனமல்ல; அதுதான் அறிவின் பாதை. சந்தேகங்களை யாரிடமாவது சென்று தெளிவுபடுத்திக்கொள்ள சோம்பல் படக்கூடாது. சில வேளைகளில் சீடர் பயந்தனர். இயேசு அவர்களிடம், "நீங்கள் இந்த வார்த்தைகளைக் **கவனமாய்க் கேளுங்கள்**; மனுக்குமாரன் மனிதர் கைகளில் ஒப்புக்கொடுக்கப்படப்போகிறார் என்றார். அவர்கள் அந்த வார்த்தையின் கருத்தை அறிந்துகொள்ளவில்லை; அது அவர்களுக்குத் தோன்றாமல் மறைபொருளாயிருந்தது; அந்த வார்த்தையைக் குறித்து அவரிடத்தில் விசாரிக்கவும் பயந்தார்கள்" (லூக் 9:44,45; யோ 12:16). கேட்கத் தைரியம் கொண்டிருந்தார்களானால் சம்பவித்தவற்றைச் சுலபமாய்க் கிரகித்திருப்பார்கள், பின்தொடர்ந்த சர்ச்சையையும் தவிர்த்திருப்பார்கள். புரியாதவற்றைப் புரிய முயற்சி எடுக்காததினாலேயே ஆண்டவரோடு நமது உறவு நெருக்கமாயில்லை. அதற்குக் கிரயம் செலுத்த மாச்சப்பட்டுக்கொண்டு, இருக்கிற வேத அறிவு போதுமென்றிருக்கிறோம். ஞானவான் தானியேலும் தன் பெருமையைப் புதைத்துவிட்டுப் புரியாததைக் கேட்டான் (தானி 7:16). எத்தியோப்பிய மந்திரி தான் வாசிப்பது புரியவில்லையென ஒத்துக்கொண்டு உதவி கோரினான். அதுவே அவனுக்கு அற்புத அனுபவங்களுக்கான வாசலைத் திறந்துவிட்டது (அப் 8:30,31).

புதையல் பெட்டகத்தைத் திறப்பதுபோல வேதத்தைத் திறவுங்கள். ஞாபகத்தில் வசனங்கள் அதிகரிக்க அதிகரிக்க அவை ஒன்றோடொன்று இணையத் துவங்கும். நாம் உண்மையாய் முயற்சிப்போமானால் வேதத்தை

அறியும்படி தேவன் நமது மனதைத் திறப்பார் (லூக் 24:45). ஜெபம் நமது மனக்கண்களைத் திறந்து உள்ளத்தைக் கொழுந்துவிட்டெரியச் செய்யும் (எபே 1:17,18; 2 தீமோ 2:7).

புரிந்துகொள்ளுதலில் முக்கியமான இன்னொரு குறிப்புண்டு—என்ன தான் ஆனாலும் சரி, தேவனது வார்த்தைக்குக் **கீழ்ப்படிய** வேண்டுமென்கிற தீவிரவாதம் வேண்டும். "உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் *போதித் தருளும்*" என்ற ஜெபத்தோடு தாவீது நின்றுவிடவில்லை. "என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய *விரும்புகிறேன்*" என்றும் பாடினான் (சங் 143:10; 40:8). நாமோ சொல்லுவது ஒன்று செய்வது ஒன்று. இயேசு யூதர்களிடம், "என் வார்த்தையை நீங்கள் ஏன் **அறியாமலிருக்கிறீர்கள்?** என் உபதேசத்தைக் கேட்க மனதில்லாதிருக்கிறதினாலல்லவா?" என்றார் (யோ 8:43). "அவருடைய சித்தத்தின்படி செய்ய மனதுள்ளவனெவனோ அவன்... அறிந்துகொள்ளுவான்" என்றார் அவர் (யோ 7:17). எசேக்கியே லின் தீர்க்கதரிசனத்தை நம்பவோ, கீழ்ப்படியவோ யூதருக்கு மனமில்லை. எனவே அவன் எளிமையாய்ச் சொன்னாலும், "இவன் உவமைகளை யல்லவோ சொல்லுகிறான்" என்றனர் (எசேக் 20:49). தேவன் கவனித்துக் கேட்கிறவர்; ஆனால் நீங்கள் கவனித்துக் கேட்கிறீர்கள் என்று அறிந்தா லொழிய அவர் உங்களிடம் அதிகம் பேசமாட்டார்.

நமக்கு வேதம் புரியவில்லை; ஏனெனில் புரிந்துகொள்ள நமக்கு விருப்ப மில்லை; ஏனெனில் கீழ்ப்படிதலின் கிரயத்தை நாம் அறிவோம். பாவங்களால் நிறைந்து, பற்பல இச்சைகளால் இழுப்புண்டு எப்போது கற்றாலும் ஒருபோதும் சத்தியத்தை அறிந்து உணராதவர்களாயிருக்கிற பெண்பிள்ளைகளைப் போல நாம் இருக்கக்கூடாது (2 தீமோ 3:7). செத்தாலும் சரி, தேவனது வார்த்தைகளின்படி மட்டுமே நடப்பேன் என்ற அர்ப்பணிப்பு நமக்குத் தேவை. "கேட்கிறவன் கேட்கட்டும், கேளாதவன் கேளாதிருக்கட்டும்; அவர்கள் கலக வீட்டார்" என்றார் தேவன் (எசேக் 3:27). நோவா வாய் கிழிய கத்திக் கொண்டேதான் இருந்தான். ஆனால் ஜலப்பிரளயம் வந்து அனைவரையும் வாரிக்கொண்டு போகுமட்டும் உணராதிருந்தார்கள் (மத் 24:39). வெள் ளத்தைக் கண்டவுடன் திடீரென்று எல்லாம் புரிந்தது—செயல்படத்தான் பிந்திவிட்டது! அத்தனைக் கொடூரமான முடிவு நமக்கு வேண்டாம்.

பலர் வருடா வருடம் "ஆதியிலே" இருந்து "ஆமென்" வரை பிரேக் இல்லாத சைக்கிளில் தடதடவென்று போகும் சடங்கு ஒன்றில் பழகிப் போனவர்கள். அகல உழுவதிலும் ஆழ உழுவது நன்றன்றோ? சத்தை உறிஞ்சிக்கொள்ள வேண்டுமே. இவ்வாண்டு வேதத்தின் அழகை ரசித்து மெதுவே மிதந்து செல்லுங்கள். சில பகுதிகளின் கவர்ச்சி உங்களை ஆக்ரமிக்கும். ஒரு வசனமோ, சொற்றொடரோ துள்ளி விழுந்து மகா பெரிய

வரின் பிரசன்னத்தை உணரச் செய்யும்; அப்படியானால் நின்று அங்கே தானே தோண்டுங்கள். வார்த்தை வார்த்தையாய், வரி வரியாய், வசனம் வசனமாய், அத்தியாயம் அத்தியாயமாய், புத்தகம் புத்தகமாய் கரைத்துக் குடியுங்கள். ஒவ்வொரு வார்த்தையையும் தொலைநோக்கியில் காணுங்கள்; அடுத்து நுண்ணோக்கியில் நோக்குங்கள். மெதுவான பயணத்தில் கண்டு பிடிப்பவை பல. எனவே முடிக்க வேண்டிய தேதியின்றி படியுங்கள். மக்கள் வசனத்தைப் புரிந்துகொள்ளத் துவங்கினால் எழுப்புதல் தாமதிக்காது.

வேதத்தைப் புரிந்துகொள்ள எனக்கு மிக உதவியாய்க் கண்ட பின்வரும் முறையைக் கையாண்டு பாருங்கள். ஒரு குறிப்பேட்டில் எழுதத் துவங்குங்கள். 66 புத்தகங்களுண்டு. ஒரே அத்தியாயமுள்ள புத்தகங்களில் துவங்கினால் ஒரு புத்தகத்தை முடித்த மகிழ்ச்சியை சீக்கிரம் அனுபவிக்கலாம். பிறகு இரண்டு அத்தியாயமுள்ள புத்தகங்கள், பின்பு பெரிய புத்தகங்கள். ஒவ்வொரு அத்தியாயத்தையும் பின்வருமாறு படியுங்கள்.

1. தெரிந்துகொண்ட அத்தியாயத்தைத் திரும்பத் திரும்ப வாசித்து அதன் சாராம்சத்தைக் கிரகித்த பின்னர் பொருத்தமான தலைப்பு ஒன்று கொடுங்கள். எடுத்துக்காட்டாக, "இயேசு தூதரிலும் மேலானவர்" என்பது எபிரெயர் முதல் அத்தியாயத்திற்குப் பொருந்தும் தலைப்பு.

2. அவ்வத்தியாயத்தில் எத்தனை கேள்வி பதில்கள் எழுத முடியுமோ எழுதிப் படியுங்கள்.

3. ஒவ்வொரு இணைப்புச் சொல்லையும் விளக்குங்கள். எடுத்துக் காட்டாக "*ஆகையால்,* அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை அவர் மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம்" (எபி 13:15). அந்த "ஆகையால்" என்பதை விளக்குங் கள். நாம் ஏன் விடாமல் தேவனைத் துதிக்கவேண்டும்? முந்திய வசனத்தைப் பாருங்கள். ஏனெனில் இவ்வுலகில் நமக்கு நிரந்தரமான இடம் கிடையாது; வரவிருக்கும் புதிய எருசலேமுக்காய்க் காத்திருப்பதினாலேயே.

4. அவ்வத்தியாயத்தில் வரும் முக்கியமான கருத்துக்களைக் குறியுங்கள் —நரகம், நியாயத்தீர்ப்பு, பொறுமை,...

5. திரும்பத் திரும்ப வரும் வார்த்தைகள், சொற்றொடர்கள், வாக்கி யங்களை வசனக் குறிப்புடன் குறித்துக்கொண்டு அவை ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்டவையா எனப் பாருங்கள். எதிர்மறைகளைக் குறிப்பதும் பயன் தரும். உதாரணமாக எபிரெயர் 9ஆம் அத்தியாயத்தில் 9,14 வசனங் களில் வரும் "மனச்சாட்சி" என்ற பதம் சம்பந்தப்பட்டது. இரண்டையும்

சேர்த்து வாசிக்கும்போது, காணிக்கைகளும் பலிகளும் நமது மனச்சாட்சியைப் பூரணப்படுத்த முடியாது; கிறிஸ்துவினுடைய இரத்தமே அதைச் செய்ய வல்லது என்பது தெளிவாகிறது. 10:35இல், "ஆகையால், மிகுந்த பலனுக்கேதுவான உங்கள் *தைரியத்தை* விட்டு விடாதிருங்கள்'" என வாசிக்கிறோம். இது என்ன தைரியம்? வசனம் 19 விடையளிக்கிறது. பரிசுத்த தலத்திற்குள் நுழைய இயேசுவின் இரத்தத்தினாலே நமக்கு உண்டான தைரியமே அது.

6. பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவரைக் குறித்து எழுதப்பட்டவற்றை எடுத்தெழுதுங்கள். தேவனைத் தொழுதுகொள்ள அவற்றைப் பயன்படுத்திப் பழகுங்கள்.

7. அத்தியாயத்தின் செய்தியை இரண்டு மூன்று வரிகளில் எழுதுங்கள்.

8. படிக்கும் அத்தியாயத்தில் அப்புத்தகத்தின் கருப்பொருள் தெரிகிறதாவென்று பாருங்கள். முதல் அத்தியாயங்களில் தெளிவாயில்லாவிடினும் போகப்போகத் தெளிவாகும். எபிரெயர் புத்தகத்தைப் படிக்கும்போது ஆக்கியோன் பூரணமாகுதலை மையமாகக் கொண்டு எழுதுகிறார் என்பது தெளிவாகும். கருப்பொருளைக் கண்டுபிடித்துவிட்டால் கடினமான பகுதிகளும் தெளிவாகும். கருப்பொருளை மனதில் கொண்டு புத்தகத்தை மறுபடியும் படித்தால் கூடுதல் தெளிவு பிறக்கும்.

9. தங்க வசனமேதுமிருந்தால் மனப்பாடம் செய்யுங்கள்.

10. சந்தேகங்களையும், புதிதாய்க் கண்டுபிடித்தவைகளையும் குறித்துக் கொள்ளுங்கள்.

11. "நான் எப்படி மாறவேண்டுமென்று தேவன் விரும்புகிறார்?" என்ற கேள்விக்குப் பதிலெழுதுங்கள்.

12. "எனது தீர்மானங்கள்" என்ற தலைப்பில் உங்கள் தீர்மானங்களை எழுதுங்கள்.

அட்டவணையில் நீங்கள் படித்து முடித்த புத்தகத்தைக் குறியிட்டுக் கொள்ளுங்கள்.

இறுதியாக, வேத வியாக்கியானப் புத்தகங்கள், வேத அகராதிகள், ஆராய்ச்சி வேதாகமங்கள் மற்றும் வரைபடங்களையும் பார்த்து அறிவைப்

கடனென்னும் கடலில்...

ஆராதனை நேரத்தில் ஒருவர் உற்சாகமாய்க் கைதட்டி குதித்துக் குதித்து, *"பறந்திடுவேன் நான் பறந்திடுவேன்"* எனப் பாடிக்கொண்டிருந்தார். அதைக் கேட்ட ஒருவர் கொதித்தெழுந்து வந்து, "ஓய், என் கடனைத் தீர்த்துவிட்டுப் பறந்துபோம்" என்றார். கடனெடுத்துவிட்டுப் பறந்துபோவதெப்படி ?

கடனென்னும் பெலிஸ்தியன் பல வீடுகளின் முற்றத்தில் உட்கார்ந்து கொண்டு அவர்களது சந்தோஷத்தையும் சுதந்திரத்தையும் மிதித்து நாசமாக்கிக் கொண்டிருக்கிறான். நாட்டுக் குடிமகனின் கடமையுணர்வோடு வரிகளைச் செலுத்தி பில்களின் தொகையைக் கொடுத்துக் கடன்படாமல் பொறுப்புள்ள வர்களாய் இருக்கவேண்டுமென்பது வேத போதனை (ரோ 13:5-8). ஆனால் நடைமுறையில் பலர் கடன்படுகிறோம்—சில தவிர்க்க முடியாதவை. கணக்கிட்டுச் செலவிட்டால் பல கடன்களைத் தவிர்க்கலாம். பணமாகவோ பொருளாகவோ எதுவாகவோ கடன் வாங்குவது தொல்லைதான்.

கடவுள் ஏழைகளுக்கு மனதுருகி பணக்காரரை அவர்களுக்குக் கடன் கொடுக்க ஏவுகிறார். ரோமர் 13:8ஐயும் மத்தேயு 5:42ஐயும் இணைத்துப் பார்த்தால் முடியாத பட்சத்தில் மட்டுமே கடனெடுக்கலாம் என்பது தெளிவாகும். கடன்படுமுன்பாக "கடன் வாங்கினவன் கடன் கொடுத்தவனுக்கு அடிமை" என்பதை நினைவுபடுத்திக்கொள்ளுங்கள் (நீதி 22:7). கழுத்தாழம் கடனாகிய சொருகு மண்ணில் தவித்துக்கொண்டிருப்பீர்களானால் பின்வரும் கேள்வி களைக் கேட்டுப் பாருங்கள்.

1. கடனடைப்பதில் கரிசனையாயிருக்கிறேனா ?

கடனெடுத்துவிட்டு வசதியாய் மறந்துவிடுகிறவர்களை அறிவேன். வாலிபர் பலர் அரசாங்கக் கல்விக் கடனை அடைக்க சிரத்தை எடுப்பதில்லை. "அரசாங்கம் ஊழல் நிறைந்தது; நான் கடனடைத்தால்தான் அரசு ஓடுமோ ?

அங்கு பணம் கொழுத்திருக்கிறது'' என்பர். ஆனால் வேதமோ கடனடைக் காதவனைப் ''பொல்லாதவன்'' என்கிறது (சங் 37:21). கடனடைத்துவிட்டீர்களா இல்லையா என்பதல்ல காரியம்; கடனைக் குறித்த உங்கள் சிரத்தையைத்தான் அது குறிக்கிறது. இப்படிப்பட்ட பொறுப்பின்மை கடவுளின் கோபத்திற்கு ஏதுவான தீமை என வாசிக்கிறோம் (ரோ 13:4-8). இன்னும் சிலர் வாங்கின பொருளைக் கந்திரகோலத்தில் திருப்பிக் கொடுப்பர். யாத்திராகமம் 22:14 வாங்கின பொருட்களைப் பத்திரமாய்த் திருப்பிக் கொடுக்கப் போதிக்கிறது. அது காணாமற்போனால் அல்லது சேதமடைந்தால் நாம் மன்னிப்புக் கோரி ஈடுசெய்ய வேண்டும்.

கடன் உங்களுக்குப் பதட்டத்தை உண்டாக்கிச் செயல்படத் தூண்ட வேண்டும். மாற்றானது பணத்தையோ பொருளையோ வைத்துக்கொண்டிருக் கிறீர்கள். எண்ணற்ற ஒலி-ஒளி நாடாக்கள், புத்தகங்கள், குடைகள் இன்னொ ருவர் அலமாரிக்குள் ஒளிந்துகொண்டிருக்கின்றன. இரவல் வாங்கின இரும்புக் கோடரி நீரில் மூழ்கிவிட்டதால் ஒருவன் ஓலமிட்டான் (2 இரா 6:5). ''உன் கோடரி லூசாக இருந்தது அதான்'' என்று (நாம் சில சமயம் செய்வதுபோல) அவன் கொடுத்தவன்மேல் திருப்பியிருக்கலாம். ஆனால் துடித்த அவனது மனச்சாட்சியைக் கண்ட தேவன் அவனுக்காய் அற்புதம் செய்தார். திருப்பிக் கொடுக்கத் தீர்மானமாயிருப்பீர்களானால் இரும்பும் மிதக்குமே!

கடன்காரன் திருப்பிக் கேட்கும்போது, ''என்னவோ பெரிசா குடுத்துட்டாரு, கழுத்த நெறிக்கிறாரு'' எனாமல், கள்ளத்தனம் பண்ணாமல் நேர்மையா யிருங்கள். பணிவோடு பேசி அவனோடு நல்லுறவைக் காத்துக்கொள்ளுங்கள் (மத் 5:25). உங்களை நம்பிக் கடன் கொடுத்தானே அதற்கே நீங்கள் நன்றியுள்ளவர்களாயிருக்கவேண்டும். அப்பொழுது மனிதர் தயவை தேவன் கட்டளையிடுவார்.

2. என்னால் முடிந்த அளவு சம்பாதிக்கிறேனா?

வருமானம் என்பது வாய்க்கும் வயிற்றுக்கும் இழுத்துப் பிடிக்கும். எனவே கடன்பட்டவன் மாத வருமானம் போதுமென்றிருக்க முடியாது. அவன் கடின உழைப்பாளியாயிருக்க வேண்டும். உங்கள் வருமானத்தைக் கூட்ட முழு மூச்சோடு முயற்சிக்கிறீர்களா? எந்த வேலையையும் இழிவாய்க் கருதக்கூடாது. இழிவான மனப்பான்மைகள்தான் உண்டேயொழிய இழிவான பணிகள் கிடையாது. பக்க வருமானம் எதையும் குறைவென்று நினைக்கக் கூடாது. போதுமான அளவு உழைத்தால் போதுமான அளவு சம்பாதிக்கலாம்.

முதலாவது குறைவான வட்டியை நாடுங்கள். கூடியவரை மார்வாடியிடம் செல்லாமல் வங்கியில் கடனெடுங்கள். ஒரு கிறிஸ்தவ சகோதரனிடம் வட்டியற்ற

கடன் வாங்குவது இன்னும் நல்லது. வட்டி சில வேளை தலை சுற்றும் அளவிற்கு, அசலையும்விட கூடக்கூடும். வட்டி குட்டிபோட விடாதீர்கள். அசலைக் கழித்துவிட வியர்வை சிந்துங்கள். நாங்கள் வழக்கமாக ஊழியம் செய்துவந்த சேரியில் வேலையற்ற ஒருவருக்குப் புத்திசொல்லி முப்பது ரூபாய் கடனாய்க் கொடுத்தோம். அவர் பூ விற்கத் துவங்கி மூன்றே மாதத்தில் கடனடைத்தார். ஐந்து ஆண்டுகட்குப் பிறகு அதே தொழிலில் கூடுதல் வசதியுடன் காணப் பட்டார். சின்ன எடுத்துக்காட்டு, பெரிய பாடம்!

எஞ்சிய நேரத்தை ஏதாவதொரு தொழில் செய்யச் செலவிடுங்கள். வீட்டில் மனைவி குடிசைத் தொழில் துவங்கலாம். நாங்கள் ஏழு முயல்களும் பத்து புறாக்களும் பொழுதுபோக்கிற்காக வளர்த்தோம். அவை பெருகின விதத்தைப் பார்க்கவேண்டுமே! பிறருக்கும் கற்பிக்கத் துவங்கினோம். வீட்டில் ஊறுகாய், ஜாம்கள், பானங்கள் தயாரித்து விற்கலாம். லாபத்தை மேலும் தொழிலில் ஈடுபடுத்தலாம். கடனுடையவன் பதினொரு மணிக்கு முன்னரோ ஐந்து மணிக்குப் பின்னரோ படுக்கையில் இருக்கக்கூடாது. மதியம் கண்ணயரவோ TV பார்க்கவோ முடியாது. ஐந்து தாலந்துகளை வாங்கினவனுக்கும் ஒரே தாலந்தை வாங்கினவனுக்கும் வேறுபாடு என்ன ? நெற்றி வியர்வைதான்! (மத் 25:20). சிணுங்கிப் பயனென்ன ? தலையில் கைவைத்துக்கொண்டு வீட்டி லிருக்கும் நேரத்தை வீடு வீடாய் ஏறி வேலை கேட்பதில் செலவழித்தால் வழி பிறக்கும்.

3. வருமானத்தைவிட அதிகம் செலவழிக்கிறேனா ?

கடன்பட்ட பலர் அதே வாழ்க்கை முறையைப் பின்பற்றி கடனிலேயே உழல்வதைக் கண்டிருக்கிறேன். மற்றும் சிலர் மாதச் செலவை முன்கூட்டியே கணக்கிடாமல் கூடுதல் செலவழித்துவிடுகின்றனர். சம்பளத்தைத் தொடுமுன் இம்மாதச் செலவுகளைக் கணக்கிடுங்கள். தேவையற்றவைகளை அதினின்று வெட்டுங்கள். அந்த வரம்பிற்குள்ளேயே செலவிடுங்கள். உங்கள் வருமானத் திற்கேற்ப, ஒரு நாளைக்கு இவ்வளவுதான் என்று குறித்து, அதைத் தாண்டா மலிருப்பது ஓர் எளிய முறை. பள்ளிக் கட்டணம், மாத மளிகைச் சாமான்கள் என்று கூடுதல் ஆகிவிட்டால் அடுத்த சில நாட்களுக்குச் செலவைச் சுருக் குங்கள். கணக்கீட்டைத் தாண்டும் சோதனையை மேற்கொள்ளுங்கள். எக் காரணத்தை முன்னிட்டும் வருமானத்தைச் செலவு தாண்டக்கூடாது. ஒரு சிறிய தொகையாவது மாதா மாதம் சேமியுங்கள். அதை உங்களுடன் வைத்தி ருந்தால் செலவழிந்துவிடும். எனவே கடன்காரரிடம் கொடுத்து ரசீது வாங்கிக் கொள்ளுங்கள். ஏதோவொரு பொருள் இல்லாமல் சமாளிக்க முடியுமானால் சமாளியுங்கள். கிறிஸ்து ஜெயந்திக்குத் துணி எடுக்கவேண்டும், உறவினர்

கலியாணத்திற்குப் போகவேண்டும் என்பதெல்லாம் சட்டமல்ல. அரசனுக்குத் தாவீது மருமகன்தான்; ஆனாலும் கஷ்டகாலத்தில் இஷ்டப்படி வாழவில்லையே! வனாந்தரம்தானே!

4. தசமபாகம் கொடுக்கிறேனா?

தேவனுக்குரியதைத் தேவனுக்குச் செலுத்தாவிட்டால் வியாதி, நஷ்டம் என்று வேறு வழியில் பணம் வீணாகும். மல்கியா 3:10 மனப்பாடம்தானே? பஞ்ச காலத்தில் தேவனுக்குரியதை நிறுத்தத்தான் இயல்பாகத் தோன்றும். குறைந்த பட்சம் பத்தில் ஒன்றையாவது தேவனுக்குச் செலுத்தவேண்டும். மேய்ப்பர்கள், மிஷனரிகள், கண்கள் பஞ்சடைந்து வாசலில் வந்து கையேந்தி நிற்கும் சுவிசேஷகர், உபதேசியார்கள், மற்றும் தேவையிலிருக்கும் தேவ ஊழியரை நினைத்துக் கொள்ளுங்கள். பணத்தில் மட்டுமல்ல, உணவு, உடை, செருப்பு, குடை, பலகாரம் எல்லாவற்றிலும். “லேவியனுக்கு உன்னோடே பங்கும் சுதந்தரமும் இல்லாதபடியால் அவனைக் கைவிடாயாக. மூன்றாம் வருடத்தின் முடிவிலே அவ்வருடத்தில் உனக்கு வந்த பலன் எல்லாவற்றிலும் தசமபாகத்தைப் பிரித்து, உன் வாசல்களில் வைக்கக்கடவாய். லேவியனுக்கு உன்னோடே பங்கும் சுதந்தரமும் இல்லாதபடியினால், அவனும், உன் வாசல்களில் இருக்கிற பரதேசியும், திக்கற்றவனும், விதவையும் வந்து புசித்துத் திருப்தியடைவார் களாக; அப்பொழுது உன் கை செய்யும் வேலையிலெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னை ஆசீர்வதிப்பார்” என்று ஒரு பழைய ஏற்பாட்டுப் பிரமாணம் சொல்லுகிறது (உபா 14:27-29; 26:12,13). தொழிலில் ஆசி இல்லையா? இப்படிச் செய்து பாருங்களேன்.

5. ஏழைகளுக்காய்க் கவலை கொள்ளுகிறேனா?

கடனிலிருப்பதால் உங்களை நீங்கள் ஏழை என்று எண்ணலாம். ஆனால் கந்தலோடு வயிறு ஒட்டிய பரம ஏழைகள் இருக்கிறார்களா என்று சுற்றிப் பாருங்கள். அவர்களைச் சந்தித்து விசாரியுங்கள். அவர்கள் வீட்டிற்குச் சென்று உங்களாலியன்றதைச் செய்யுங்கள் (லேவி 25:35-39). பணம் கொடுக்க முடியாவிட்டாலும் உங்கள் பழைய துணிமணிகளையும் மளிகை சாமான் களையும் கொடுக்கலாம். கஞ்சனாயிராதீர்கள். ஓர் ஏழை விதவை எலியாவிற்கு உணவளித்து வட்டியோடு திரும்பப் பெற்றுக்கொண்டாள்! மத்தேயு 18இலுள்ள கடன்பட்டவனைப் போல நீங்களும் உங்களைவிட ஏழைக்குக் கடன் கொடுத் தால், யாருக்குத் தெரியும், அவனது கடனைத் தேவன் தீர்த்ததுபோல உங்க ளுக்கும் செய்யலாமே!

வீட்டுத் தோட்டத்தில் தென்னைமட்டை விழுந்தால் அதை ஏழைகள் எடுத்துச் சென்று கூரை போட்டுக்கொள்ளட்டும், அல்லது விறகு எரிக்கட்டும்.

பழைய துணிகளைப் போட்டுப் பாத்திரம் வாங்காதீர்கள். பாட்டில்கள், டின்களை விற்காதீர்கள். பரண்களை அடைக்காதீர்கள். தேளும் சிலந்தியும் பெருகும். பயன்படுத்தாத பொருட்களை ஏழைகளுக்குக் கொடுத்துவிடுங்கள். தேவன் உங்களை வர்த்திக்கப்பண்ணுவார். உங்கள் மருத்துவச் செலவைக் குறைப்பார் (சங் 41:1-3)! நீதிமான் விசுவாசத்தினால் எப்படிப் பிழைப்பான்? "தன்" அப்பத்தைப் பசித்தவனுக்குப் பங்கிடுவதினால்தானே! (எசேக் 18:16).

6. ஏதாவது ஒரு பகுதியில் தேவனுக்குக் கீழ்ப்படியாமலிருக்கிறேனா?

கடன்பட்டுவிட்டால் நீங்கள் தேவனுக்குக் கீழ்ப்படியாமலிருக்கிறீர்கள் என்பது அர்த்தமல்ல. ஓர் உத்தம தீர்க்கதரிசியும் தன் விதவைக்குக் கடன் வைத்துவிட்டு மரித்துப்போனானே (2 இரா 4). உபாகமம் 28:12,44 யூதருக்குக் கொடுக்கப்பட்ட தேசிய வாக்குகள். புதிய ஏற்பாட்டு விசுவாசிகளுக்கு அவை கட்டாயம் பலிக்கும் என்று சொல்லமுடியாது. ஆனால் பள்ளத்தாக்கு அனுபவங்களின்போது நம்மை ஆராய்ந்து பார்ப்பது நல்ல பயிற்சி. ஆசீர் வாதங்களுக்காய், அதுவும் பொருளாதார ஆசீர்வாதங்களுக்காய், தவறாமல் ஜெபிக்கிறோம். அந்த அளவு நேரம் நமது ஆன்மீக வாழ்வை முன்னேற்ற தற்பரிசோதனையிலும் செலவழிப்போமானால் நமக்கு யாவும் கூட்டிக் கொடுக்கப்படும். "முதலாவது தேவனுடைய இராஜ்யத்தை... தேடுங்கள், அப்பொழுது (வாழ்க்கைக்குத் தேவையான) இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்" (மத் 6:33). இதைச் செய்ய நாம் நெளிவதற்குக் காரணம், தேவன் ஏதாவது கீழ்படியாமையைக் காட்டிவிட்டால் என்ன செய்வது என்ற பயம்தான்.

7. உள்ளவற்றிற்காய்த் தேவனைத் துதிக்கிறேனா?

கடன் தொல்லை அழுத்தும்போது உள்ளவற்றை மறந்து சோர்பில் ஆழ்வது சுலபம். பலர் எதிர்காலத்தைச் சந்திக்கத் தைரியமற்றவர்களாய்த் தற்கொலை செய்து கொள்கின்றனர். உழைக்க ஓர் உடலிருப்பதற்காகவே துதிக்கலாமே. சோர்பை மேற்கொண்டு கடனடைக்க தெம்பைத் தரக்கூடிய பல நல்ல காரியங் கள் நமக்குண்டு. பதறாதீர்கள். கவலைப்படுவதற்குப் பதிலாக ஜெபியுங்கள். விண்ணப்பங்களும் துதிகளும் உங்கள் கவலைகளை ஜெப ரூபமாக்கி உங்கள் ஏக்கங்களை தேவனுக்குத் தெரியப்படுத்தட்டும். அப்பொழுது நீங்கள் அறியுமுன்பாக அமரிக்கை உங்கள் இதயத்தில் குடிகொள்ளும். உங்கள் வாழ்வின் மையத்திலுள்ள கவலையின் இடத்தைக் கிறிஸ்து எடுக்கும்போது என்ன நடக்கிறதென்பது ஆச்சரியமானது (பிலி 4:6,7).

8
உயர்வுக்கு இறங்கவா?

"விருட்சங்கள் தங்களுக்கு ஒரு ராஜாவை அபிஷேகம் பண்ணும்படி போய், ஒலிவமரத்தைப் பார்த்து: நீ எங்களுக்கு இராஜாவாயிரு என்றன. அதற்கு ஒலிவமரம்: தேவர்களும் மனிதரும் புகழுகிற என்னிலுள்ள என் கொழுமையை நான் விட்டு, மரங்களை அரசாளப் போவேனோ என்றது. அப்பொழுது மரங்கள் அத்திமரத்தைப் பார்த்து: நீ வந்து, எங்களுக்கு இராஜாவாயிரு என்றன. அதற்கு அத்திமரம்: நான் என் மதுரத்தையும் நற்கனியையும் விட்டு, மரங்களை அரசாளப் போவேனோ என்றது. அப்பொழுது மரங்கள் திராட்சைச் செடியைப் பார்த்து: நீ வந்து, எங்களுக்கு இராஜாவாயிரு என்றன. அதற்குத் திராட்சைச் செடி: தேவர்களையும் மனிதரையும் மகிழப்பண்ணும் என் ரசத்தை நான் விட்டு மரங்களை அரசாளப் போவேனோ என்றது. அப்பொழுது மரங்களெல்லாம் முட்செடியைப் பார்த்து: நீ வந்து, எங்களுக்கு இராஜாவாயிரு என்றன. அதற்கு முட்செடியானது மரங்களைப் பார்த்து: நீங்கள் என்னை உங்களுக்கு இராஜாவாக அபிஷேகம் பண்ணுகிறது மெய்யானால், என் நிழலிலே வந்தடையுங்கள்; இல்லாவிட்டால் முட்செடியிலிருந்து அக்கினி புறப்பட்டு லீபனோனின் கேதுரு மரங்களைப் பட்சிக்கக்கடவது என்றது" (நியா 9:8-15).

விநோதமானதோர் உவமானமிது. தங்கள் அழைப்பைக் காத்துக்கொள்ள வேண்டி அரியணையை உதறித் தள்ளின மூன்று உரமுள்ள மரங்களை இங்கே காண்கிறோம். விசுவாசிகளின் மூன்று அடிப்படை அழைப்புகளை இது குறிக்கிறதென நினைக்கிறேன். ஒலிவமரம் கொழுமையையும், தனி வாழ்வின் ஆன்மீகச் செழுமையையும் குறிக்கிறது. அத்திமரம் ஆவியின் மதுரமான கனிநிறை வாழ்வைக் காட்டுகிறது. திராட்சைச் செடி ஆவியின் அபிஷேகமும் வல்லமையும் நிறைந்த வாழ்வை ஒப்புமைப்படுத்துகிறது.

விசுவாசியொருவன் தனக்குக் கொடுக்கப்பட்ட அழைப்பையன்றி மேலான தொரு அழைப்பு வேறில்லை எனத் திடநிச்சயமாயிருந்தாலன்றி கவர்ச்சியும் அதிகாரமும் ராஜ கம்பீரமுமாகத் தோன்றும் வேறொரு அலுவலுக்கு ஈர்க்கப்படு

வானென்பதில் ஐயமில்லை. இம்மூன்று மரங்கள் நமது அழைப்பை நாம் உறுதியாகப் பற்றிக்கொண்டு, அளிக்கப்பட்ட உன்னதமான பணியைச் செய்து கொண்டிருக்கப் பணிக்கின்றன. நம்மை சுற்றிலும் எண்ணற்ற குரல்கள் நம்மை அழைத்து: வந்து பார், மகிமையும் கனமும் உனதாகுமென வேறொரு அலுவலுக்கு அழைக்கின்றன. ஆனால் அந்த உயர்வுக்கு நாம் இறங்க வேண்டுமா? விசுவாசிகளுக்கு இம்மூன்று நிலைகளில்தான் விட்டுக் கொடுக்க அதிகமான சோதனைகள் வருகின்றன.

ஒலிவ மரம்

நமது 24மணி நாளில் கூடுதல் ஒரு காரியத்தைச் செய்ய ஏற்றுக்கொள்ளும்போது முதலாவது அடிவாங்குவது நமது தனித்தியானம்தான். ஏனெனில் தியானமின்மையால் எதுவுமே பாதிக்கப்பட்டதாகச் சில காலம் தெரியாது. ஒலிவ மரம் அழைப்பை எடை போட்டது; பின்னர் குப்பையில் எறிந்துவிட்டது. தன் அமைதியான வேலையே போதுமென அரசப் பட்டத்தை நிராகரித்துவிட்டது.

விசுவாசிகள் மணலென பெருகும் இக்காலத்தில் ஒரு சிலரே ஆண்டவரோடு அவசரமின்றி உறவாட நேரம் ஒதுக்குகின்றனர். அனேகர் தினத் தியான நூல்களிலேயே காலத்தை ஓட்டுகின்றனர். அது, நல்ல உணவிற்குப் பதிலாக சத்து மாத்திரை ஒன்றைப் போட்டுக்கொள்வது போலாகும். அவர்கள் மெலிந்திருப்பதில் வியப்பில்லையே. சாப்பாட்டிற்குக் *கூடுதலாக* சத்து மாத்திரை போட்டுக்கொள்ளலாம், சாப்பாட்டிற்குப் *பதிலாக* அல்ல.

முகத்திற்குக் களையூட்டுவது எண்ணெய் (சங் 104:15). ஆண்டவர் பாதம் எத்தனை அதிகமாக அமருகிறோமோ அத்தனை அதிகமாக நமது முகம் களையேறும். இடைவிடாத எண்ணெய் ஓட்டமே தொடர்ந்து நம்மை எரிந்து பிரகாசிக்கச் செய்யும் (சக 4:12). "எண்ணெய் ஊற்றிடும், நான் ஜொலிப்பேன்" என்று பாடுவதில் பயனில்லை. தினமும் அவர் சமூகத்தில் அமர்ந்திருந்தால் அல்லவோ அவர் எண்ணெய் ஊற்றுவார்? ஆசரிப்புக் கூடாரத்திலும் எபிரெய வீடுகளிலும் விளக்கு எரிக்க ஒலிவ எண்ணெய் பயன்படுத்தப்பட்டது (யாத் 27:20). நமது இல்லத்தையும் சபையையும் பிரகாசிப்பிக்கிறோமா? இல்லையேல் நமது தனித் தியான வாழ்வைச் சரி செய்வது அவசியம்.

தூக்கத்தில் நடப்பவர்களைப் போல ஜெபித்து வேதம் வாசித்தால் நமது முகக் களையை இழப்பது திண்ணம். காயமுற்றோருக்குக் காயமாற்றும் வசனம் நம்மில் இருக்காது (லூக் 10:34). சட்டியில் இருந்தால்தானே அகப்பையில் வரும்? ஒலிவ எண்ணெயிலுள்ள நல்ல கொழுப்புச்சத்து

இதய நோயைக் குணமாக்க வல்லது. தனித்தியானம் செய்வதும் அதற்குத் தானே. உயர்வுக்கு அழைக்கும் குரல்களுக்குச் செவியடைத்து, தனித் தியானத்தைத் தியாகம் செய்வதால் அடையக்கூடிய ஆசீர்வாதங்களை வெறுத்தால் மட்டுமே தேவனிடமும், மனிதரிடமும் புகழ் பெறலாம். இல்லா விடில் தேவனிடமும், மனிதரிடமும் புகழ் இழந்து புகைகிற திரிகளாகி விடுவோம். TV, கதைப்புத்தகங்கள், விடிய விடிய உட்கார்ந்து பேசுவது இவையெல்லாம் மிகத் தேவையான உற்சாகத்தைக் கொடுத்தாலும் இவை களால் வரும் களைப்பு நாம் தேவனோடு உறவாட முழங்கால்படியிடும்போது நமது மூளையை மந்தமாக்கும்.

எத்தனை பேர், வேலையில் ஒய்வு பெறப்போகிறவர்களும்கூட, பெயரோடு இரண்டெழுத்தைக் கூட்டிக்கொள்ள மேற்படிப்பில் சேர்வதால் தியான வேளைகளைத் தியாகம் செய்கின்றனர்! போதனைப் புத்தகங்கள், வேத விளக்கங்கள், வேத அகராதிகள், பிரபல ஆசிரியர்களால் எழுதப்பட்ட வேத ஆராய்ச்சி நூல்கள் போன்றவற்றை இறையியல் மாணவர் கரைத்துக் குடித்தும், தேவனோடு பேசவோ அவர் சத்தம் கேட்கவோ தவறிவிடலாம். ஊழியர்கள் தங்கள் குறிகளை நிறைவேற்றும் வேகத்தில் தேவனோடு நெருங்கும் தாகத்தை மறந்துவிடலாம். இன்றைய உலகில் நாம் ஒடும் வேகத்திற்கு நாம் செலுத்தும் உயர்ந்த விலைக்கிரயம் அதுவே. அவர்கள் பிஞ்சுகள் உதிர்ந்த ஒலிவமரங்கள் (உபா 28:40). ஒலிவமரம் பொலிவா யிருக்கலாம், பூத்துக் குலுங்கலாம், பிஞ்சு நிறைந்திருக்கலாம், ஆனால் அவை பழுக்காவிடில் பயனென்ன? தியானத்தில் கனியக் காத்திருக்க இன்று அனேகருக்குப் பொறுமையில்லை.

கூட்டங்களும் முகாம்களும் நம்மை மேடையில் ஏற்றலாம். அப்போஸ்தலர் தமது அலுவல்கள் பெருகும் தருவாயில் அபாய விளக்கைக் கண்டு "தேவை யில்லாத" பதவிகளை ஏற்க மறுத்துவிட்டனர். ஜெபம் பண்ணுவதற்கும் தேவ வசனத்தைப் போதிக்கிற ஊழியத்திற்குமே தாங்கள் அர்ப்பணம் என்று விட்டனர் (அப் 6:4). அவர்கள் வேதத்தை எழுதினர் என்பதில் வியப்பேதுமுண்டோ? தேவனைச் சேவிக்கும் எளிமையான வாழ்வை விட்டு பெரிய பெரிய மேடை தேடித் தாவிச் சென்றோர் பலர் சமதள வாழ்விலேயே அமர்ந்துவிட்டனர். ஆசைகள் நல்லதுதான்; ஆனால் அவை நமது தியான வாழ்வை நாசமாக்கிவிடாமல் பார்த்துக்கொள்ளாவிடில் ஆபத்துதான்.

நமது பிள்ளைகளும் ஒலிவ மரங்களைப் போலிருக்கவேண்டும் (சங் 128:3). பெற்றோரிடம் இல்லாத பழக்கங்கள் பிள்ளைகளில் முளைக்காதே. எனவே நமது கொழுமையை அழித்துவிடும் உயர்வுகளெனும் வெட்டுக் கிளிகளை நசுக்கித் தள்ளுவோம் (ஆமோஸ் 4:9). அப்பொழுது நமது அலங்காரம் ஒலிவமரத்தின் அலங்காரத்தைப் போலிருக்கும் (ஓசி 14:6).

தியான வேளைகள் பிரசங்க ஆயத்த வேளைகளாகிவிட்டால் ஒலிவப் பழங்களை ஆலையாடினபோதிலும் அதின் எண்ணெயைப் பூசிக்கொள் ளாதவர்கள் போலிருப்போம் (மீகா 6:15).

உலகக் காரியங்களில் மதிமயங்கிப் போனதால் வேதத்தை ஆராய்ந்து படிப்பதை விட்டு வெறுமனே வாசிப்பதிலேயே திருப்தியாகிவிடுகிறோம். ஒருவர் பேசுவதைக் காதில் வாங்கிக்கொள்ளாமல் கேட்பது போன்றது அது. நம்மில் பலரோடு தேவன் பேசுவதை நிறுத்திவிட்டதற்குக் காரணம் அதுவன்றி வேறென்ன ? நமது மனது சீற்றமுற்ற சிம்சோனைப்போல நமது ஒலிவத் தோப்புகளைக் கொளுத்திவிட, நரிவாலில் பந்தம் ஏற்றி அனுப்பி விட்டுக்கொண்டேயிருக்கும் (நியா 15:5). மனதைச் செலுத்திப் படிக்காவிடில் காலியாகவே இருப்போம். சந்நிதி ஸ்தானத்தின் வாசல் கதவுகள் ஒலிவ மரத்தாலானவை என்பதை மறந்துவிடக்கூடாது (1 இரா 6:31,32). நமது தனித் தியானமே கடவுளது சந்நிதிப் பிரசன்னத்திற்கு வாசலைத் திறந்து விடும். இங்கு ஒழுங்குள்ளவர்களே தேவாலயத்தில் பச்சையான ஒலிவமரம் போலிருப்பார்கள் (சங் 52:8). அவர்களே நல்ல கனிநிறை நேர்த்தியும் பச்சையுமான ஒலிவ மரமாயிருப்பார்கள் (எரே 11:16).

பயனற்ற காட்டொலிவ மரங்களாகிய நாம் தேவ தயவால் ஒட்டு கட்டப் பட்டு நல்ல மரங்களானோம் (ரோ 11:17). எனவே அந்த அழைப்பை நினைவில் கொண்டு தேவனும் மனிதரும் புகழுகிற நமது கொழுமையை விட்டு விடாதிருப்போம். அது சுலபமல்ல. நெருக்கத்திலும் நிலைத்திருக்க வேண்டும். ஆனால் ஆலையில் இடித்துப் பிழியும்போதுதானே எண்ணெய் கசியும் ? (மீகா 6:15).

அத்திமரம்

'உன் கனிகளை இங்கே தந்துவிட்டு உயர்வைப் பெற்றுக்கொள்' என்னும் ஒரு வாய்ப்பு வரும்வரை நாம் மிக மிக நல்லவர்கள்தான். அந்த உயர்வை நமது மதுரத்தையும் கனிகளையும் தியாகம் செய்தாவது பெற்றுக்கொள்ள முயற்சிக்கிறோம். அரியணைக்காக நமது அருங்கனிகளை விற்றுப்போட் டோமோ ?

அரசனாவதின் நன்மைகளையும் தீமைகளையும் அத்திமரம் எடை போட்டுப் பார்த்திருக்கும். ஒருவேளை இராஜாவாயிருந்துகொண்டே கனி கொடுக்கலாமே எனவும் சிந்தித்திருக்கலாம். ஆனால் அது கூழுக்கும் மீசைக்கும் ஆசைப்பட்ட கதையாகும் என்று ஒரேடியாய்த் தீர்மானித்து விட்டது. வீட்டிலும் பிறர் வற்புறுத்தலால் மனப்போராட்டம் இல்லாமலா இருந்திருக்கும் ? பயித்தியம் என்றும் சிலர் பட்டம் சூட்டியிருக்கலாம்.

ஆனால் அத்திமரமோ வெள்ளியையும் பொன்னையும்விட, மகுடத்தையும் அரியணையையும்விட, மதுரமும் தனியுமே என் பொக்கிஷம் என உறுதியாய் நின்றுவிட்டது.

கனிகொடுத்தலைக் காணாமல் விட்டதுபோல் கிறிஸ்தவ வாழ்வில் எப்பகுதியும் விடப்பட்டுப் போகவில்லை. கடந்த காலத்திற்காக இரண்டு சொட்டுக் கண்ணீர் வடித்து முழுகி எழும்புவதல்ல கிறிஸ்தவ வாழ்வு. அது நெற்றி வியர்வை நிலத்தில் விழும்படி கனிகொடுக்கப் பாடுபடுதலாகும். கனிகளின் முதற்பலனைப் புசிப்பவர்கள் நாமே என அறியாதவர்களாக நம்மை நாமே ஏமாற்றி, கனிகொடுத்தலை விட்டுக் கவர்ச்சிகளைப் பற்றிக் கொள்ளுகிறோம். "அத்திமரத்தைக் காக்கிறவன் அதின் கனியைப் புசிப்பான்" (நீதி 27:18). ஆதாயமாகத் தோன்றும் பதவியையோ பொக்கிஷத்தையோ நாடி எத்தனை முறை நமது இனிமையை இழந்திருக்கிறோம்?

அடுத்து நாம் கடவுளை ஏமாற்றுகிறோம். இயேசு பசியடைந்து வழியோரத்தில் ஓர் அத்திமரத்தைக் கண்டு, அருகில் சென்று, அதில் இலைகளையன்றி வேறொன்றையுங் காணவில்லை (மத் 21:19). அது எல்லோரது கண்களிலேயும் மிளகாய்ப்பொடி தூவிக் கொண்டிருந்தது! எனவே இயேசு அம்மரத்தைச் சபித்தார். அத்திமரத்தில் ஒரு விநோதம் என்னவென்றால், இலை தோன்றுமுன்னே அதில் கனி தோன்றும். ஆகவே இலை நிறைந்த மரம் அது கனிகாலமாயில்லாவிடினும், கனிகள் உண்டு என்பதைக் குறித்தது. வெளிவேடமாய் நற்குணசாலியாய் நடிப்பவர் ஏமாற்றுக்காரர், சீக்கிரமாய்க் காய்ந்து போவர் (வச 20). எஜமான் அதை வெட்டிப் போடவும் கட்டளையிடலாம் (லூக் 13:7). நமது இச்சைகளை நாடிப் போய் நமது எஜமானை ஏமாற்றிக் கொண்டிருக்கிறோமா? நமது எஜமான் திராட்சைச் செடியில் மட்டும் திருப்தியடைகிறவரல்ல. எனவேதான் தனது "திராட்சைத்தோட்டத்தில் ஓர் அத்திமரத்தை" நட்டார். தன்னைத் திராட்சைச் செடிகள் சூழ்ந்திருக்க அவரோ அத்திமரத்தைத் தேடிச் சென்று கனி தேடி ஏமாந்து போனார். மூன்றாண்டுகள் வந்து வந்து அண்ணாந்து பார்த்து நின்றார். ஆவியினால் நிறைந்த தம் மக்களிடம் அவர் பசியோடு கனி தேடியும் அவர்கள் அவரை ஏமாற்றிவிட்டபடியால் அவர் பொறுமையிழந்துவிட்டார். இனியும் காலம் செல்லாது.

ஆதாமும் ஏவாளும் விசுவாசம், இச்சையடக்கம் என்னும் கனிகளற்றவர்களாகத் தங்களை அத்தி இலைகளால் மூடிக்கொண்டனர் (ஆதி 3:7). நமது 'லாபங்களை' சீ என்று எறிந்துவிட்டு நமது வாழ்வைச் சுற்றிலும் கொத்தி, எருபோட்டுச் சீர்ப்படுத்தாவிடில் நம் கதியும் அதுதான். அவரவர் தம் தம் அத்திமரத்தின் கீழ் குடியிருப்பது மகிழ்ச்சியையும், வளத்தையும், பயமின்றிச் சுகமாயிருப்பதையும் குறிக்கும் (1 இரா 4:25; மீகா 4:4). கனி தரும் மரமாயிருந்தால் இவற்றில் எவ்வளவும் குறைவுபட மாட்டோம்.

கடவுள் நம்மை அத்திமரத்தில் முதல்முறை பழுத்த கனிகளைப்போல கண்டுபிடித்தார் (ஓசியா 9:10). ஆனால் அரியணையின் அலங்காரத் தோரணங்கள் நம்மை நெரித்துக் கனியற்றவராக்கிவிட்டன. நமது கிறிஸ்தவப் பண்புகள் அரிக்கப்படும் இடத்தில் இருக்கிறோமா? அப்படியானால் அது நமக்குரிய இடமல்லவே. அன்பின்மை, மகிழ்ச்சியின்மை, கசப்பு, கோபம், முரட்டுத்தனம், குதர்க்கம், நம்பகமின்மை, தலைக்கனம், இச்சை ஆகிய வெட்டுக்கிளிகள் நமது அத்திமரத்தைத் தின்றுவிட்டனவா? (சங் 105:33; ஆமோஸ் 4:9). உடனடி நடவடிக்கை எடுக்காவிடில் அவை நம் பட்டையை உரித்துத் தின்று போடும் (யோவேல் 1:7). நமது மதுரமான அழைப்பைவிட்டு இராஜாவாவதினால் நம்மையே நாம் முட்டாளாக்கிக் கொள்ளாதிருப்போமாக. அப்படியானால் மிகுந்த பலனைத் தருவோம் (யோவேல் 2:22). அந்த நாளிலே நமது அக்கம் பக்கத்தினரை நமது அத்திமரத்தின் கீழ் வரவழைப்போம் (சக 3:10). நமது சுற்றுப்புறத்திற்கு ஆசீர்வாதமாவோம்.

மத்தியக் கிழக்கு நாடுகளில் அத்திப்பழம் சத்துணவாகப் பயன்படுத்தப் பட்டது. அத்திப்பழ அடைகளை பிளவைகளில் போட்டு சுகப்படுத்தினர் (ஏசா 38:21). ஆம், நமது அயலகத்தாரின் பசியைப் போக்கி, வியாதிகளை நீக்குவோம். அத்திமரமாக நமது அழைப்பிலே தரித்திருந்தால் தேவன் நம்மை யாவரும் வியக்கும் விடுகதையாக்கி, "பட்சிக்கிறவனிடத்திலிருந்து பட்சணமும் பலவானிடத்திலிருந்து மதுரமும் வந்தது!" எனக் களிகூறச் செய்வார் (நியா 14:14).

திராட்சைச் செடி

திராட்சைச் செடிக்குத் தேவனையும் மனிதரையும் மகிழப்பண்ணும் தன் ரசத்தை விட்டுவிட மனமில்லை. ஆகவே இராஜாவாவது என் அழைப்பல்ல என்று விட்டது. புதைத்து வைத்து திரும்பக் கொடுக்கவா தேவன் தமது ஆவியின் வரங்களை நமக்குக் கொடுத்திருக்கிறார்? வரங்களை விருத்தியாக்குகிறோமா? நாளெல்லாம் உலக அலுவலாக ஒடி ஒடி உழைத்து விட்டு ஊழியம் செய்ய முடியாததற்குச் சாக்குச் சொல்லுகிறோம். நொண்டிக் குதிரைக்குச் சறுக்கினது சாக்காம். சாக்குப்போக்குகளின் இரகசியம் என்ன தெரியுமா? பட்டம், பதவி, பணம்!

"எனக்குத் தாலந்து இல்லை" என்று யாரும் சொல்லமுடியாது. ஒவ்வொருவருக்கும் ஒரு தாலந்தாவது உண்டு. பலர் 40 நாள் உபவாசித்துவிட்டு உலகைக் கலக்கும் வரங்களுடன் வெளிப்பட எதிர்பார்க்கின்றனர். ஆனால் அப்படி நடந்துவிடுவதில்லை. பிறருக்காக நேரம் ஒதுக்கவேண்டும். காயமுற்றோரையும் மரித்துக்கொண்டிருப்போரையும் அரவணைக்கவேண்டும்.

“மடிந்துபோகிறவனுக்கு மதுபானத்தையும், மனங்கசந்தவர்களுக்குத் திராட்சை ரசத்தையும் கொடுங்கள்; அவன் குடித்துத் தன் குறைவை மறந்து, தன் வருத்தத்தை அப்புறம் நினையாதிருக்கட்டும். ஊமையனுக்காகவும், திக்கற்றவர்களெல்லாருடைய நியாயத்திற்காகவும் உன் வாயைத் திற. உன் வாயைத் திறந்து, நீதியாய் நியாயந்தீர்த்து, சிறுமையும் எளிமையு மானவனுக்கு நியாயஞ்செய்” (நீதி 31:6-9). நமது அமைதியினால் பாவம் செய்கிறோமோ? எளியவனது உரிமை நிராகரிக்கப்படுவதைக் கண்டும் கண்களை மூடிக்கொள்கிறோமா? மூளை வளர்ச்சியற்றதொரு வாலிபனை ரிக்ஷாக்காரர் சிலர் அடிப்பதைக் கண்டேன். நான் தடுத்து நிறுத்தியிருக்கக் கூடும், ஆனால் செய்யத் தவறினேன். இன்னும் என் மனச்சாட்சி என்னை மன்னிக்கவில்லை. ஆனால் அன்றிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக தைரிய மடைந்து வருகிறேன். நாம் எல்லாருமே நமது கடந்தகாலத் தோல்விகளை எதிர்காலத்தைக் கட்டியெழுப்பும் கற்களாக்கலாம்.

கள்ளர்களால் அடிப்பட்டவனது காயத்தில் திராட்சை ரசத்தை ஊற்றியது ஒரு சமாரியனே (லூக் 10:33-35). ஐயர்வாள் ஆராதனை நடத்த அவசரமாய்ச் சென்றுவிட்டார். கோயில்குட்டியும் சிலுவைக்குப் பாலிஷ் போட சீக்கிரமாய் நடை போட்டான். ஐயகோ! தேவனது ஆசாரியரும் லேவியருமாகிய நாம் குரங்குகளைப் போல பாட்டிலுக்குள் கையைவிட்டுக் கடலையைப் பற்றிக் கொண்டிருப்பதால், தெருவில் கிடப்பவனது காயத்தில் ரசத்தை ஊற்ற கையற்றவர்களாகிவிட்டோம். கையிலே திராட்சை ரசத்தை வைத்துக் கொண்டு நாம் மரங்களை ஆளச் சென்றுவிட்டதால் இன்று பல்லாயிரங்கள் நரகத்திற்குள் சரிந்து விழும் அபலத்தை உணர்வோர் யார்? ரசத்திற்கு நிகராகுமோ ராச சிம்மாசனம்?

எத்தனை எத்தனை விசுவாசிகள் தங்களுக்குத்தானே கனி கொடுக்கும் பலனற்ற திராட்சைச் செடியாயிருக்கின்றனர்! (ஓசி 10:1). அவர்கள் தரிசனம் சிம்மாசனம், அவர்களது சாதனை அந்நிய பாஷை, அவர்களது வைராக்கிய வாஞ்சை தங்கள் ஆலயத்தை ஆராதிப்பது. காயமுற்றோரோ அவர்கள் சிந்தையிலேயே கிடையாது. ஐயோ பாவம், எத்தனை வேலை அவர்களுக்கு. தெருவில் கிடக்கும் அநாதைக்கு ரசம் வார்க்க அவர்களால் குனியவும் முடியாத தொப்பை! உங்கள் திராட்சைத் தோட்டத்தை பச்சைப் புழு அரித்துப் போட விடாதீர்கள் (ஆமோஸ் 4:9). “திராட்சைத் தோட்டங்களைக் கெடுக்கிற குழிநரிகளையும் சிறுநரிகளையும் நமக்குப் பிடியுங்கள்; நம்முடைய திராட்சைத் தோட்டங்கள் பூவும் பிஞ்சுமாயிருக்கிறதே” (உன் 2:13-15). திராட்சைக் கொடிகளாக பூப்பூத்து வாசனையும் பரிமளித்த எத்தனை எத்தனைபேர் நரிகளால் கெடுக்கப்பட்டனர் என்று நினைக்கும் போது வயிறு எரிகிறது. நரிகளைக் கண்டுபிடிப்பதே ஞானம்—நாம் செய்யத்

தேவையில்லாத காரியங்கள், எடுக்கத் தேவையில்லாத பொறுப்புகள். நாம் சுலபமாக விட்டுவிடக்கூடிய டியூஷன்களோ மற்ற காரியங்களோ, அல்லது—ஏன் கூடாது? நமது வேலையோ? நமது அபிஷேகத்தையும் வரங்களையும் முழுமையாகப் பயன்படுத்த விரும்பினால் ஏதோ ஒன்றை விட்டுக்கொடுத்தே ஆகவேண்டும். அந்த ஏதோ ஒன்றுதான் என்னவென்று கண்டுபிடிக்க வேண்டும். அதை வெட்டியெறிந்தால் திராட்சைச் செடிகளைப் போலப் படருவோம். நமது வாசனை லீபனோனுடைய திராட்சை ரசத்தின் வாசனைபோல் இருக்கும் (ஓசி 14:6,7).

கனிந்த திராட்சைப் பழங்களை ஆலையில் கொட்டி ஆடிப்பாடி வெறுங் காலால் மிதித்துச் சாறு எடுப்பார்களாம் (ஏசா 16:10; எரே 25:30; ஓசி 2:15). இந்த மிதிபடும் அனுபவத்திற்குத் தப்பி மினுமினுக்கும் அரியணையில் அமர்ந்துவிட்டோமா? தேவன் நம்மை முற்றிலும் நற்கனி தரும் உயர்குலத் திராட்சைச் செடியாக அல்லவோ நாட்டினார்? (எரே 2:21). பின்னை ஏன் நாம் பலனற்றுப் போனோம்? (ஓசி 10:1). வேறு அழைப்புகளை நாடிச் சென்றதினாலல்லவோ? பரவசத்தை நாடினதால் பழரசமற்றுப் போனோமோ? சுத்திகரிக்கும் கத்திரிக்குத் தப்பி அரண்மனைக்கு ஓடிப் போனோமோ? திரும்பிச் செல்வோம்; அவரே நம்மை அதிகக் கனிகளைக் கொடுக்கும்படிச் செய்வார் (யோ 15:1,2).

நம்மைக் கனிதரும் திராட்சைகளாக்க ஆவன செய்துவிட்டார் தேவன் (ஏசா 5:4). நாமோ மதியீனமாக நமது தோட்டத்தைக் கவனியாமல் விட்டோம். அது முள்ளுக்காடும் காஞ்சொரியுமாகி அடைப்பும் இடிந்து விழுந்தது (நீதி 24:30,31). தேவனது கிருபையைப் பெற்றுக்கொண்ட நாம் அவருக்கு என்ன பிரதிபலன் அளிக்கிறோம்? சிறியதாகத் துவங்குவோம். தேவன் நமது கனாக்களை ஆசீர்வதித்துப் பெருகப்பண்ணுவார். அப்படிப்பட்டதொரு பரிசுத்த கனா உங்கள் அடியாழத்தில் உண்டோ? உண்டானால் அதைச் செயல்படுத்துங்கள். முழு உலகையும் எண்ணி நொந்து பெருமூச்சு விடாதீர் கள். உங்கள் கையிலுள்ள ஐந்தப்பம் இருமீன் கொண்டு உங்கள் தெருவில், உங்கள் கிராமத்தில் ஏதாவதொன்றைச் செய்யுங்கள். அயலகத்தில் கால் வைக்காமல் அகிலமெங்கும் செல்ல முடியாது. ஊருக்குள் ஓணான் பிடிக்கா தவன் அசலூரில் ஆனை பிடிப்பானோ?

முட்செடி

இறுதியில் மரங்கள் முட்செடிக்கு அழைப்பு விடுத்தன. கிடைத்த தருணத்தை அச்சரிபச்சாவெனத் தாவிப்பிடித்தது முட்செடி—அதற்குத்தான் இழந்து போகக் கொழுமையோ, கனியோ, மதுரமோ, ரசமோ இல்லையே!

தனித்தியான வாழ்வையும் மதுர வாழ்வையும் ஊழியத்தையும் வாடவிட்டு நாம் செய்துகொண்டிருக்கும் காரியங்களைச் செய்ய, உலக மக்கள் ஏராளம் உண்டே. இயேசுவைப் பிடித்துக்கொண்டுபோய் இராஜாவாக்க மக்கள் மனதாயிருந்தனர் (யோ 6:15). இயேசுவோ ஏரோதை ஆளவிட்டுவிட்டுத் தாமோ விலகிச் சென்றார். இதைக்காட்டிலும் மேன்மையான முன்மாதிரி நமக்குண்டோ ? மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம் பண்ணட்டும். நாமோ கிறிஸ்துவைப் பின்பற்றி நாட்டப்பட்ட இடத்தில் பூத்துக்குலுங்கிக் கனிகொடுப்போம் !

9
தவறவிட்ட தருணங்கள்

சந்தர்ப்பத்தை நழுவ விட்டுவிட்டு ஏங்குவோரால் உலகம் நிறைந்துள்ளது. கிறிஸ்துமஸ் சரித்திரத்தில் வரும் சத்திரக்காரனும் அவர்களில் ஒருவன் தான். குடிமதிப்பிற்காகப் பெத்லகேம் வந்திருந்த பணக்காரரை உபசரித்து இடமளிப்பதில் விறுவிறுப்பாயிருந்திருப்பான். கர்ப்பிணியான தன் மனைவியைக் கழுதையில் ஏற்றி வந்து இடம் தேடிக் கெஞ்சி நிற்கும் ஏழை மனிதன் அவன் கண்களைக் கவரவில்லை. ஒரு வேளை, "இடமில்லையென்று சொல்கிறேனே, காது கேக்கலியா? போ, போ" என்று அதட்டியிருக்கலாம். அன்று இரவு அந்த இளம் மாதுவிடம் மேசியா பிறக்கப்போகிறார் என்று மட்டும் அவன் அறிந்திருந்திருப்பானானால்... "சத்திரத்தைத் தலைக்கீழாய்க் கவிழ்த்திக் கனவான்களை மாட்டுக்கொட்டகைக்கு அனுப்பியிருப்பான்" என்று ஆமோஸ் வெல்ஸ் "*சந்தர்ப்பத்தைத் தவறவிட்ட சத்திரம்*" என்ற தனது கவிதையில் எழுதியுள்ளார். மேய்ப்பர்கள் தனது கொல்லையில் முதல் கிறிஸ்துமஸ் கொண்டாடிக்கொண்டிருக்கையில் சத்திரக்காரன் அதை நழுவ விட்டுவிட்டான். அதை நினைக்கையில் நாம் உதாசீனமாய் நழுவவிடும் வாய்ப்புகளைச் சிந்திக்கலானேன். காற்றுள்ளபோதே தூற்றிக்கொள் என்பது பழமொழி. காற்று வீசும்போது கண்டுகொள்ள ஜாக்கிரதையாயிருப்போம்.

மனந்திரும்ப மாட்டீர்களோ?

"எருசலேமே, எருசலேமே, கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே கூட்டி சேர்த்துக்கொள்ளும்வண்ணமாக நான் எத்தனை தரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன்" என இயேசு புலம்பினார். எருசலேமோ அத்தனை தரமும் முகத்தைத் திருப்பிக்கொண்டது (லூக் 13:34). ஒரு நாள் திடீரென்று பயங்கர அழிவு வந்தது. அன்றோ அவளுக்கு மனந்திரும்ப வாய்ப்பு கிட்டவில்லை!

தன் புத்திர சுவிகாரத்தை ஏசா விற்றுப்போட்டபோது மேசியாவின் வம்சவரிசையில் இடம்பெறும் தருணத்தை இழந்துபோனான். பின்பு அவன் கண்ணீர்விட்டுக் கவலையோடே தேடியும் மனம் மாறுதலைக் காணாமற் போனான் (எபி 12:15-17). ஏசாவைப் போல சீர்கெட்டவர்களாயிராதபடிக்கு எச்சரிக்கையாயிருப்போம்.

வாய்ப்புகள் நம்மைத் தேடி வரா. எதேச்சையாய் வரும்போது இறுகப் பற்றிக்கொள்ளவேண்டும். எனவேதான் தேவனுடைய கிருபையை யாரும் வீணடிக்க வேண்டாமெனப் பவுல் புத்தி சொல்கிறான். "இப்பொழுதே அனுக்கிரக காலம், இப்பொழுதே இரட்சணிய நாள்" என்கிறான் (2 கொரி 6:1,2). ஒவ்வொரு கன்வென்ஷனும், வானொலிச் செய்தியும், துண்டுப் பிரதியும், ஆத்தும ஆதாயகனின் வேண்டுதலும் மறுபடியும் பிறக்க ஒரு வாய்ப்புதானே. இரட்சிப்பின் செய்தியைக் கேட்டுக்கொண்டேயிருக்கும் நீங்கள் இன்னும் அதை ஒத்திப்போடுவது ஞானமோ? நாளை நீங்கள் இவ்வனுபவத்தைக் கண்ணீரோடே தேடியும் கண்டடையாமல் போகலாமே. இன்னுந்தான் தேவன் அழைக்கிறார். இன்றும் இத்தருணத்தைத் தட்டிக் கழிப்பீர்களோ? இப்பொழுதே கிறிஸ்துவிற்கு உங்கள் இதயத்தில் இட மளிக்க மாட்டீர்களோ? அவர் உங்கள் வாழ்க்கையை மாற்றுவாரே.

சிலுவைக் கள்ளனொருவன் பரதீசைச் சுதந்தரிக்கும் தருணத்தை விட்டு விட்டான்—அடுத்தவனைக் காட்டிலும் பொல்லாதவனாக இருந்ததினால்ல, கொடுக்கப்பட்ட தருணத்தை விசிறி எறிந்ததினால்! சிலுவை தினத்தன்று கிறிஸ்துவோடு பரதீசிலிருந்த கள்ளனைச் சிந்தித்துப் பாருங்கள்! பரதீசிற்கும் பாதாளத்திற்கும் இடையே ஒரே வாக்கியம் மாத்திரமே. முழுமனதோடு அந்த வரியைச் சொல்லி ஆண்டவரிடம் கெஞ்சமாட்டீர்களோ?

மகிபன் தெரிந்தெடுத்தவரை மணக்க மாட்டீர்களோ?

நெருங்கிய உறவினன் ரூத்தின் நிலத்தை வாங்கக் கூடும். ஆதாயமான பேரம்தான்; உறவினனும் விருப்பத்தோடு வாங்க ஒத்துக்கொண்டான். ஆனால் ஒரு சிறு சிக்கல். அந்த நிலத்தை வாங்குபவன் ரூத்தைத் தனக்கு மனைவியாகக் கொண்டு மரித்த அவளது கணவனின் பெயரை நிலைநாட்ட வேண்டும். அதைக் கேட்ட மாத்திரத்தில் உறவினன் மனதை மாற்றிக் கொண்டான். தன் சுதந்தரத்தைக் "கெடுக்கக்" கூடாது என மறுத்து விட்டான். அவனுக்கு மண் வேண்டும், பெண் வேண்டாம்! போவாசோ பெருநெஞ்சுடன் நிலத்தை வாங்கிக்கொண்டு ரூத்தையும் மணந்து கொண்டான். அதில் சுவாரஸ்யம் என்னவென்றால், மரித்தவன் பெயரல்ல போவாசின் பெயரே இயேசு கிறிஸ்துவின் வம்ச வரிசையில் இடம்பெற்றுள்ளது (மத் 1:5). தனக்குக் கேட்கப்பட்ட பெண் "சகல இனத்தவராலும் விரும்பப்

பட்டவரின்" (ஆகாய் 2:7) தாய்க்குலம் என முந்திய உறவினன் யூகித்திருப்பானேயானால் சற்றும் தயங்காமல் அங்கேயே மூன்று முடிச்சைப் போட்டிருப்பானே. தன் சுதந்திரத்தைக் கெடுத்திருக்கமாட்டான், கெம்பீ ரிக்கச் செய்திருப்பான்.

வாலிபர் இன்று பணம், மணம், இனம் என்றுதான் பார்க்கிறார்களே யொழிய நபரின் குணம் எப்படியெனக் கருத்தாய் நோக்குவதில்லை. தொடுக்கி வந்த ஒரு சிக்கலினாலே நெருங்கிய உறவினன் ரூத்தை ஒதுக்கினான். அதினால் எதை இழந்துவிட்டான் பாருங்கள்! தேவனது சத்தத்திற்குச் செவிசாய்த்து மரியாளை மனைவியாக ஏற்றுக்கொண்டி ராவிடில் யோசேப்பு மகிமையானதோர் தருணத்தை இழந்துபோயிருப்பானே. தம்பியரே, தங்கையரே, சரியான "நபரைத்" தெரிந்தெடுங்கள். சிக்கலைத் தேவன் உங்களுக்குச் சரப்பணியாய் மாற்றித்தருவார். எங்கள் திருமணத் திலோர் சிக்கல். நாங்கள் பணக்காரக் குடும்பம். என் பெற்றோர் எனக்காய்த் தெரிந்தெடுத்தவரோ ஏழைக் குடும்பம். அதற்காக நான் அவரை அல்லத்தட்டியிருப்பேனானால் இன்று என்னத்தை இழந்திருப்பேன் என்று என்னால் சிந்தித்தும் பார்க்கமுடியவில்லை. உலகக் காரணத்திற்காக தேவ சுதந்தரத்தை அல்லத் தட்டாதீர்.

கர்த்தருக்காகக் காத்திருக்க மாட்டீர்களோ?

காலைத் தியானங்களில் நழுவிச் சென்ற சந்தர்ப்பங்களை யோவான் 20 சிலேடையாய்க் கூறுகிறது. தன்னைவிட்டு எடுபடாத நல்ல பங்கைத் தெரிந்து கொள்ளும் தருணத்தை மகதலேனாள் மரியாள் உடும்பாய்ப் பற்றிக் கொண்டாள். காலைத் தியானத்திற்காக மரியாள் உட்கார்ந்தாளென வைத்துக்கொள்வோம். ஒன்றுமே புரியவில்லை, எல்லாம் ஒரே இருளாய்த் தோன்றுகிறது. ஆனாலும் நம்பிக்கையோடு விடாப்பிடியாகத் தொடர்ந்தாள் (யோ 20:1). அவள் சோர்ந்துபோகாமல் உறுதியாகத் தொடரவும் பெரும் பாறை போன்ற தடைகள் அகன்று போயின (வச 1). இருப்பினும் அது ஓர் உயிரற்ற கல்லறை அனுபவம்தான். மரியாள் பட்டணத்திற்கு ஒடி பேதுருவின் வீட்டிலும் பின் யோவானின் வீட்டிலும் விவரத்தை அறிவித்துவிட்டு மறு படியும் மூச்சுவாங்க கல்லறைத் தோட்டத்திற்குத் திரும்பிவந்தாள் (வீட்டுப் பெண்கள் தியான வேளையில் இடையிடையே சலிப்புடன் எழுந்து வீட்டுக் காரியங்களைப் பார்த்துவிட்டு சோர்புடன் மறுபடி வந்து உட்காருவது போல!). நிமிடங்கள் நகர்கின்றன. தனது உயிரற்ற தியானத்தை நினைத்து அவள் கண்ணீர் சிந்த "தன்" ஆண்டவரைத் தரிசிக்கும் வாஞ்சை அவள் இதயத் தைக் கவ்விப் பிடித்தது (வச 11). கல்லறைக்குள்ளே எட்டிப் பார்க்கும்போது இரண்டு தூதரைக் கண்டாள். கல்லறைக்குள் தெரியக்கூடிய அளவு இப்

பொழுது தியானத்தில் பொழுது புலர்ந்துவிட்டது (வச 12). வரவரக் கதிரவனின் கதிர்கள் வீசின. தேவதூதரிடமிருந்து செய்தியைப் பெற்றுக் கொண்டாள் (வச 13). எளிதில் ஏமாறுபவளல்ல மரியாள். "தன்" ஆண்டவரைப் பார்க்காமல் திரும்புவதா? அவளுடைய விசுவாசத்திற்கேற்ப அவரும் தரிசனமானார். அவளுக்கோ அவரை அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. சூரியனும் பளிச்செனப் பிரகாசிக்கத் துவங்கினான். அவரும் "மரியாளே" என்று பெயர் சொல்லி அன்பாய் அழைத்தார். பின்பு அவளோடு அளவளாவினார். அவரது சத்தத்தைக் கேட்டவுடன் அவரைக் கண்டு கொண்டு அவர் பாதத்தில் விழுந்தாள் (வச 16,17). அலாரத்தை வைத்து அதிகாலமே எழுந்து கண்களைக் கசக்கி ஓடியிராவிட்டால் அவளுடைய இழப்பு இன்னதென்று அளவிடவே முடியாது.

சீடர்களோ பொன்னான தருணத்தை இழந்துவிட்டனர்! மரித்து மூன்றாம் நாள் உயித்தெழப்போவதாக இயேசு திரும்பத் திரும்பச் சொல்லியிருந்தார். அதற்கு அவர்கள் கோபப்பட்டனர் (மத் 16:21,22), துக்கப்பட்டனர் (மத் 17:23), பாராமுகமாயிருந்தனர் (லூக் 9:22), பேராசை கொண்டனர் (மாற் 10:35), பயந்தனர் (மாற் 9:31,32). இயேசு மரித்தார். அவர் சொன்னபடி நடந்ததா என்று போய் எட்டித்தான் பார்க்கவேண்டாமா? பார்த்தாலும் காத்திருக்க வேண்டாமா?

இப்படித்தான் நம்மில் பலரும் நமது ஆண்டவரின் சந்திப்பை இழந்து போகிறாம். தியானிக்கப் பழகத் துவங்கி, அது உயிரற்றதாகத் தெரிந்தாலும் விடாது பயிற்சித்து, தடைகள் வந்தாலும் தளராது நிற்போமானால், நாட் களும் மாதங்களும் வருடங்களும் உருண்டு செல்லச் செல்ல இருண்ட நமது அனுபவம் இருளகலத் துவங்கி ஒளி வீசி நடுப்பகல் சூரியனைப்போல் அதிகமதிகமாய்ப் பிரகாசிக்கத் துவங்கும். அதுவே நம்மை நமது ஆண்ட வரோடு பேசும், பழகும் அனுபவத்திற்கு வழிநடத்தும். அனுதினமும் அவர் நம்மோடு அளவளாவக் காத்திருக்கிறார். கல்லறைக்குள் எட்டிப் பார்த்து விட்டுத் திரும்பிய சீடரைப்போல் மேன்மையான அனுபவத்தை இழந்து விடார்திருப்போம்.

உதவியற்றோருக்கு, தேவையிலிருப்போருக்கு உதவ மாட்டீர்களோ?

ஐசுவரியவானுக்குத் தருணம் லாசரு என்னும் பெயரில் வாசற்படியில் காத்துக்கொண்டிருந்தது (லூக் 16:19-31). அவன் தருணத்தை நழுவ விட வில்லை; வேண்டாமேன்றே உதைத்துத் தள்ளினான். மேசையின் எச்சிலை களைப் போடச் சொல்லியிருந்தால் வேலைக்காரனே போட்டிருப்பான். அதினால் அவன் தேவதூதனை உபசரிக்கும் தருணத்தை மட்டுமா இழந்

தான்? தேவதூதனைப் போலாகி தேவதூதரோடு வாசம்பண்ணுவதையும் இழந்துபோனான். இந்தச் சிறியருக்கு எதைச் செய்யாமல் விட்டோமோ அதை இயேசுவிற்கே செய்யாமல் விட்டோம் (மத் 25:45). இடுக்கணில் சிக்கியிருக்கும் ஒவ்வொருவரும் தேவ தூதராயிருக்கக்கூடும் என்பதை மறந்து போகாதிருப்போமாக.

சிநேகிதியொருவர் விபத்தில் சிக்கின தம் வாகனத்திலிருந்து போவோர் வருவோரை நோக்கிக் கெஞ்சினதாகக் கூறினார்கள். ஒரு பாஸ்டர்மார் குழுவும்கூட தம் காரை நிறுத்தி விபத்தைப் 'பார்த்தார்களாம்.' ஆனால் உதவ முன்வரவில்லை. இவர்கள் 'சிறியவர்களாயிருக்கலாமே.' உதவத் தயங்கா திருப்போம். அந்நியன் ஒருவனுக்கும் அவனது பத்து ஒட்டகங்களுக்கும் தண்ணீர் எடுத்து ஊற்ற ரெபேக்காள் முணகவில்லை. அவ்விரக்கச் செயலினால் பத்து செருப்பு தேயாமலே சிறந்ததோர் திருமண ஒப்பந்தத் திற்குக் கையெழுத்திட்டாள்.

எரிகோவிற்குப் போகிற பாதையிலே அடித்துப் போடப்பட்ட ஒரு மனிதன் குற்றுயிராய்த் தன் ஜீவனுக்குப் போராடிக்கொண்டிருந்தான் (லூக் 10:30-37). பாதிரி ஒருவர் சந்தர்ப்பவசமாக அவ்வழியே வர நேரிட்டது: மரித்துக் கொண்டிருக்கும் ஒருவனுக்கு உயிர்கொடுக்கச் சந்தர்ப்பம்! ஆனால் இழுத்துக்கொண்டிருந்த அவனைக் கண்டதும் ஒதுங்கிப்போனான். லேவியனும் அக்கோரக் காட்சியைக் கண்டும் காணாதது போல தன் ஜோலியைப் பார்க்கச் சென்றான். ஆனால் அவ்வழியே வந்த சமாரியன் ஒருவன் தன் பிரயாணத்தையும் அவசரமாய் எண்ணாமல், பணச் செலவை யும் கணக்குப்பண்ணாமல், அரைப் பிணமான ஒருவனைத் தன் கழுதையில் தனியே சுமந்துகொண்டு செல்லும் பாரத்தையும் சட்டைசெய்யாமல் இயேசு வைப் போல மனதுருகி உதவினான். வழியில் அவன் மரித்துப்போனால்? நீதிமன்றத்தில் நிற்கவேண்டிய நிலை ஏற்பட்டால்? மரிக்கும் தருவாயில் புதைக்கும் செலவுகள்? கிடைத்த வாய்ப்பைத் தவறவிட அவன் தயாரா யில்லை. நாமும் போய் அந்தப்படியே செய்வோம்!

பெற்றோரைப் பராமரிக்க மாட்டீர்களோ?

ஓர்பாள் தன் மாமியாரை நேசித்தாள், ஆனால் தன் இளம் வாழ்வை ஒரு கிழவிக்காகச் செலவழிப்பதில் அவள் அர்த்தம் காணவில்லை. ரூத்தோ அதைத் தன்மேல் விழுந்த கடமையாக எண்ணிக் கருத்தோடு மாமியாரைக் கவனித்தாள். மரித்துப்போன கணவனின் தாயைக் கவனிக்க வேண்டு மென்று எந்தச் சட்டமும் கிடையாது. நற்குணம் இரண்டாம் கிலோமீட்டர் செல்லும். ரூத்திற்குப் போவாஸ் போட்ட முதல் புகழ்மாலை அவள் தன் மாமியாருக்குச் செய்ததே (ரூத் 2:11). ஒருவேளை தன் வயதான தாயைக்

கவனித்துக்கொள்ளக்கூடிய மனிதாபிமான பெண்ணைத் தேடிக்கொண்டிருந்தானோ? நிலத்தை வாங்கினால் ரூத்தை மணக்க வேண்டியது சட்டம். ஆனால் ரூத்தை மணந்தால் "அவளது" மாமியாருக்கு அடைக்கலம் அளிக்கவேண்டிய நிர்ப்பந்தம் இல்லையே. ஆனால் இயேசுவின் வளர்ப்புத் தந்தையாகிய யோசேப்பைப்போல போவாசும் வேதபாரகர் பரிசேயர் என்பவர்களைவிட அதிக நீதிமானாயிருந்தான் (மத் 5:20).

பெற்றோரும், துணைவரது பெற்றோரும் எந்நாளும் நம்மோடு இருக்கப் போவதில்லை. சிந்தித்துப் பாருங்கள்: எத்தனை வேதனையோடு நம்மைப் பெற்றெடுத்திருப்பார்கள்; எத்தனை மணி, நாள், வாரங்கள் நமது வியாதிப் படுக்கைக்கருகே உட்கார்ந்திருப்பார்கள்; அவர்களது அன்பளிப்பான உணவு, உடை, கல்வி, ஒழுக்கப் பயிற்சி, விசுவாசம் இப்படி எத்தனையோ! அவர்கள்மேல் அன்பைச் சொரியுங்கள். அவர்களைச் சந்தோஷப்படுத்தக் கூடுமானதெல்லாம் செய்யுங்கள். நெய்கிறவன் எறிகிற நாடாவிலும் தீவிரமாய் ஓடுவது வாழ்க்கை. இவ்வுலகினின்று எப்பொழுது பறித்துக்கொள்ளப் படுவார்களோ! உங்கள் வார்த்தைகளோ செயல்களோ பின்னர் உங்கள் நினைவை வாட்டாமல், "கூடுமானதைச் செய்தேன்" என்று நீங்கள் ஆறுதலடையும்படியாய்ப் பார்த்துக்கொள்ளுங்கள். கல்லறையில் சில பூக்களைத் தூவிவிடுவது குற்றணர்வைத் துடைத்துவிடாது.

அப்படியே பெற்றோரும் பிள்ளைகளால் வரும் ஆனந்தத்தை அனுபவிக்கத் தவறிவிடக்கூடாது. பிள்ளைப் பருவம் யாருக்காகவும் காத்திருப்பதில்லை. பிள்ளைகளைக் கொடூரமாய் நடத்திவிட்டு அல்லது கவனியாமல் விட்டுவிட்டு கடிகாரத்தின் கைகளைப் பின்னே திருப்ப முடியாமல் கதறியழும் பெற்றோர் அநேகர்.

பொருளாசையைப் புறக்கணிக்க மாட்டீர்களோ?

பதினொரு ஏர்களை மேற்பார்வை செய்துகொண்டு பன்னிரெண்டாம் ஏரை ஓட்டி வந்த எலிசா வசதியுள்ளவன்தான். இருப்பினும் எலியா அவன் மேல் தன் சால்வையைப் போட்டவுடன் "தன் மாடுகளை விட்டு" எலியாவின் பின்னே ஓடினான் (1 இரா 19:19-21). எலியாவிற்கு அடுத்தவனாகும் சந்தர்ப்பத்தைப் பற்றிக்கொண்டான். கேயாசிக்கும் உலகத்தை விட்டுவிட்டு ஊழியத்தைப் பற்றிக்கொள்ளும் மனமிருந்திருக்குமானால் இரட்டிப்பான வல்லமையுடைய எலிசாவின் சால்வை அவன்மேல் 2^2 வல்லமையுடன் விழுந்திருக்குமே. ஆனால் கேயாசியின் நம்பிக்கையோ தேவன் மேலல்ல, எலிசாவின் மந்திரக்கோலின் மேல்தான் இருந்தது (2 இரா 4:31). எலிசாவின் மந்திரக்கோலின் மேல்தான் இருந்தது... அற்புதங்களைக் கொண்டு வியாபாரம் செய்ய நினைத்தான் (2 இரா 5:22).

எலிசாவின் மனம் கேயாசியோடே சென்றது (5:26); கேயாசியின் மனமோ பொருட்களை நாடிச் சென்றது. சால்வையல்ல, சாபமே அவன்மேல் விழுந்தது. அருமையான தருணம் வெறுமையாய்ப் போயிற்றே.

யூதாசிற்கு வாய்ப்பு ஒருமுறை மட்டும் தட்டவில்லை, தட்டிக்கொண்டே யிருந்தது. அவன் கேட்காத பிரசங்கமா, காணாத அற்புதமா! ஆனாலும் பொருளாசையை விட்டுவிட தருணத்தை ஒத்திப்போட்டு திருடனாகவே வாழ்ந்தான். மனந்திரும்ப இறுதித் தருணமும் அளிக்கப்பட்டது—இயேசுவைக் காட்டிக்கொடுத்தபின்! தன்னைச் சிலுவையிலறைந்தவர் களையே மன்னித்து விட்டவர் தன்னைக் காட்டிக்கொடுத்தவனையா மன்னி யாதிருப்பார்? ஆனாலும் அவன் தற்கொலை செய்துகொண்டதினால் அவனது ஊழிய ஸ்தானம் வேறொருவனுக்குச் சென்றுவிட்டது (அப் 1:20).

நசுக்கப்பட்டோருக்காய் நாவசைக்க மாட்டீர்களோ?

இழந்த சந்தர்ப்பங்கள் யாவுமே அன்பான இரக்கமான செயல்களல்ல. பொல்லாத உலகில் நல்லதைச் செய்தால் மட்டும் போதாது; பொல்லாப்பைத் தடுக்கவேண்டும். பாதுகாத்தால் மட்டும் போதாது; பாய்ந்து தாக்கவும் வேண்டும். இஸ்ரவேலின் படைக்குக் கோலியாத் சவால் விட்டுக் கொண்டி ருந்தான். தருணத்தைத் தழுவிக்கொள்ளவோ ஆளில்லை—தாவீது வரும்வரை இன்றையக் கோலியாத்துகளுக்கு நாமல்லவோ தாவீதுகள்?

ஒருநாள் எனது கணவரும் நானும் உயர்ந்த மரமொன்றிலிருந்து தேனெடுத்து முகங்கள் தேனீக்களால் கொட்டப்பட்டு இரு ஆதிவாசிகள் இறங்கி வருவதை வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருந்தோம். அவர்கள் தேனை விற்பதாகச் சொன்னதால் காத்திருந்தோம். அப்பொழுது போலீஸ் ஒருவன் வந்து அந்த மரம் கலெக்டர் காரியாலயத்தைச் சேர்ந்ததென்றும் அவர்கள் கலெக்டரது அனுமதியின்றி தேன்கூட்டை எடுப்பதாகவும் அவர்களை மிரட்டத் துவங்கினான். மரம் காரியாலய வளாகத்திற்கு வெளியேதான் இருந்தது. "ஏழைகள்தானே விடப்பா" என்று சொல்லிப் பார்த்தோம். அவன் விடுவதாயில்லை. ஆதிவாசிகள் அவனைத் தனியே அழைத்துப்போய் பேசி விட்டுச் சோர்புடன் அவன் ரூ. 60/- கேட்பதாகக் கூறினர். ஒரு மணிநேர இழுபறிக்குப் பின்னர் நாங்கள் நகரலாம் எனத் தீர்மானித்தோம். நான், "தேனைப்பற்றி எனக்கு அக்கறையில்லை. ஆனால் இந்த அப்பாவி ஆதிக் குடியினரை இம்முரடன் கையில் விட்டுச் செல்ல எனக்கு மனமில்லை" என்றேன். உடனே என் கணவர் ஒரு குறிப்பு நோட்டை எடுத்தார். "உன் பெயரையும் விலாசத்தையும் சொல்" என்று போலீசைக் கேட்டுவிட்டுப் பேனாவையும் எடுத்தார். அவ்வளவுதான். போலீஸ் பிடித்தானே ஓட்டம்,

பார்க்கணுமே. அந்த ஆதிவாசிகள் இருவரும் கற்களை எடுத்துக்கொண்டு அவனை விரட்டிக்கொண்டு சென்ற காட்சி எங்களை அகமகிழச் செய்தது. இப்போது இன்னும் தைரியமடைந்து வருகிறோம்!

யோபு நாம் நினைப்பது போல எலும்பில்லாப் பூச்சியல்ல. அநியாயக்காரருடைய கடைவாய்ப் பற்களை உடைத்து, அவர்கள் பறித்ததை அவர்கள் பற்களிலிருந்து பிடுங்கினான் (யோபு 29:17). சற்று அந்தஸ்துள்ளோர் மிருகத்தனத்தை மிதித்துப் போடக் கிடைக்கும் தருணங்களையெல்லாம் பயன்படுத்தி நசுக்கப்படுவோருக்காகப் பேசத் தீர்மானித்தால், நமது நாட்டிற்கு நாம் செய்யக் கூடிய நன்மைக்குக் கணக்கேயில்லை. உங்கள் சத்தம் கேட்கப் படட்டும். அநியாயத்தைத் தட்டிக்கேட்காமல் வாளாவிருப்பது அநியாயத் திற்கு அடங்கிப்போகும் கோழைத்தனம். வேடிக்கை பார்ப்பவரில் ஒருவராய் நிற்காதீர்கள். பயப்படுகிறவர்கள் அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்களாம் (வெளி 21:8).

எதிர்மறை வாய்ப்புகள்

தன்னடக்கத்திற்கான வாய்ப்புகளைத் தேவன் நம்முன் வைக்கிறார். நமது நாவினால் சுடாதிருக்க, பழிவாங்காதிருக்க, எதிர்க்காமலிருக்க, வெறுக்காமல், முறுமுறுக்காமல், குறைசொல்லாமல், சண்டையிடாமல், பொறுமையிழக்காமலிருக்க, சபிக்கப்படும்போது சபியாமலும், தீமைக்குத் தீமை செய்யாமலும் இப்படி நம்மை அடக்கிக்கொள்ள பல தருணங்கள் கிட்டும். நாம் பேசாமல் விழுங்கிவிட்ட வார்த்தைகளும், அடக்கிக்கொண்ட எதிர்ச் செயல்களும், நசுக்கிவிட்ட உணர்வுகளும், தண்ணீர் ஊற்றிவிட்ட கோபக்கனல்களுமே நமது பொக்கிஷப் பெட்டகத்தின் சில இரத்தினக் கற்கள். இப்படிச் சில கற்களைச் சேர்க்கும் கலையைக் கற்போமோ?

10
மெலிவோம் இவ்வாண்டு!

உடல் பருமனைக் குறைக்க ஆலோசனை தரும் கட்டுரைகளுக்குப் பஞ்சமேயில்லை. இருப்பினும் அவை ஆனைப் பசிக்குச் சோளப்பொரிபோல் பற்றாமல்தான் போகின்றன. மெலிய முயற்சித்து முயற்சித்துச் சலித்துப் போயிருப்பீர்களானால் பின்வரும் முறையை முயற்சித்துப் பாருங்கள்.

"நான் மிகவும் குறைத்துச் சாப்பிட்டும் மெலியவில்லை. அப்படியானால் அது பரம்பரை. ஆகவே மெலிய முயற்சிப்பதில் பயனில்லை" என்று பருமனானவர்கள் பொதுவாக முடிவுகட்டிவிடுகின்றனர். அதிகமாக உபவாசித்ததால், சிசேரியன் அல்லது கர்ப்பத்தடை செய்து கொண்டதால், தீட்டு நின்றுபோனதால் பருமனாகிவிட்டேன் போன்ற சில தவறான கருத்துக்களும் உண்டு. உடல் பருமனுக்குப் பரம்பரை மற்றும் பல காரணங்கள் இருந்தாலும் இவை எளிய குடும்பங்களில் காணப்படுவதேயில்லை என்பது கவனத்திற்குரியது. செல்வமே நமது செழிப்பிற்குக் காரணமென்பதில் ஐயமேதுமில்லை! ஒரு குடும்பத்தில் பலர் அல்லது எல்லோரும் பருமனாயிருப்பது தவறான உணவையோ, உணவுப் பழக்கங்களையோ சுட்டிக்காட்டுகிறது.

பருமனைக் குறைப்பதில் முதல் இரகசியம் அதை ஆன்மீகக் கண்ணோட்டத்தில் பார்ப்பதுதான். முயற்சியுடையார் இகழ்ச்சியடையார் என்ற ஊக்கத்தை ஊட்டி உதவிக்காக தேவனை நோக்கச் செய்வது அதுதான். இப்படிப் பாருங்கள் : தேவைக்கு மிஞ்சி உணவருந்துதல் நன்றன்று என வேதம் சிவப்பு விளக்கை அசைக்கிறது. அப்பழக்கத்தைக் கற்றுக்கொள்ளக்கூடாது என்பதற்காக பெருந்தீனிக்காரரைச் சேரவுங்கூடாது எனக் கண்டிக்கிறது (நீதி 23:20). எந்த வேளையும் போஜனத்தை மிதமிஞ்சி உண்ணக் கூடாது என்று என்னை எச்சரித்த ஒரு வசனம் லூக்கா 21:34, "உங்கள் இருதயங்கள் பெருந்திண்டியினாலும் வெறியினாலும் லௌகீகக் கவலைகளினாலும் பாரமடையாதபடிக்கும், நீங்கள் நினையாத நேரத்தில் அந்த நாள் உங்கள் மேல் வராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள்."

நான் தடித்திருந்தால் தேவைக்கும் அதிகமாகச் சாப்பிடுகிறேன், ஆகவே அந்தப் பாவத்தை (கெட்டப் பழக்கத்தையல்ல) ஜெபித்து மேற்கொள்ள வேண்டும். நான் கட்டுப்பாடு கற்றுக்கொள்ளவேண்டுமென்று தேவன் விரும்புகிறார். நான் ஒத்துழைத்தால் உதவி செய்வார். பிறர் சுலபமாகக் குறையும்போது என் எடை குறையாவிடில் தேவன் என்னிடம் இக்காரியத்தில் பிறரைவிடக் கூடுதல் கட்டுப்பாடு எதிர்பார்க்கிறார் எனப் புரிந்துகொள்ளு கிறேன். அவரது கட்டுப்பாட்டிற்கு அடிபணிவேனானால் அதின் பலனை அனுபவிப்பேன். இன்றேல் எனது கட்டுப்பாடின்மையினிமித்தம் துன்புறுவேன்.

பரிசுத்த ஆவியானவரின் ஆலயமாகிய நமது உடலை நாம் கெடுப்பதை தேவன் விரும்புவதில்லை. தேவன் குறித்த நேரத்திற்கு முன்பு நாம் மரிக்க மாட்டோமென்பது உண்மைதான். ஆனால் அதற்கு முன் நம்மை நாமே கொல்லக் கூடும். ஏலி தடித்தவனாயிருந்திராவிடில் ஒரு வேளை விழுந்தவுடன் எழுந்திருந்து இஸ்ரவேலுக்காக விண்ணப்பிக்க வாழ்ந்திருக்கலாம் (1 சாமு 4:18). பெருந்திண்டி மெதுவான தற்கொலை. இயேசு கிறிஸ்துவைத் தடித்துப் பருத்தவராகக் கற்பனை செய்ய முடிகிறதா? இயேசு கிறிஸ்துவைப் போல மாற வாஞ்சிப்பவர் அவரது கட்டுப்பாட்டையும் கடின உழைப்பையும் காப்பி யடிக்கவேண்டும். கர்த்தர் நம்மை "அனுதினமும்" எடுத்துக்கொண்டு தம்மைப் பின்பற்றச் சொல்லும் சிலுவை, உணவில் கட்டுப்பாடாக இருக்கலாமே. அந்தப் பணக்கார வாலிபனைப் போல மனமடிந்து திரும்பிக்கொள்வோமா? (மாற் 10:21,22).

ஜெபத்துடன் துவங்குங்கள். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு ஆகாரத்திற்கு முன்னும் ஜெபியுங்கள்—அற்புதமாக எடை குறைய அல்ல. நாவைக் கட்டுப் படுத்தி சரியான உணவைச் சரியான வேளையில் சரியான அளவில் உண்ண.

உணவைக் குறைக்க உடனடித் திட்டமிடாதீர்கள். முதலாவது ஓர் எடை காட்டும் கருவியை வாங்குங்கள். நீங்கள் நினைப்பதுபோல அது அதிக விலையல்ல. பலர் கண்ணாடியைப் பார்த்துப் பட்டினி கிடந்தும் பயனில்லையே எனச் சோர்புறுகின்றனர். கண்ணாடிப் பிம்பமும் மாதமொருமுறை எடை பார்த்தலும் சரிப்படா. உற்சாகமாக உடலிளைக்க தினசரி ஊக்கம் தேவை. அதுவும் நீங்கள் கரையாத கல்லாயிருந்தால் கட்டாயம் தேவை.

தினமும் காலை உணவிற்குமுன் எடை பாருங்கள். எப்பொழுதும்போல் சாப்பிட்டு ஒரு வாரம் கவனியுங்கள். எடை கூடினால், நீங்கள் தேவைக்கு மிஞ்சிச் சாப்பிடுகிறீர்கள், உணவைக் குறைக்கவேண்டும் அல்லது உடற் பயிற்சியைக் கூட்டவேண்டும் என்று அர்த்தம். எடை சீராய் இருக்குமானால், சரியாகச் சாப்பிடுகிறீர்கள். ஆனால் கூடுதல் எடையைக் குறைக்க அது போதாது.

சாப்பிட உட்காரும்போது பசிக்கிறதா என்று கவனித்துப் பாருங்கள். பசியில்லையேல் முந்தினவேளை கூடுதலாகச் சாப்பிட்டிருக்கிறீர்கள். அடுத்த வேளைக்குப் பசிக்குமளவிற்கு உணவைச் சுருக்குங்கள்.

தற்போது உபவாசத்தை மறந்துவிடுவது புத்திசாலித்தனம். குற்றவுணர் வடைய வேண்டாம். உபவாசத்தைக் காட்டிலும் கடினமானக் கட்டுப்பாட்டைக் கற்றுக்கொண்டிருக்கிறீர்கள். உபவாசித்துவிட்டுக் காய்ந்த மாடு சோளக் காட்டில் பாய்ந்தது போல் சாப்பிடுவதைவிட நீங்கள் கட்டுப்பாடு பயில்வதிலே தேவன் பிரியம் கொள்ளுவார். உபவாசிப்பதினால் உடல் ஊதுகிறது என்பது பலரது யூகம். உபவாசத்திற்கு முன்னும் பின்னும் நாம் சாப்பிடும் உணவு உபவாசித்த உணவைக் காட்டிலும் கூடுதலாகி விடுவதே அதற்குக் காரண மாகும். எடை குறைந்து அதில் பழகிய பின்னர் உபவாசிக்கத் துவங்கலாம்.

ஒன்று அல்லது இருவேளை சாப்பிட்டு மீதிநேரம் காபி, டீ குடித்துச் சமாளிப்பதிலும் தத்துவம் இதுதான். ஒரு நிறைவான போஜனத்தில் ஒருநாளின் தேவைக்கும் மிஞ்சிய உணவை உண்பது சாத்தியம். ஒருநாளில் ஒருவேளை மட்டும் சாப்பிடும்போது அள்ளி அள்ளி அடைக்கச் சொல்லும்.

குண்டோதராகிய நம்மில் பலருக்கு ஒரு நாளின் தேவை இவ்வளவு என்று தெரிவதில்லை. அதிகம் சாப்பிட்டுவிட்டுக் குறைத்துச் சாப்பிடுவதாக எண்ணிக்கொள்ளுகிறோம். அது ஒவ்வொருவரது உடலையும் தினசரி வேலை யையும் பொறுத்தது. அதிகமாய், குறைவாய் அல்லது சரியாய்ச் சாப்பிடு கிறீர்களென்று சரியாய்ச் சொல்வது எடைகாட்டும் கருவியே. அது பொய் சொல்லாது! கர்ப்பிணிகள் எட்டு கிலோ முதல் பத்து கிலோ வரை கூடலாம்.

உணவைக் குறைக்க ஆரோக்கியமற்ற கொழுப்புச் சத்துக்களையும் சர்க்கரையையும் குறையுங்கள் (ஐஸ் கிரீம், பால் பதார்த்தங்கள், எண்ணெய், வெண்ணெய், நெய், சாக்கலேட்டுகள், கொழுப்பான மாமிச உணவு, இனிப்பு பானங்கள் போன்றவை). சாதம், கிழங்குகளில் எண்ணெய்ச் சத்து கிடையாது. அளவோடு சாப்பிடலாம். சர்க்கரைக்குப் பதிலாக *சாக்கரின்* பயன்படுத்தலாம். பருப்பு, பயறு வகைகள் கூடுதல் சேர்த்துக்கொள்வது நல்லது. இரத்தத்தில் *கொலஸ்டிரால்* அல்லது சர்க்கரை அளவைச் சுட்டிக்காட்டுவது எடையல்ல என்பதை மனதிற்கொள்வது நல்லது. நல்ல பதார்த்தங்களைக் காணும்போது வாயூறி வாதிக்கப்படாமல் ஒரு சிறு துண்டை எடுத்து வாயில் வைத்துக் கொள்ளுங்கள். உடனே விழுங்காதீர்கள். இன்னொரு கடி கடிக்கத் துடித்தால், "ஒரு முழுத் துண்டைச் சாப்பிட்டாலும் விழுங்கினவுடன் ருசி மறைந்துவிடுமே; பின்பு வருந்துவேனே" எனச் சொல்லித் தேற்றிக்கொள்ளுங்கள். உணவு வேளைகளுக்கிடையில் வாய்ப்பசி எடுத்தால் ஒரு திராட்சை வற்றலை வாய்க்குக் கொடுத்து சற்று பொறுத்திருக்கச் சொல்லுங்கள்.

உணவில் கொழுப்புச் சத்தையும் சர்க்கரையையும் குறைப்பதினால் ஆரோக்கியமாக பருமனைக் குறைக்க முடியும். எடை குறைப்பதின் பக்க விளைவுகளை இதனால் தவிர்க்கலாம். அதோடு நன்றாக நீர் பருகுவதினாலும், பழங்கள், காய்கறிகள் சாப்பிடுவதினாலும், உடலின், நீர், ஊட்டச்சத்து, தாதுச் சத்து தேவைகள் நிவிர்த்தியாவதோடு அடுத்த உணவுவேளை பசியெடுக்கவும் துவங்கும். தரமான *மல்ட்டி விட்டமின்* மாத்திரை தினம் ஒன்று சாப்பிடுவது நல்லது. ஏதோ ஒருநாள் விருந்திற்குச் சென்றால் இந்தப் பிடுங்கலையெல்லாம் மறந்துவிட்டு நன்றாகச் சாப்பிடுங்கள். அடுத்த நாளிலிருந்து உஷாராகி விடுங்கள். புது இடங்களுக்குச் செல்வதனால் ஒரு நாளுக்கு மேல் உணவுக் கட்டுப்பாட்டில் அசட்டையாயிருக்க முடியாது.

பட்டினியாய்க் காய்வதுபோல் 'தோன்றலாம்.' ஆனால் இது தற்காலிக ஒழுங்குதான். பருமனாயிருக்கும்வரை அதிகம் சாப்பிட முடியாது. எடை சரியான அளவை எட்டியபின் மூன்று வேளை திருப்தியாக உணவருந்த முடியும்.

உடற்பயிற்சியைக் கூட்ட வழி பாருங்கள். உடற்பயிற்சி செய்யலாம் அல்லது தினம் 3 முதல் 5 கிலோமீட்டர் (ஆரோக்கியமான நபருக்கு) நடக்கலாம். இல்லாவிடில் வீட்டில் தோட்டம் போடுவது, கடைக்குச் செல்வது போன்ற வேலைகளைச் செய்து பயனுள்ள வகையில் சக்தியைச் செலவிடலாம். மேசை, நாற்காலி, கட்டிலுக்குப் பதிலாக பாயைப் பயன்படுத்துவது, மறந்தவை நினை விற்கு வந்தவுடன் அதை ஒத்திப்போடாமல் உடனே எழுந்துபோய்ச் செய்வது, போன்ற சில அனுதின உடலலுக்கல்கள் இரட்டைப் பயன் தருவதோடல்லாமல் நீடிய பலனைத் தரும் பழக்கங்களாகும். அதிகமாகத் தூங்குகிறீர்களா என்று கவனித்துத் தேவையானால் மதிய தூக்கத்தை நிறுத்துங்கள்.

மேற்கூறிய காரியங்களைத் தெளிவாக அறிந்து புரிந்துகொள்ளாமல் மெலிய முயற்சிப்பவர் துடுப்பில்லாத படகுடன் சுழலில் சிக்கிக்கொண்டவர் போல் சுற்றிச் சுற்றி வந்து (அதாவது மேலும் கீழும் சென்று) இறுதியில் மூழ்கி விடுவர்!

இப்பொழுது மெலிய ஆயத்தமா? உங்கள் முழு உருவப் புகைப்பட மொன்றை நிற்கும் பாவனையில் எடுத்து நாட்குறிப்பேட்டிலோ கண்ணாடியின் ஓரத்திலோ ஒட்டி வையுங்கள். ஆண்டு இறுதியில் இதைக்காட்டிலும் அழகாக இருப்பேன் என உங்களுக்கே சொல்லிக்கொள்ளுங்கள்.

உங்கள் குறியை நிர்ணயுங்கள். ஐந்து அடி உயரமுள்ளவர் 50 கிலோ இருக்கவேண்டும். அதற்குமேல் ஒவ்வொரு அங்குலத்திற்கும் 2 கிலோ

கூட்டிக்கொள்ளலாம் (5'1" –52 கிலோ; 5'2" –54 கிலோ). ஓரிரு கிலோ இப்பக்கமோ அப்பக்கமோ இருப்பதைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம். கீழே காட்டியுள்ளது போல் ஒரு வரைகட்டத்தில் (graph) உங்கள் எடையையும் மாதத்தையும் குறியுங்கள்.



இவ்வாண்டு ஆறு கிலோ குறைப்பதே உங்கள் திட்டம். அவசரப்படாதீர்கள். அவசரப்பட்டு வேகமாகக் குறைப்பவர்கள் பலவருடங்களாக அவசரப்பட்டும் குறையமாட்டார்கள். அவர்கள் குறைப்பதிலேயே கவனம் செலுத்துவதால் இறக்கிய எடையை ஏற்றாமலிருக்கக் கற்றுக்கொள்ளாதே போகிறார்கள். மெல்லவே குறைப்பதினால் மறுபடியும் ஏறாதிருக்கச் சுலபமாகக் கற்கலாம்.

இரண்டு முறைகள் உண்டு. முதல் முறையே சாலச் சிறந்தது. இரவு உணவின் அளவை இரண்டு சப்பாத்தி (அல்லது அதற்கு நிகரளவு சாதமோ மற்றதோ) அதிக எண்ணெயில்லாத குழம்பு, காய்கறி, பழம் என அளவிடுங்கள். மற்ற வேளைகளில் எப்பவும் போலவே புசியுங்கள். ஒரு சில நாட்கள் கவனியுங்கள். எடை குறையத் துவங்கினால் நல்லது. இன்றேல் மாலைத் தேநீரோடு சாப்பிடும் பலகாரங்களைக் குறையுங்கள். ஒரு டம்ளர் தேநீர் அல்லது காபி மட்டுமே அருந்துங்கள். ஒருவாரம் கழித்து இன்னும் எடை குறையாவிடில் மதிய உணவை மாற்றியமைப்பதவசியம். சாதத்தைச் சிறிது குறைத்துக் காய்கறி பழங்களைச் சற்று கூட்டுங்கள். இப்போது அநேகமாகக் குறையத் துவங்குவீர்கள். தவறினால் காலை உணவைத் தொடக் காலமாயிற்று. இடை வேளையில் ஏதோ ஒன்றைச் சாப்பிட ஆசை வந்தால் அப்பதார்த்தத்தை அடுத்த உணவோடு சாப்பிட ஒதுக்கி வையுங்கள்.

76 கிலோவில் துவங்கி ஜனவரி மத்தியில் 75.5ஐ எட்டுகிறீர்களென வைத்துக்கொள்ளுவோம். அதிமுக்கியமான காரியம் மீதி மாதம் எடை 75.5ற்குமேல் தாவாமல் பார்த்துக்கொள்வதுதான். என்னவானாலும் சரி, அம்மாதம் முழுதும் குறைந்த ½ கிலோ கூடாமல் பார்ப்பதை ஒரு சவாலாக மேற்கொள்ளுங்கள். மாதம் ½ கிலோவிற்குமேல் குறைக்கவேண்டாம். இதைச் சாதித்துவிட்டால் கட்டுப்பாட்டில் ஓர் எட்டாத கொப்பை எட்டிவிட்டதோடல்

லாமல் ஆன்மீக வாழ்விலும் கெட்டியாகி விட்டீர்கள். தேவனுக்கு ஒரு நன்றிக் காணிக்கை செலுத்தி வாழ்க்கையில் இனி 75.5ஐத் தாண்டுவதில்லையென உறுதிகூறுங்கள். ஏதேச்சையாக ஏறிவிட்டால் உடனடியாக இறக்கிவிடுங்கள்.

பெப்ருவரியைத் துவங்கலாமா? இன்னொரு ½ கிலோவைத் தூக்கி எறியுங்கள். மார்ச்சை 75இல் துவங்குகிறீர்களென நம்புவோம். 74.5க்கு இறங்குங்கள். 73.5க்கு இறங்கிவிட்டால் 74.5க்கு ஏறி விடுவது நல்லது. நாட்பட இதுவே நல்லது; வேகமாய் எடை குறைப்பதினால் வரக்கூடிய மயக்கம், பலவீனத்தை இது தவிர்க்கும். 75.5க்கு தாவவும் செய்யலாம். கவலைப் படாதீர்கள், குறைத்துவிடுங்கள். சில காலம் சீசா ஆடுவது போல மேலும் கீழும் போய் வரலாம். சீ-போகும் போதெல்லாம் சா-பண்ணி விடுங்கள். இப்படிச் சில வாரங்களோ, மாதங்களோ, வருடங்களோகூட நீங்கள் ஊசலாடலாம். ஆனால் 75-80 ஊஞ்சல் 70-75 ஆகும்; பின்பு 65-70 ஆகும்; இறுதியில் 60-65 ஆகும். 50 வயதாகும்போது உங்கள் எடை குறைந்திருப்பதற்காகக் களிப்பீர்கள். உங்கள் உருவத்தைக் கண்ணாடியில் பார்த்து மகிழ்ந்து குறைவெண்ணத்தை விட்டு வெளியே வருவீர்கள். மட்டுமின்றி மூட்டுவாதம், இரத்தக்கொதிப்பு, ஒருவேளை சர்க்கரை நோயையும் கூடத் தவிர்க்கலாம். குழுப் புகைப்படத்தில் யாதாமொருவருக்குப்பின் பாதி மறைந்துகொள்ள முயற்சிப்பதை விட்டுச் சிரித்த முகமாக முன்னே நிற்பீர்கள்!

ஏப்ரல் மாதம் 74 ஆவீர்கள். சோர்போ பெலவீனமோ தோன்றினால் (அபூர்வம்!) குறைப்பதை நிறுத்துங்கள். அதிகம் சாப்பிட்டு எடை கூட வேண்டாம். எடை தினமும் பார்த்து சாப்பிட்டு எடை கூடாமல் அதே எடையில் நிறுத்திக்கொள்ளுங்கள். ஓரிரு நாட்கள் சற்று இளைப்பாறுங்கள். பலவீனம் மாயமாய் மறைந்துவிடும். தேவையானால் உங்கள் உடல் அந்த எடைக்குப் பழகும்வரை ஓரிரு மாதங்கள்கூட அதே நிலையில் கழிக்கலாம். பின்பு துவங்குங்கள்.

டிசம்பர் மாதம் வரைகட்டத்தின் (graph) அடிக்கோட்டிற்கு வந்து சேரு கிறீர்கள். *வெரி குட்!* 6 கிலோ குறைத்து அதிலேயே நிற்பதற்காக நடனமாடாமலா இருப்பீர்கள்? ஆடுங்கள், இன்னும் எடை குறையும்!

இரண்டாவது முறை, இரவு உணவை ஒறுப்பது. காலையில் எடைக் கருவிக்கு ஓடி என்னை ½ கிலோ குறைவாகக் காணும் கிளர்ச்சிக்காகவே இம்முறையை நான் கைக்கொண்டேன்! சில நாட்கள் குறையாதது போல் தோன்றலாம். ஆனால் மதிய உணவு அல்லது மாலைப் பலகாரங்கள் கூடுதல் சாப்பிடாதிருந்தால் கட்டாயமாக ஓரிரு நாட்களில் குறையத் துவங்கும். இம்முறையைக் கையாண்டால் இரவில் பசியினால் தூங்க முடியாமல் இருக் கலாம். உபவாசித்தால் என்ன செய்வீர்கள்? வேதத்தில் (இப்பவும்) மக்கள்

மூன்று நாட்கள் தண்ணீர் குடியாமலும் அப்பம் புசியாமலும் உபவாசித்தனரே. ஆகவே உங்கள் பசியைக் கட்டுப்படுத்தும் பயிற்சிக்காக தேவனுக்கு முன்பாக உங்களை உபவாசத்தினால் தாழ்மைப்படுத்துவதாகக் கொள்ளுங்கள். விழிப்பான நேரத்தைப் பிரயோஜனமாகச் செலவிடுங்கள். ஆனால் காலைச் சிற்றுண்டியை இரட்டிப்பாய்ச் சாப்பிட்டுவிடாதபடிக் கவனமாயிருங்கள். வயிறு தான் நிறைந்ததை உணர சுமார் அரைமணி நேரம் பிடிக்கும். ஆகவே போதுமானதாக உணராவிட்டாலும் தினமும் சாப்பிடும் அளவு சாப்பிட்டு நிறுத்துங்கள்.

ஆறு கிலோ குறைந்ததற்காகக் கொண்டாடக் காரணமுண்டு. இப்பொழுது பார்வைக்கு நீங்கள் வடிவாக இருப்பது மட்டுமல்ல, ஆவியில் ஓரடி உயர்ந்து விட்டீர்கள். தேவனது கட்டுப்பாட்டிற்குக் கீழ்ப்படிந்ததால் அவரை மகிழ்வித்தீர்கள். ஆவியின் கனியாகிய தன்னடக்கத்தில் கடினமான பாடங்களைக் கற்றுக்கொண்டீர்கள். ஒரு பகுதியில் தன்னடக்கம் வேறொரு பகுதியில் நம்மை அடக்கிக்கொள்ள கைகொடுக்கிறது. ஒரு நாளிற்கு எவ்வளவு உணவு, எவ்வளவு உடற்பயிற்சி தேவை என்று கண்டுபிடிக்க சில ஆண்டுகளாகலாம். சோர்புற்று பாதியில் விட்டுவிடாதிருந்தால் நிச்சயம் சமநிலை எய்துவீர்கள். நாம் மனப்பூர்வமாக ஒத்துழைத்தால், எந்தப் பாவத்தையும் மேற்கொள்ள தேவன் எப்படி ஒத்தாசை புரிவாரோ அப்படியே இப்பாவத்தையும் மேற்கொள்ள உதவுவார்.

நன்றியோடு வேறொரு புகைப்படம் எடுத்து நாட்குறிப்பேட்டில் ஒட்டுங்கள் (கூடுதல் குறைக்க வேண்டியிருந்தால்).

பள்ளி இறுதியாண்டு முடித்ததும் 16 வயதில்தான் என் எடை கூடுவதைக் கவனித்தேன். எங்கள் குடும்பமே குண்டுதான். பிள்ளைப் பருவத்தில் சாப்பாடு ஏராளம், தாராளம். சற்றுக் கட்டுப்படுத்தியதும் எடை குறைந்தது. ஆனால் குழந்தைப் பேற்றிற்குப் பிறகு, 5'3" உயரத்திற்குச் சகிக்க முடியாத 72 கிலோவானேன். மூட்டு வலியால் முழங்கால் வேதனை. என் கணவரோ பார்வோனின் பசு போல நதியிலுள்ள மீன்களையெல்லாம் தின்று வெளியே வந்து ஒரு கொழுத்த பசுவை விழுங்கின பின்பும் மெலிவாகவே இருப்பார். எனக்குப் பொறாமைதான். இருப்பினும் என் உடலமைப்பை ஒத்துக்கொண்டேன்.

தேவன் என்னைக் கண்டிப்பதை அடிக்கடி உணர்ந்தும் செவிட்டு விரியனைப் போல் செவிசாய்க்க மறுத்தேன். ஒரு நாள் ஒரே நேரத்தில் 12 லட்டுகள் சாப்பிட்டேன். அன்று உடல் முழுவதும் அரிப்பெடுத்தது. சந்தேகப்பட்டு பரிசோதனை செய்ததில் எனக்குச் சர்க்கரை நோய் இருப்பதைக் கண்டறிந்தேன். அழுதேன். அப்பொழுது வயது 28. என் பாவத்தை தேவனிடம் அறிக்கையிட்டேன். சர்க்கரையையும் உணவையும் குறைத்துத் தீவிர உடற்

பயிற்சி செய்து, முழங்கால்களுக்கும் பயிற்சிசெய்து மெலிந்தேன். எட்டு நீண்ட ஆண்டுகளுக்குப் பின் சர்க்கரை நோய் மறைந்தே போனது.

அற்புதத்திற்காகத் தேவனைத் துதித்தேன். வர வரக் கவலையீனமாகி 5 கிலோ கூடினேன். இனிப்பும் பலகாரங்களும் சாப்பிட்டு உடலைக் கரைக்க ஆரோக்கியமான உணவுகளைக் குறைத்தேன். 62ஐத் தொட்டவுடனே எனது இரத்தத்தில் சர்க்கரை குறைந்து, மயக்கம் வந்துவிடும், உடனே உணவுக் கட்டுப்பாட்டை விட்டுவிடுவேன். என் அம்மாவிற்கு அதே பிரச்னை இருந்த தால் அது வம்ச வழியாய் வந்ததோ என்றெண்ணிக் குறைத்துச் சாப்பிடுவதை நிறுத்திவிடவும் எண்ணலானேன்.

கர்த்தரோ என்மேல் கிருபையாயிருந்தார். ஓர் உணவு ஆலோசகரை அணுகினேன். அவர்கள் சர்க்கரை சாப்பிடுவதை அறவே துறப்பது நல்லது. சர்க்கரை உடலில் இன்சுலின் சுரக்கச் செய்யும். இன்சுலின் இரத்தத்திலுள்ள சர்க்கரையை மேலும் குறைக்கும் என்றார்கள். இதை மனதிற்கொண்டு சர்க்கரையை நிறுத்தினேன். தாங்க முடியாதபோது இயற்கை இனிப்புகளான சீனிக்கிழங்கு, தேன், உலர்ந்த பழங்கள் ஏதாவது திட்டமாகச் சாப்பிடுவேன். ஓராண்டு மயக்கம் வருவதும் போவதுமாயிருந்தது. பின்பு ஓர் அற்புதம் நடந்தது. என் எடை 60ஐ எட்டியது.

தன்னடக்கத்தை நோக்கிய இப்பயணத்தில் என் இதயத்தைக் கரையச் செய்தது, நான் விடாமுயற்சி செய்தபோது தேவனே பலவிதங்களில் உதவி செய்து பல பாடங்களையும் கற்பித்ததுவே. உறுதியான தகப்பனைப் போல தேவையான நேரத்தில் பிரம்பைக் கையாடினார். முன்பு என்னைச் சித்ரவதை செய்த மூட்டு வலியோ சர்க்கரை நோயோவின்றி இன்று சுகமாயிருக்கிறேன். பாதியில் சோர்ந்து விட்டுவிடாததற்காக இன்று சந்தோஷப்படுகிறேன். முன்பு பட்டினி கிடப்பேன். இன்று, 53ஆவது வயதில் (1999) மூன்று வேளை திருப்தி யாகச் சாப்பிட்டு 60 கிலோவில் 5 ஆண்டுகளாக இருக்கிறேன்.

இறுதியாக—மெலியத் துவங்க என்றுமே பிந்திப் போகவில்லை. தேவையானவை தீர்மானம், கட்டுப்பாடு, மனஉறுதி. தேவனை நம்பி உங்களை இப்பரீட்சைக்கு உட்படுத்தினால் இனிய இளைத்த ஆண்டை அனுபவிப்பீர்கள்! நல்வாழ்த்துக்கள்!

காட்டிற்குள் சிகிச்சை

1992இல் நானும் என் கணவரும் ஒரிசா மாநிலக் காடுகளுக்குள்ளுள்ள நமது மையமொன்றில் மூன்று மாதங்கள் தங்கியிருக்கத் தீர்மானித்தோம். அங்குள்ள மிஷனரிகள் நோயாளிகளுக்கு மருந்து கொடுத்துதவிக் கொண்டிருந்தனர். நான் அங்கிருக்கும்வரை இப்பொறுப்பை ஏற்றுக்கொள்ளத் தீர்மானித்தேன்.

சங்கார தூதன்

அறுபதுக்கும் அதிகமானோர் அக்கிராமத்திலும் சுற்றிலும் முந்திய ஆண்டு சீதபேதியினால் மரித்திருந்தனர். இவ்வாண்டிலும் துவங்கிவிட்டது என்று மிஷனரிகள் கூறியபோது எனக்கு அடிவயிற்றில் புளியைக் கரைத்தது போலிருந்தது. இந்த நூற்றாண்டிலும் இப்படியா? மக்களோடு நெருங்கிய தொடர்புண்டாக்க மிஷனரிகளும், நானும் சென்று கிராமப்பள்ளி மாணவர் யாவருக்கும் இலவச மருத்துவ உதவி செய்தோம்.

பஸ் ஸ்டாப் கிளினிக்

கிராமத்தைச் சுற்றி வந்து பஸ் ஸ்டாப்பிலுள்ள நிழற்கூடத்தைத் தெரிந்தெடுத்தோம். அங்கிருந்த ஆடுகளைத் துரத்தி தரையைக் கழுவி டெட்டால் தெளித்தோம். மருத்துவர் கோட்டைப் போட்டுக்கொண்டேன்; ஸ்டெதெஸ் கோப்பை எடுத்துக்கொண்டேன். மருந்துகளை அடுக்கினோம். அப்படியும் மக்கள் சந்தேகத்தோடு எட்டித்தான் நின்றனர். "வாருங்கள் மருந்து கொடுக்கிறோம்" என்றபின் ஒவ்வொருவராக தயங்கித் தயங்கி நெருங்கினர். அவர்களை அன்புடன் பரிசோதித்து சிகிச்சை செய்தோம். அவர்களுடன் பேசி, சிரித்து, குழந்தைகளைத் தூக்கி விளையாடினோம். முதல் நாள் 44 நோயாளிகள்!

மறுநாள் சந்தை. சுற்றிலுமுள்ள ஆதிவாசிகள் தங்கள் விளைச்சல்களை விற்று தேவைகளை வாங்கிச் செல்வர். காட்டிற்குள் அலைபோல் செய்தி பரவியது. "கிறிஸ்தவர்கள் தர்மம் செய்ய வந்திருக்கின்றனர். இந்த மருத்துவர் நமது மொழி பேசுகிறார். நம்மைத் தொடக்கூடச் செய்கிறார்!" என் உள்ளம் அசைந்தது.

எண்ணிக்கை உயர்ந்தது. கையிலோ போதுமான மருந்துகளில்லை. அவசர மாய் ஆளனுப்பி 45 கி.மீ. தொலைவிலுள்ள ஊரிலிருந்து ரூபாய் 5000/-க்கு மருந்துகள் வாங்கினோம். சிகிச்சாலயத்தை 12'x4' அளவான நமது மையத் தின் மண்தரை முற்றத்திற்கு நகற்றினோம். பழைய பாய் ஒன்றே பரிசோதனை மேசை !

நீங்கள் ஹரிஜனா ?

ஒரு பெண்மணி ஒருநாள் "நீங்கள் ஹரிஜனா ?" என வினவினாள். "நாம் எல்லாருமே ஹரிஜன்தானே. நாம் எல்லாருமே கடவுளுக்கு சொந்த மானவர்கள்தான்" என்று அவள் தோளில் கைவைத்தேன். "முதன் முறையாக நீங்கள் என்னைப் பார்த்து புன்னகை பூத்தபோது என் இருதயம் மலர்ந்தது" என்றாள். அதற்குப் பிறகுதான் அவர்கள் தீண்டப்படாதவர்கள் என்றும் சில மருத்துவரும்கூட அவர்களைத் தொடாமலே மருந்து கொடுத்து அனுப்பி விடுவர் என்றும் கேள்விப்பட்டேன். நம்பற்கரியதாயிருந்தது. ஜாதித் தோலை உரித்தெறியாத படிப்பும் பட்டமும் இருந்தென்ன ?

சூரியக் கடிகாரம்

நோயாளிகளிடம் மூன்று மணிக்கு வாருங்கள் என்று சொல்லியும் பயனில்லை. ஒரு நாள் ஒரு பெண் தன் விரலை மாலை மூன்று மணிக்கு சூரியனிருக்கும் இடத்தைச் சுட்டிக் காட்டித் தலையை அசைத்தாள். அப் பொழுதுதான் புரிந்துகொண்டேன் இவர்களுக்கு கடிகாரம் கிடையாதென்று! அன்றிலிருந்து நானும் விரலைச் சூரிய திசைக்கு நேரே காட்டி நேரம் சொல்லக் கற்றுக்கொண்டேன். நாட்காட்டியும் கிடையாது. யாருக்கும் தங்கள் வயது தெரியாது. சந்தை நாளிலிருந்து ஏழு நாட்கள் எண்ணி மறு சந்தைக்கு வருவார்கள். "எத்தனை நாள் இக்கஷ்டம் ?" என்று கேட்டால், "மூன்று சந்தை" என்பார்கள். (அதாவது, மூன்று வாரங்கள்). நெடுநாள் நோய்க்கு "மூன்று லுங்கி" என்பார்கள் (ஒரு லுங்கியை சுமார் ஆறு மாதம் அணிவர். ஆகவே மூன்று லுங்கி ஒன்றரை ஆண்டைக் குறிக்கும்). அக்காட்டுப் பகுதி 18ஆம் நூற்றாண்டிலேயே உறைந்து போய்விட்டது போலிருந்தது.

வயர்லஸ் மின்னோட்டம்

செலவைக் குறித்துக் கவலைப்படத் துவங்கினேன். ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தினால் இவ்வளவு முடியுமா? இப்படிச் சிந்தித்துக்கொண்டிருக்கையில் அரபு நாடுகளிலிருந்து இந்திய நண்பரொருவர், "சில மாதங்களுக்குமுன் ஒரிசாவின் மருத்துவத் தேவைகளைக் குறித்து நீங்கள் எழுதியிருந்ததை வாசித்தேன். இந்த ரூ. 5000/-ஐ ஏற்றுக் கொள்ளுங்கள்" என எழுதியிருந்தார். கர்த்தர் என்னைத் தொடரச் சொல்லுகிறார் எனப் புரிந்துகொண்டேன். என் உள்ளம் நெகிழ்ந்தது. கூப்பிடுமுன்பே பதிலளிப்பவர் நம் தேவன் (ஏசா 65:24). உலகெங்குமுள்ள தேவப் பிள்ளைகளிடையே வயர்லஸ் இணைப்பு இருப்பதாக உணர்ந்தேன். அதிசயிக்கத்தக்க வகையில் மாதிரி மருந்துகள் வந்து குவியத் துவங்கின. மருத்துவப் பணிக்கு உதவுவதாக ஒரு சகோதரன் எழுதியிருந்தது நினைவுக்கு வந்தது. எழுதினவுடன் இரண்டுமுறை ரூ. 20,000/- அனுப்பி வைத்தார். எங்கள் இருதயம் நன்றியால் நிரம்பி வழிந்தோடியது. தேவ மக்கள் கொடுக்கும்வரை இந்த ஏழை ஆதிவாசிகளுக்கு இலவசமாகவே சிகிச்சை அளிக்கத் தீர்மானித்தோம்.

எந்நேரமும் வேலை நேரம்

எண்ணிக்கை தினமும் 60 முதல் 100 ஆனது. காலை 10 முதல் மாலை 6 வரை பார்க்க விழைந்தேன். ஒரு நாள் காலை ஏழுக்கே வந்துவிட்ட ஒருவனைப் பார்த்துச் சலித்துக்கொண்டேன், "ஏனப்பா?" என்று. "எங்கள் கிராமத்திலிருந்து வரும் ஒரே பஸ் 7 மணிக்குத்தான், என்னால் நடக்க முடியாது" என்றான். "என்னானது?" "சீதபேதி." "எத்தனை நாட்களாக?" "நான்கு மாதங்களாக." "தினமும் எத்தனை நேரம் போகிறாய்?" "கணக்கே கிடையாது."

அத்துடன் துண்டை விரித்துச் சாய்ந்துவிட்டான். உயிர் தொடுக்கிக் கொண்டிருந்த அந்தச் சுக்கான உடலைப் பார்த்தேன். பரிசோதிக்க அருகே மணலில் முழந்தாளிட்டேன். உயிர்களைக் காப்பாற்றுவதைத் தவிர அங்கு எனக்கு வேறே ஜோலியில்லை என அவ்விநாடியே தீர்மானித்தேன். இதய நோயுற்றோரும் ஜன்னியுள்ளவரும் 12 கி.மீ. அல்லது கூடுதலாகவும் நடந்து வந்தனர். காட்டினுள் வசித்த ஆதிவாசிகள் பிள்ளைகளைத் தோளில் சுமந்து கொண்டு குன்றுகளையும் ஆறுகளையும் கடந்து வெளியே தலைகாட்டத் துவங்கினர். தூரத்தினால் மூன்று முதல் ஏழு நாட்களுக்கு மருந்துகள் கொடுத்தனுப்ப வேண்டியிருந்தது.

ஐயோ பரிதாபம்!

பக்கத்தில் மாதிரி மருந்துகள் பெட்டியோடு நான் குறு நாற்காலியில் உட்கார்ந்து பரிசோதித்துக் கொண்டிருக்கையில் சிலவேளை நோயாளிகள்

சூழ்ந்துகொள்வர். திடீரென்று சலனமுண்டாகும். ஒருவன் முணங்கிக் கொண்டே எல்லாரையும் தள்ளிவிட்டு முன்னே வருவான். ஏதோ அவசரக் கேஸ் என்று நினைத்தால் அவன் எங்கள் காலில் விழுந்து கதறுவான். "எங்களைக் காப்பாற்றுங்கள், எங்களைக் காப்பாற்றுங்கள்!" அவனது தோளைப் பிடித்து தூக்கி நிறுத்தி, அக்கூட்டத்திற்கு, உயிருள்ள தேவனைக் குறித்துச் சொல்லுவோம். சிலர் பரிசோதனை செய்யும்பொழுதே உடைந்து அழுவர். யாராவது வந்து 4 மலேரியா மாத்திரை கொடுத்து தங்களது மாதாந்திரக் குளிர்க் காய்ச்சலுக்கு முற்றுப்புள்ளி வைக்க ஆண்டுகளாக காத்திருந்தவர்கள் இவர்கள்.

யாரைப் பார்த்தாலும் மலேரியா. இருமாதக் குழந்தைக்கும் தலைபெரிய ஈரல். ஒன்பது மாதக் குழந்தை குளிர்க்காய்ச்சலால் நடுங்கும். ஏறத்தாழ எல்லாருக்குமே பழுக்கக் காய்ச்சின கம்பியினால் வயிற்றில் கொடுமையான சூடுகள். மக்கள் இரவில் தூங்குவதில்லை. சொறி சிரங்கின் வாதையினால் சொரிந்துகொண்டே கிடப்பர். காசநோயும் தொழுநோயும் ஏராளம். பலருக்கு வயிற்றில் நாடாப்புழு. சளியிலும் மலத்திலும் இரத்தம், வீங்கிய ஈரல், உடலெல்லாம் அரிப்போடு வருபவனது வியாதி என்ன? மருத்துவப் புதிரல்ல. காசநோய், சீதபேதி, மலேரியா, சொறி சிரங்கு நான்கும் ஒரே உடலில்! ஆபத்தானதில் துவங்கி ஒவ்வொன்றாய்ச் சிகிச்சை செய்யவேண்டியிருந்தது.

வீட்டிலிருக்கும் கிழவிக்கும் அல்லது பிள்ளைக்கும் மருந்து கேட்டு வருவர். நோயாளியைப் பார்க்காமலேயே நோயைக் கண்டுபிடித்து சிகிச்சை செய்வதல்லாமல் வேறென்ன செய்ய? உங்கள் பாட்டிக்கு மலேரியா அல்லது சீதபேதி என்றால் சிறுத்தைகளும் கரடிகளும் நிறைந்த காடுகள் வழியே 18 கி.மீ. நடந்து செல்ல எதிர்பார்ப்பீர்களா?

கர்த்தாவே, காப்பாற்றும்!

சூதாட வேண்டியிருந்தது. சிசுக்களின் எடையைக் கண்ணால் கணித்து 10 மில்லி கிராம் அல்லது 25 மில்லி கிராம் மாத்திரைகளை நுணுக்கி ஒரு மில்லி கிராம் கொடுக்க வேண்டியிருந்தது. இவற்றையும் கடும் நோயாளிகளின் பெயர்களையும் சக மிஷனரிகளிடம் பகிர்ந்து தேவனிடம் மன்றாடுவோம். மறுமுறை அவர்களை உயிரோடு சுகமாய்ப் பார்க்கையில் களிகூருவோம். பணம் வந்தவுடன் எடை பார்க்கும் கருவி ஒன்று வாங்கி நோயாளிகள் முன்னில் தேவனுக்கு அர்ப்பணித்து ஜெபித்தோம். தங்கள் மருத்துவமனைக்கு மெஷின் வந்தது நோயாளிகளுக்குப் பெரும் மகிழ்ச்சி.

போதனை

ஆதிவாசிகள் அறியாமையிருந்தாலும் அறிவாளிகள். படங்கள் காட்டி, கிருமிகள், போஷாக்கு, சீதபேதி, சூடுபோடுதல் போன்றவற்றைக் குறித்து

கற்பிப்போம். கவனமாய் *"டீக் கொதா, டீக் கொதா"* என்று தலையை ஆட்டி ஆட்டிக் கேட்பர் (சரிதான், நீங்கள் சொல்வது சரிதான்).

சுத்தமான பாவம்

பால்காரன் சிகிச்சைக்கு வந்தபோது "சீதபேதி அதிகமாக இருக்கிறது. பாலில் குளத்து நீர் ஊற்றாதே; கிணற்றுத் தண்ணீர் ஊற்று" என்றோம். சீதபேதிக்கும் குளத்திற்கும் சம்பந்தம் விளங்கியதும் அவனுக்கு ஒரே ஆச்சரியம்! சந்தோஷமாய் ஒத்துக்கொண்டு சென்றான்.

பாபேல்

ஆதிவாசி இனத்தவர் ஒவ்வொருவரும் வெவ்வேறு விதமாய்ப் பேசுவர். வலி என்பதற்கு *'பொதொ'* என்றொருவர், *'துக்'* என்று வேறோருவர், *'தொரத்'* என்று மற்றொருவர் சொல்வர். *"ஹெல்லானை"* என்றால் 'இல்லை' என்பது ஒருவர் மொழி. *"ஹெல்லா நீ"* என்றால் 'இருக்கிறது' என்பது இன்னொருவர் மொழி. பயிலுமுன் புரண்டுவிட்டேன். ஒரு நோயாளியிடம் நிறைய, *"சாபோன்"* சாப்பிட வேண்டும் என்றேன். மற்றொரு மிஷனரி குலுங்கிக்கொண்டே *"சாபோன்"* (சோப்பு) அல்ல *"சாகோ"* (கீரை) என்றார்.

குணமாக்கும் செட்டைகள்

ஒரு நாள் மூவர் 18 கி.மீ. நடந்து வந்து நெருப்பில் விழுந்துவிட்ட 9 மாதக் குழந்தைக்காக மருந்து கேட்டனர். பாதி முகமும், சிறிது நெஞ்சும், வயிறும் சுட்டுவிட்டதாம். மருந்து கொடுத்து அனுப்பினோம். இரண்டு நாள் கழித்துப் பிள்ளையையும் அக்கிராமத்திலிருந்து பத்துப் பேரையும் சிகிச்சைக் காக அழைத்து வந்தனர். குழந்தை தாயின் மடியில் அழகாய் விளையாடிக் கொண்டிருந்தது. கரிந்துபோன கண்ணிமைகள், மூக்கு, கன்னம் சுத்தமாகக் காய்ந்திருந்தன.

பல நாள் உதிரப் போக்கிற்காக ஒரு பெண் வந்தாள். "அதற்கு மருந்து இல்லை, நான் எழுதிக் கொடுக்கிறேன் வாங்கிக்கொள்" என்றது அவளுக்கு வருத்தம். "எங்கள் கிராமத்திலிருந்து ஒருத்தி வந்து இதற்காக மருந்து சாப்பிட்டு சுகமாகிவிட்டதை கேள்விப்பட்டல்லவா வந்தேன்" என்றாள். சக மிஷனரியைப் பார்த்தேன். அவள் என்னைப் பார்த்துக் கண்ணடித்தாள். காதிற்குள் "வைட்டமின்" மாத்திரை எனக் கிசுகிசுத்தாள். மாத்திரையை மடித்துக் கொடுத்து, "இயேசுவின் பெயரைச் சொல்லிச் சாப்பிடு" என்று அனுப்பினாள். "இயேசு பிரபு, இயேசு பிரபு" என்று சொல்லி நோயாளிகள் மாத்திரைகளை விழுங்குவர். இரண்டு மிஷனரிகள் ஆதிவாசி மாணவர்

விடுதிக்குச் சென்று எல்லாருக்கும் சொறி சிரங்கிற்குச் சிகிச்சை அளித்தனர். இப்போது பல விடுதிகளிலிருந்து சிகிச்சைக்கு வருகின்றனர். மக்கள் சொறியின்றி இரவில் தூங்கினர். எங்களைப் பார்த்தால் புன்னகை பூத்தனர். திடீரென்று ஒருவர் ஓடிவருவார், எங்கள் வலது கையைப் பிடித்துத் தூக்கி கீழே விடுவார் (அவர்களது கைக்குலுக்கல்). அவ்வாண்டு ஒருவராவது சீதபேதியில் மரித்ததை நாங்கள் காணவில்லை. தேவனுக்கே மகிமை. தேவனே வனத்திற்கு மேலே தமது குணமாக்கும் செட்டைகளை அடித்துக்கொண்டிருந்தது போலிருந்தது. இரவில் உட்கார்ந்து குறுக்கு வலிக்க மாதிரி மருந்துகளைப் பிரித்து, காலம்கடந்த மருந்துகளைப் புதைப்பதற்குள் போதும் போதுமென்றாகிவிடும்.

தமாஷ்!

நோயாளிகள் எண்ணிக்கை நூறைத் தாண்டிவிட்டால், 'சென்சுரி' எனக் குரல் கொடுப்பார் ஒருவர். மொழிப் பயிலாத புது மிஷனரி எடைகாட்டும் கருவியைச் சுட்டிக் காட்டியதும் நோயாளி அதில் உட்கார்ந்து விடுவார். சிலர் நாங்கள் ஏறிக் காட்டினாலொழிய பயந்து ஏற மறுப்பர். ஒருத்தி அதைத் தூக்கிக்கொண்டு வந்தாள். சில நோயாளிகளைப் பரிசோதிக்க உட்காரச் சொன்னால் அவரது நாற்காலி அருகே தரையில் குந்த வைப்பர். நாடாப்புழுவும் கீறிப்புழுவும் குடலில் இருந்த ஒரு பெண், "என் வயிற்றில் ஒரு கணவனும் மனைவியும் (நாடாப் புழு) இருந்துகொண்டு குட்டி (கீறிப்புழு) போடுகிறார்கள்" என்றாள். நோயாளியை இன்று எப்படி இருக்கிறாய் என்றால், "50 பைசா கம்மி" என்பார்கள் (50 சதவீதம் நன்றாகி விட்டதாம்!)

நன்றி!

மாதிரி மருந்துகள் கொடுத்தோர், சேகரித்தோர், அனுப்பினோர் அனைவருக்கும் எங்கள் நன்றி. அவர்கள் ஜெபங்களும் பணமும் மருந்துகளும் அநேக உயிர்களைக் காப்பாற்றியிருக்கின்றன.

இதினாலென்ன?

சுகவீனரைச் சுகப்படுத்தி நரகத்திற்கு அனுப்புகிறோமா? இப்பொழுது மிஷனரிகள் கிராமங்களில் புன்முறுவலோடு ஏற்றுக்கொள்ளப்படுகின்றனர். அவர்கள் சொல்வதை மக்கள் ஆவலோடு கேட்கின்றனர். மிஷனரிகள் கிராமங்களுக்கும் சில மருந்துகளை எடுத்துச் செல்கின்றனர். ஒதுக்கப்பட்ட நமது ஆதிவாசி விசுவாசிகள் இப்பொழுது தலை நிமிர்ந்து நடக்கின்றனர். மிஷனரிகளின் வியர்வைகளுக்கும் பாடுகளுக்கும் மருத்துவப்பணி கிரியா வூக்கி போன்றது.

அவ்விடத்தைவிடும் நாள் நெருங்கியது. ஏற்கனவே அங்கே வேர்விடத் துவங்கியிருந்த என் இதயத்தைப் பிடுங்கி எடுக்க வேண்டியதாயிற்று. அவ்வேளையில் மருத்துவப் படிப்பை முடித்திருந்த தம்பி ஜெய்சங்கரை கடவுள் அனுப்பி வைத்தார். கூடுதல் கிருபை பெற்றவர். அவர் அங்கேயே கை வைத்து ஜெபிக்க சிலர் அற்புத சுகம் பெற்றனர். விடுமுறையன்று கிராமங் களுக்குச் சென்று ஊழியம் செய்வார். உள்ளத்தில் எனக்குப் பொறாமை தோன்றியிருந்தால் அதை வெளியே "ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம்" என்று சொல்லி மறைத்துக்கொண்டேன். ஒரு நாள் ஒரு நோயாளி தன் மருந்தை என்னிடம் காண்பித்தபோது, பெரிய டாக்டர் கொடுத்தார் என்றார். புரிந்து கொண்டேன். கர்த்தர், இடத்தைக் காலி செய் என்கிறாரென்று! கர்த்தரது வேலைக்கு நான் இன்றியமையாதவளல்ல என உணர்ந்துகொண்டேன். தலை வணங்கி தொழுது கொண்டேன். இதற்காகத்தானே ஜெபித்துக்கொண் டிருந்தேன்!

நீங்கள் மருத்துவரானால் இரண்டு மாதங்களாவது மிஷனரிப் பணித் தளமொன்றில் பணியாற்றினால் மக்களைக் காப்பாற்றலாம், மிஷனரிகளின் சேவையைத் திடப்படுத்தலாம்.

ஒருமுறை ஒருவரைப் பரிசோதித்துக்கொண்டிருக்கையில் கையில் சொட்டு விழுந்தது. நிமிர்ந்து பார்த்தேன். அவரது கண்ணீர் சொட்டிக்கொண்டி ருந்தது. என் கரத்தில் அது காய்ந்துவிட்டது. ஆனால் பரிதாப நிலையிலுள்ள இந்த ஆதிவாசியினருக்கு எங்களால் இயன்றதையெல்லாம் செய்து அவர்களது உடல்களையும் ஆத்துமாக்களையும் மீட்கும்வரை அக்கண்ணீர்த் துளி என் இதயத்தில் ஈரமாகவே இருக்கும்.

ஏழைகளை நேசிக்க 50 வழிகள்

1. ஏழைகளைப் பார்த்துப் புன்முறுவல் பூக்கக் கற்றுக்கொள்ளுங்கள். அன்போடும் மரியாதையோடும் அவர்களிடம் பேசுங்கள்.
2. அவர்களது பெயரைக் கேட்டு அவர்கள் குடும்பம் மற்றும் இல்லத்தைப் பற்றி விசாரியுங்கள். அவர்கள் தங்குமிடத்திற்கு விஜயம் செய்யுங்கள்.
3. பயணத்தின்போது கொடுக்க ஏழைகளுக்காகக் கூடுதல் ஒன்றிரண்டு சாப்பாட்டுப் பொட்டலங்களை எடுத்துக்கொள்ளுங்கள்.
4. சொந்தக் காரில் பயணம் செய்யும்போது சில பழைய, புதிய ஆடை களைக் கொண்டுசெல்லுங்கள். அனேகமாக வழியில் சில ஏழைகளைச் சந்திப்பீர்கள்.
5. உதவியற்றோருக்கு முகமலர்ச்சியுடன் கடன் கொடுங்கள்.
6. விதவைகள், பெண்கள், முதியவர், பெண் குழந்தைகள் போன்றோ ருக்கான அரசாங்கச் சலுகைகள் மற்றும் வங்கிக் கடன்களை விசாரித் தறிந்து ஏழைகளுக்கு அவை கிடைக்கச் செய்யுங்கள்.
7. தொழுநோயாளர், முதியோர், அநாதைகள், மனவளர்ச்சி குறைந்தோர், ஊனமுற்றோர், ஊமை, செவிடர் மற்றும் குருடர் இல்லங்களைக் குறித்து விவரங்கள் சேகரித்து ஏழைகளை அங்கு சேர்த்துவிடுங்கள். இப்படிப்பட்ட சில இல்லங்களுக்குக் கிரமமாகச் சென்று உதவி செய்யுங்கள்.
8. ஏழை மாணவர் படிப்பிற்குக் கல்விக் கட்டணம் கொடுத்துதவுங்கள்.
9. ஏழை மாணவருக்கு இலவச ட்யூஷன் எடுங்கள். கல்வியறிவற்றோ ருக்கு எழுதப்படிக்கக் கற்பியுங்கள். இளைஞர் முதியோருக்குங்கூட சேரிகளில் கிரமமான வகுப்புகள் துவங்கலாம்.
10. பன்னிரண்டு வயதுக்குட்பட்ட ஏழைப் பிள்ளைகளைத் தத்தெடுத்து கடவுளுக்காக வளர்க்கலாம். பிள்ளைகள் உடையவரும் தத்தெடுக்கத் தடையில்லை !

11. திக்கற்றோருக்கு ஒரு கருணை இல்லம் நடத்துங்கள்.

12. கல்கத்தாவிலுள்ள அன்னை தெரசாவின் கருணை இல்லத்தைப் பார்த்து வாருங்கள். அவர்களது மிஷனரிகளின் இல்லம் அண்மையில் எங்குள்ளதோ அங்கே சென்று கூடிய உதவி வாக்களியுங்கள்.

13. அரசு மருத்துவமனைகளுக்குச் சென்று நோயாளிகளைச் சந்தியுங்கள். அவர்கள் சரியான சிகிச்சை பெறுகிறார்களா என்று பாருங்கள். இல்லை யேல் மருத்துவர்களைச் சந்தித்து ஆவன செய்யுங்கள். குழந்தைகள் பிரிவிலுள்ள மிகச் சுகவீனமான குழந்தைகளுக்கு விளையாட்டுச் சாமான்கள் கொடுங்கள்.

14. ஏழைகளைச் சிகிச்சைக்கு மருத்துவர்களிடம் கூட்டிச் செல்லுங்கள்.

15. விதவைகள் மற்றும் ஏழைப் பெண்களுக்கு விவாகம் செய்து வையுங்கள்.

16. உங்கள் அண்மையிலுள்ள வறிய குடும்பமொன்றைத் தெரிந்துகொண்டு அவர்கள் வாழ்வை முன்னேற்றுங்கள்.

17. எளியவரின் உரிமைகள் மற்றும் வழக்குகளுக்காய் வாதாடுங்கள். எடுத்துக்காட்டாக, அவர்கள் நிலம் அபகரிக்கப்படும்போது தலை யிடுங்கள்.

18. பிச்சைக்காரருக்காய் ஆண்டொருமுறையாவது ஒரு நற்செய்திக் கூட்டம் நடத்தி நல்லதொரு உணவளியுங்கள்.

19. உங்கள் பிறந்தநாள், திருமண நாளன்று ஏழைகளை அழைத்து உணவளியுங்கள்.

20. நிறைய பலகாரங்கள் செய்து அல்லது வாங்கி பண்டிகைக் காலங்களில் வீட்டிற்கு வரும் ஏழைகளுக்குக் கொடுங்கள்.

21. ஆலயத்திற்கு வெளியே தருமம் வாங்கக் காத்து உட்கார்ந்திருப் போருக்கு ஒரு சுருக்கமான ஞாயிறு ஆராதனை நடத்துங்கள்.

22. எளிய குடும்பம் ஒன்றை எங்காவது விடுமுறைக்கு அழைத்துச் செல்லுங்கள்.

23. தோட்டத்தில் விளையும் சிலவற்றை ஏழை எளியவருக்காய்ப் பிரித்து வையுங்கள்.

24. பரண்கள், பெட்டிகள், அலமாரிகள், அடுக்குத் தட்டுகளைச் சுத்தம் செய்து ஓராண்டிற்கு மேலாகப் பயன்படுத்தாத பொருட்களைக் கொடுத்து விடுங்கள்.

25. சேரிகளில் கிறிஸ்து ஜெயந்தி பாடல்களைப் பாடிக்கொண்டு சென்று தள்ளப்பட்டோருக்கு வாழ்த்துதல் அட்டைகளும் இனிப்பும் கொடுத்து வாழ்த்துங்கள்.

26. குட்டிக் குட்டி விளையாட்டுச் சாமான்கள், பலூன்கள் போன்றவற்றை மொத்த விற்பனைக் கடையில் வாங்கி வைத்துக்கொண்டால் ஏழைச் சிறுவர் சிறுமியர் கண்ணில்படும்போது கொடுத்து மகிழ்விக்கலாம்.

27. பணக்காரருக்கு வெகுமதிகளைக் கொடுத்து அவர்களிடமிருந்து வெகுமதிகளை வாங்கிக்கொள்ளும் பழக்கத்தை நிறுத்தி அப் பணத்தை ஏழைகளுக்குத் திருப்புங்கள்.

28. சேரிவாழ் மக்களுக்குக் கழிவறைகள் கட்டிக் கொடுங்கள்.

29. உங்கள் வருமானம் மற்றும் சொத்தில் பத்தில் ஒன்றை ஏழைகளுக்காய் ஒதுக்கி வையுங்கள்.

30. ஏழைகளுக்குத் தொண்டு செய்யும் ஒரு நிறுவனத்திற்கு உங்கள் பணத்திலும் சொத்திலும் ஒரு பகுதி உயில் எழுதி வையுங்கள்.

31. கைக்கு வரும் சில்லரைக்காசு யாவற்றையும் வறியவருக்கென்று ஒதுக்கி வையுங்கள்.

32. அதிகபட்சம் 10 நல்ல ஆடைகளும் 10 சாதா உடைகளும் வைத்துக் கொண்டு மற்றவற்றைத் தேவைப்பட்டோருக்குக் கொடுத்து விடுங்கள்.

33. ஏழை வியாபாரிகளிடம் பேரம் பேசாதீர்கள்.

34. திருமண அன்பளிப்புகளில் ஒரே பொருள் ஒன்றிற்கும் அதிகமாக வந்தால் அவற்றைக் கடைகளில் மாற்றாமல் பாவப்பட்டவருக்குக் கொடுங்கள். பிள்ளைகளுக்கு, பேரப்பிள்ளைகளுக்கென்று சேமித்து வைக்காதீர்கள்.

35. பிள்ளையின் உடைகளை அடுத்த பிள்ளைக்கெனப் பத்திரப்படுத்தும் பழக்கத்தை விட்டொழியுங்கள். அடுத்த பிள்ளை புதுத்துணிதான் போடட்டுமே!

36. பழைய புத்தகங்களை ஏழைகளுக்கு விநியோகியுங்கள்.

37. இரப்போர் தங்கும் இடங்களில் பாடல் நிகழ்ச்சிகள் நடத்துங்கள்.

38. உணவுப் பொட்டலங்கள் தயாரித்து பிச்சைக்காரர் தங்குமிடங்களில் விநியோகியுங்கள். விருந்து நாட்களில் பிரியாணி போன்றவை மீதமானால் உறவினருக்குக் கொடுத்தனுப்பாமல் ஏழைகளுக்குக் கொடுத்துவிடுங்கள்.

39. தங்க இடமில்லாதோருக்குக் குடிசைகள் கட்டித் தாருங்கள்.

40. எளியோரின் இடிந்த வீடுகளைச் சரிசெய்து உதவுங்கள்.

41. திக்கற்றோரைச் சந்தித்து அவர்கள் வீட்டைச் சுத்தம் செய்து நல்லதொரு உணவு சமைத்துக் கொடுத்து வாருங்கள்.

42. தினந்தோறும் பிச்சைக்காரரைச் சந்திப்பது உங்கள் வேலைக்கு இடையூறானால் ஒவ்வொரு மாதத்தின் முதல் தேதி அல்லது முதல் ஞாயிறு அவர்களை வரப் பழக்குங்கள். அப்பொழுது அவர்களுக்குப் போதித்து, தருமம் கொடுத்து, ஜெபித்து அனுப்பலாம்.

43. எளிமையான வாழ்க்கை முறையைப் பின்பற்றினால் வறியவருக்குக் கூடுதல் செலவழிக்கலாம்.

44. சேரிப் பிள்ளைகளுக்கு விளையாட்டுகள் மற்றும் போட்டிகள் நடத்துங்கள். ஷட்டில் காக், கால் பந்து, கேரம் போர்ட், செஸ் போர்ட் போன்றவை வாங்கிக் கொடுங்கள். ஊஞ்சல் போன்ற சிலவற்றைப் பொருத்திக் கொடுங்கள்.

45. நீங்கள் மருத்துவரானால் ஆதிவாசிக் கிராமங்கள் மற்றும் அவை போன்ற இடங்களில் தங்கி, உங்கள் அறிவையும் பயிற்சியையும் பயன்படுத்தி மக்களை உங்களுக்குத் தெரிந்த வழிகளிலெல்லாம் முன்னேற்றுங்கள்.

46. எளியவரின் வீடுகளுக்கு விஜயம் செய்து அவர்களது நண்பராயிருங்கள். அவர்களது திருமணங்கள், மரணங்கள் மற்றும் பிற வைபவங்களில் கலந்துகொள்ளுங்கள்.

47. பொறுமையாய் எளியவரது அவல நிலையின் சோகக் கதைகளைக் காதுகொடுத்துக் கேட்க நேரமெடுங்கள்.

48. தேய்ந்த செருப்பு மற்றும் கிழிந்த உடைகளைச் செப்பனிட்டுப் பயன் படுத்தாமல் ஏழைகளுக்குக் கொடுத்துவிட்டால் அவர்கள் சில மாதங்கள் அவற்றை அனுபவிக்கலாமே.

49. சாலையோரத்தில் யாரேனும் விழுந்து கிடப்பதைக் கண்டால் நில்லுங்கள். உயிரோடிருக்கிறாரா என்று பாருங்கள். செத்திருந்தால் நல்லடக்கம் செய்ய நகராட்சிக்கு அறிவியுங்கள். உயிருடனிருந்தால் ஆவன செய்து உதவுங்கள்.

50. விருந்தினர் மற்றும் அயலகத்தார் உங்கள் வீட்டிற்குக் கொண்டுவரும் பலகாரங்களை அவசியமாய்த் தின்றுத் தீர்க்கவேண்டுமென்பது கட்டாயமல்ல. பகிர்ந்து தின்றால் பசியாறும் !

ஆசிரியரது பிற நூல்கள்—

- *அவள் தீர்மானங்கள்*
- *உலகில் உத்தமி*
- *குடும்பமே குடும்பம் !*
- *குதூகலக் கிறிஸ்தவம்*
- *சாத்தானுக்கு டாடா*
- *தெபொராளே, விழித்தெழு !*
- *பயனுள்ள பாத்திரம்*
- *பறக்கும் பாவையர்*
- *12 பொன் மாதங்கள்*
- *வயது பதினாறிருக்கும்*
- *வாலிப உலகம்*

விலைப் பட்டியலுக்கு எழுதுங்கள்.

இப்புத்தகங்கள் ஆங்கிலத்திலும் உண்டு.

Blessing Literature Centre
21/11 West Coovam River Road, Chintadripet,
Chennai 600002, India
Tel: 044-28450411

ஆசீர்வாத இளைஞர் இயக்கம்

எழுப்புதலுக்கும் நற்செய்தி அறிவிப்பிற்கும் அர்ப்பணிக்கப்பட்டு 1971 முதல் இயங்கிவரும், சபைப்பிரிவு பாகுபாடில்லாத ஒரு திருப்பணி

❐

எழுப்புதல் முகாம்கள், திருமறைப் பாடங்கள்,
பயிற்சித் திட்டங்கள் நடத்துதல்.

❐

பள்ளிகள், கல்லூரிகளில் மாணவ மாணவியருக்கு
ஜெபக்குழுக்கள் உருவாக்குதல்.

❐

முழுநேர ஊழியரல்லாத சகோதர சகோதரிகளின்
குழுக்கள் மூலம் கிராமங்கள், குடிசைப் பகுதிகள்,
மருத்துவமனைகள் முதலியவற்றைச் சந்தித்தல்.

❐

300க்கும் மேற்பட்ட முழுநேர மிஷனரிகள் மூலம் அசாம்,
ஆந்திரப் பிரதேசம், இராஜஸ்தான், உத்திரப் பிரதேசம், ஒரிசா, கர்நாடகம்,
குஜராத், கேரளம், மகாராஷ்டிரம், மத்தியப் பிரதேசம், மேற்கு வங்கம்,
தமிழ்நாடு மற்றும் ஜார்கண்ட் ஆகிய மாநிலங்களிலுள்ள
கவனிப்பாரற்ற கிராமங்களிலும் ஆதிவாசிப் பகுதிகளிலும்
சபைகள் நிறுவுதல்.

❐

அசாமி, ஆங்கிலம், இந்தி, ஒரியா, கன்னடம்,
குஜராத்தி, தமிழ், தெலுங்கு, மராத்தி, மலையாளம் ஆகிய மொழிகளில்
"ஆசீர்வாதம்" எனும் பத்திரிகை மற்றும் புத்தகங்கள், ஒலி-ஒளி நாடாக்கள்
வெளியிடுதல்.

❐

மருத்துவப்பணி, நிவாரணப்பணி மற்றும் எழுத்தறிவு கற்பித்தல் மூலம்
எளியோர், ஒதுக்கப்பட்டோருக்கு உதவுதல்.

ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்! ஆதரியுங்கள்!

ஆசீர்வாத இளைஞர் இயக்கம்
சர்ச் காலனி, வேலூர் 632 006
தொலைபேசி: 0416-2242943, 2248943
<bym@sancharnet.in>
www.BlessingYouthMission.org

கையால் பறித்த பழங்களைப் போல கடவுள் நம்மைப் பொறுக்கி எடுத்துள்ளார். நாமும் இசைந்து இறையரசின் வாழ்விற்குக் கையொப்பமிட்டுள்ளோம். இறையரசு வாழ்வு சமதளமல்ல. அது பள்ளமும் மேடும், தோல்வியும் வெற்றியும், இருளும் வெயிலும், புயலும் வானவில்லும், கண்ணீரும் சிரிப்பும் கலந்தது. என்னதான் வந்தாலும் வாழ்க்கையை வாழ்ந்துகொண்டே இருக்கத்தான் வேண்டும். கடின காலத்தில் விட்டுவிடாமல் நாமும் வாழ்க்கையைத் தொடரத்தான் வேண்டும். அதுவே ஒருவனை *முன்னேறும் கிறிஸ்தவனாக* ஓட்டத்தை முடிக்கச் செய்யும். நம்மில் தொடங்கின நற்செயலை முடிக்கும்வரை கடவுள் நம்மைத் தூண்டில் முள்ளிலிருந்து எடுத்துவிடுவதில்லை. தினமும் நம்மை முன்னேற்றவே விரும்புகிறார். தேவனோடு ஒத்துழைத்து அந்த முடிவை அடைய இக்கட்டுரைத் தொகுப்பு நடைமுறை ஆலோசனை அளிக்கும்.

இப்புத்தக ஆசிரியர் ஒரு குழந்தைநல மருத்துவர். இவரும் பொறியியலரான இவாது கணவரும் 1975 இலிருந்து முழுநேரக் கிறிஸ்தவ சேவையில் ஈடுபட்டுள்ளனர். இருவரும் பேச்சாளர்களாக, எழுத்தாளர்களாக, மிஷனரிகளாக ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தில் உள்ளனர். இவர்களது மகள் இவாஞ்சலின் ஆலோசக மிஷனரியாகப் பணிபுரிகிறாள்.